Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

பிரேம் அச்சகம்
127, KKS Road
யாழ்ப்பாணம்

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 22 திங்கட்கிழமை (05.05.2014) பக்கங்கள் 20 ஓசை - 216

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் அச்சுவேலியில் வெட்டிக் கொலை


உயிரிழந்தவர்கள்



கைப்பற்றப்பட்ட ஆட்டோ

## மேலும் இருவர் படுகாயம், 2 சந்தேகநபர்கள் கைது

(அச்சுவேலி)

அச்சுவேலி, கதிரிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நள்ளிரவு ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் திருமதி நித்தியானந்தன் அருள்நாயகி (வயது - 52), செல்வன் நித்தியானந்தன் சுபாங்கன் (வயது - 19), திருமதி யசோதரன் மதுசா (வயது - 27) என்பவர்களே கொல்லப்பட்டவர்களாவர். இந்தச் சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தாயாரான

19 ஆம் பக்கம் பார்க்க

## உரும்பிராயில் விபத்து; இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயப் பகுதியில் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர், உயிரிழந்ததுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய உரும்பிராயைச் சேர்ந்த ராஜ்கரன் (வயது - 19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற அதே வேளை, இப்பகுதியைச் சேர்ந்த த.ஜிந்துஜன் (வயது - 19) என்ற இளைஞர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகலில் மழை ஓய்ந்த பின்னர் நண்பர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை உழவு இயந்திரத்துடன் விபத்துக்குள்ளானதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## கஞ்சாவுடன் கைது

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் கஞ்சா வைத்திருந்த ஒருவரை யாழ். பொலிஸ் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்கும் பிரிவினர் நேற்று கைதுசெய்துள்ளனர்.

குருநகர், இராஜேந்திரா வீதியைச் சேர்ந்த நபரொருவர் கஞ்சா வைத்திருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய சோதனையிட்ட போது 8 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதுடன், சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

24 வயது நிரம்பிய இந்நபர்

19 ஆம் பக்கம் பார்க்க

## பளை வந்த யாழ். தேவியுடன் பயணிக்க மறுத்த பெட்டிகள்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து நேற்றைய தினம் பளை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த யாழ். தேவி புகையிரதத்திலிருந்து கழன்ற இரண்டு பெட்டிகள் சுமார் 300 மீற்றர் வரையில் தனியாகப் பயணித்ததாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியா, மூன்றுமுறிப்பு பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ரயில் பெட்டிகள் இருந்த பகுதியை நோக்கி மீண்டும் பயணித்த யாழ்.தேவி, அவ்விரு பெட்டிகளையும் இணைத்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்தச் சம்பவத்தினால் எவருக்கும் சேதமேற்படவில்லை என புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இரண்டு நாள் விபத்தில் யாழில் எழுவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த இரு தினங்களில் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் 7 பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கோப்பாய் இராஜவீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - வடி ரக வாகன விபத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த சிவசம்பு சிவரஞ்சன் (வயது - 32) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுப் பகல் 12.30 மணியளவில் கல்வியங்காடு சட்டநாதர் கோவிலுக்கருகில் பருத்தித்துறை வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைச் சேர்ந்த சஞ்சீவ் (வயது - 25), கோமளன் (வயது - 26),

19 ஆம் பக்கம் பார்க்க

## கொடிகாமம் பகுதியில் இளைஞர் மீது வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்று முன்தினம் இரவு 12 பேர் கொண்ட கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் கச்சாய் பகுதியினைச் சேர்ந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## முதலமைச்சர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். போதனா வைத்தியசாலையின் இதய சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காகவே முதலமைச்சர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இஸ்லாமிய தீவிரவாதிகள் இலங்கையில் பயிற்சியா?

### முற்றாக மறுக்கிறது அரசு

(கொழும்பு)

இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்காக முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்கள் இலங்கையில் பயிற்சி எடுத்துவருவதாக வெளியாகும் தகவல்களை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளதாவது,

இவ்வாறு வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்பதுடன், இதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடையாது.

இலங்கை ஒரு சிறிய நாடு. எனவே பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக எந்தவொரு அமைப்பும் இங்கு பயிற்சி எடுக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர் அமைப்புக்கள் தடை; அமெரிக்காவும் நிராகரிப்பு

(கொழும்பு)

தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக, 16 புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் 424 தனிநபர்களைத் தடை செய்யும் அரசாங்கத்தின் அறிவிப்பை, அமெரிக்காவும் புறக்கணித்துள்ளதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்தத் தடையை தாம் கருத்தில் கொள்ளப் போவதில்லை என்று கனடா அறிவித்துள்ள நிலையில், இரண்டாவது நாடாக அமெரிக்காவும் இந்தத் தடையைப் புறக்கணித்து புலம்பெயர் தமிழர் குழுக்களுடன் பேச்சு நடத்தியுள்ளது.

இதுகுறித்து சண்டே ரைம்ஸில் வெளியாகியுள்ள தகவல்களின்படி,

கடந்த வியாழக்கிழமை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நடந்த இந்தச் சந்திப்பில், இலங்கை அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்ட பட்டியலில் இடம்பெற்றிருந்த சிலரும் பங்குபற்றியுள்ளனர்.

இவர்கள், தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச்செயலர் நிஷா பிஷ்வாலுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்பை

19 ஆம் பக்கம் பார்க்க

க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான ஊடகக்கற்கை பயிற்சி வினாத்தாள்
உள்ளே

# மணல் கடத்திய நால்வருக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்திய நால்வருக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டம் யாழ்.நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24 ஆம் திகதி யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நால்வரும் கடந்த 28 ஆம் திகதி நீதிமன்றில் யாழ். பொலிஸாரினால் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில், ஒவ்வொருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நால்வருக்கும் இரண்டு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# பொதுக்கூட்டம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்புழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி அதிபர் ம. மணிசேகரம் தலைமையில் கல்லூரியின் துரையப்பாபிள்ளை கேட்போர் கூடத்தில் முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் பழைய மாணவர் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறும், புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் அங்கத்தவர்களையும் அன்றைய தினம் சமுகமளிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (63)

# மக்களுக்கு இலவச மருத்துவ முகாம்; நீரிழிவு சிகிச்சை நிலையம் ஏற்பாடு



(சாவகச்சேரி)

ஐக்கிய இராஜ்ஜியம், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அபிவிருத்தி சபையினால் வைத்தியசாலையில் நிறுவப்பட்ட நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தால் நடத்தப்படும் இலவச மருத்துவ முகாம் மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இம்மருத்துவ முகாமில் நீரிழிவு நோய் குறித்து மக்களுக்கான நீரிழிவுப் பரிசோதகர்கள் சல, இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இலவசமாக கண் பரிசோதனையுடன் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

மாலை வரை இம்மருத்துவ முகாம் சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெற்றது. இதனை இப்பகுதி கிராம சேவகர் வாமதேவன் வழிநடத்தியிருந்தார். இதில் வைத்திய கலாநிதி ஸ்ரீதரன் மற்றும் வைத்தியர் அருளானந்தம் ஆகியோரும் ஆய்வுகூட பரிசோதனையாளர்களும் கலந்து கொண்டு மக்களுக்கான இலவச சேவையினை வழங்கியிருந்தனர். இம்முகாமில் நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (இ)

# துணைத்தூதுவராக நடராஜன்

யாழ்.இந்தியத் துணைத்தூதராகப் பணியாற்றிய வீ.மகாலிங்கம பிரிட்டிஸ் கயானாவுக்கான இந்தியத் தூதுவராக பதவியுயர்வு பெற்றுச் செல்வதையடுத்து யாழ்ப்பாணத்தில் நடராஜன் என்பவர் அவரது இடத்திற்கு நியமனம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் வீ.மகாலிங்கத்திற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்திய பிரிவுபசார விழாவின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார். (137)

# சாதுரியமாக கொள்ளையடித்த பெண் ஊர் மக்களால் மடக்கிப்பிடிப்பு

## நவாலியில் சம்பவம்

நவாலி கிழக்கு சின்னப்பா வீதிப்பகுதியில் ஜோதிடம் பார்க்கப்படும் எனக் கூறி வீட்டிற்குள் நுழைந்து சாதுரியமாக நகைகளை கொள்ளையடித்த பெண் ஊர் மக்களால், மடக்கிப் பிடிக்கப்பட்டார்.


இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பெண் சாத்திரம் பார்க்கப்படும் எனக் கத்திக் கொண்டு சென்ற சமயம் இப்பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்காரர் அப்பெண்ணை அழைத்துள்ளார்.

அப்பெண்ணும் அவ்வீட்டிலுள்ள அனைவருக்கும் ஜோதிடம் பார்த்துவிட்டு கடைசியாக ஒரு பெண்ணுக்கு பார்த்துள்ளார். இச்சமயத்தில் மற்றவர்கள் தமது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும். இச்சமயம் பார்த்து ஜோதிடம் பார்த்த பெண் விபூதியைத் தூவிவிட்டார். இதில் வீட்டுக்கார பெண் மயக்கமடைந்ததையடுத்து அப்பெண்ணின் தங்கச்சங்கிலி, காப்பு என்பவற்றை சாதுரியமாக திருடிக்கொண்டு சென்றுள்ளார்.

இந்நிலையில் வீட்டிலிருந்த மற்றையவர்கள் பெண் மயக்கமடைந்திருப்பதைப் பார்த்த போது நகைகள் களவாடப்பட்டமை தெரியவந்ததுடன், இதனை அவர்கள் அயலவர்களுக்குத் தெரியப்படுத்தினர்.

அயலவர்களும் ஒன்றிணைந்து அப்பெண்ணைத் தேடியபோதே அவர் முச்சக்கர வண்டியில் தப்பிச்செல்ல ஆயத்தமாக இருந்ததாவும், உடனடியாக அவரை மடக்கிப்பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (104)



பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் ஆதார வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி தி.குமணன் இடமாறிச் செல்வதை முன்னிட்டு விருந்துபசார நிகழ்வு வைத்தியசாலை ஊழியர்களால் நேற்று வைத்தியசாலை மண்டபத்தில் பொறுப்பு வைத்திய அதிகாரி செல்வம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வைத்தியர் குமணன் நினைவுப் பரிசு பெறுவதைக் காணலாம். (36)

# பற்றறியை திருடிய சிறுவன் கைது

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடப் பகுதியில் மோட்டார் சைக்கிளின் பற்றறியைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் 17 வயதுச் சிறுவன் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இச்சிறுவனை ஆட்டோவில் ஏற்றிச் சென்ற இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த பிரஸ்தாப சிறுவன் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளின் பற்றறியைத் திருடியதாக கிடைத்த தகவலின் படி இருவரையும் யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இன்று இச்சிறுவன் சிறுவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (இ, 25)


## சிறுவிளம்பரங்கள்

### பணிப்பெண் தேவை

3 பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில்பேசி தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு:

077 4468369. (C/3417)

### டயானா பிளாஸ்ரிக்

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3595)


# புதிய வருடத்திற்கான நிர்வாக சபை தெரிவு

சண்டிலிப்பாய் கல்வளை முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தின் புதிய வருடத்திற்கான நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் தலைவர் க.தம்பாப்பிள்ளை தலைமையில் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மீண்டும் தலைவராக த.தம்பாப்பிள்ளை, செயலாளராக த.ஸ்ரீஸ்கந்தராஜா, பொருளாளராக யோ.பத்மநேசன் ஆகியோரும், 6 பேர் கொண்ட நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (104)

# முத்துமாரி அம்பாளின் கும்பாபிஷேகப் பெருவிழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா இன்று காலை 9.40 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வை. சுப்பிரமணியக் குருக்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைப்பார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (10)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2526 திகதி 03-05-2014

ஆங்கில எழுத்து: W

வெற்றி எண்கள்: 32 36 40 64

போனஸ் இல: 19

ஜக்பொட் பரிசு ரூ.13,961,275/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 197029 | 20/- | 3,940,580/- |
| 2 இல | 14094 | 100/- | 1,409,400/- |
| 3 இல | 291 | 1,000/- | 291,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7901 | 40/- | 316,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 540 | 1,000/- | 540,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,961,275/- | - |
| 1 இல + போனஸ் இல | 9432 | 100/- | 943,200/- |
| 2 இல + போனஸ் இல | 458 | 500/- | 229,000/- |
| 3 இல + போனஸ் இல | 02 | 100,000/- | 200,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 350 | 200/- | 70,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 230132 | | 10,256,220/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.05.07 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 14,499,475/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3674)

# அனுபவங்களுடனும் ஆற்றலுடனும் ஓய்வு பெற்றவர்களே நீங்கள்

## வேலணைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

(வேலணை)

ஓய்வூதியத்தினை பெற்றுள்ள நீங்கள் பல்வேறுபட்ட தொழில்களை கற்று பல்வேறுபட்ட தொழில் நிலையங்களில் பல அனுபவங்களையும் ஆற்றல்களையும் பெற்றுள்ளீர்கள் எனவே உங்களிடமிருந்து நாங்கள் பல அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். என வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலக பகிரங்க அரசாங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வேலணை பிரதேச செயலக பகிர்ங்க அரசாங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவரும் இளைப்பாறிய தலைமை-ஆசிரியருமான போ.நடராசா தலைமையில் நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது.

பலதுறைகளில் பற்பல தொழில்களை ஆற்ற விட்டு அரசாங்கத்தின் சட்டத்திற்குட்பட்ட குறிப்பிட்ட வயதை அடைந்த நீங்கள் கட்டாயத்தின் பேரில் இளைப்பாறியுள்ளீர்கள் அந்த வகையில் இனியாவது உங்களினது மனைவி, பிள்ளைகள் சுற்றம்சூழ இல்லம் போற்ற வாழ்ந்து நாட்டிற்கும் மக்களுக்கும் நல்ல காரியங்களை செய்து பல காலம் சுகமாக வாழ வேண்டும் என்றார்.

அடுத்து வேலணை பிரதேச செயலக கணக்காளர் ப.கஜேந்திரன் யாழ். மாவட்ட அரசாங்க பகிரங்க ஓய்வூதிய சங்கத்தின் தலைவர் வி. ஸ்ரீசக்திவேல், நல்லூர் பிரதேச செயலக பகிரங்க ஓய்வூதிய சங்கத்தின் செயலாளர் செ.சந்திரசேகரம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

இதன்பின் புதிய ஆண்டுக்கான நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக எஸ்.கே.சண்முகலிங்கம், உபதலைவராக பொ.நடராசா செயலாள்ரராக செ.சிவலோகநாதன் உபசெயலா-ளராக க.இராஜேஸ்வரன், இ.சற்குருநாதன் உட்பட இருவர் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. (05)

# ஜேர்மன் தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

மொறட்டுவ ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ்முழுநேரப் பயிற்சிநெறிக்கான அனுமதி 2014 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது 18-22 இற்கு இடைப்பட்ட க.பொ.த.(சா/த) பரீட்சையில் மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றவர்களும் மின்சாரவியல் இலத்திரனியல், இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டு பிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய ரீதியில் சான்றிதழ் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சி இருமொழிகளில் இடம்பெறும். எழுத்துப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும் பரீட்சைக்கட்டணம் 400 ரூபாவாகும்.

இப்பரீட்சையில் எழுத்துப்பரீட்சை, நேர்முகப்பரீட்சை ஆகியன நடைபெறவுள்ளன. எழுத்துப்பரீட்சையாக கணிதம், அடிப்படை தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகிய இரு வினாப் பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை யூன்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் முகாமையாளர், மனித வளமும் நிர்வாகமும், இலங்கை ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிலையம், 582 காலி வீதி, கல்கிசை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும்.

பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம் மோட்டர் இயந்திரவியல் (4 வருடம்) மில்றைற் வார்ப்பியல் (04) காற்று பதனமாக்கல் குளிரூட்டல் (31/2 வலுமின்சாரவியல் 31/2 ஆயுத இயந்திரவியல் (03) உருக்கியிணைத்தல் (03) வாகன உடல் திருத்தலும் வர்ணம் தீட்டுதலும் (03) விண்ணப்பப்படிவங்களை www.egttllk. என்ற இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

# நேர்முகத் தெரிவு

(வேலணை)

வேலணைப் பிரதேச சபையில் அட்டவணை இடப்படாத பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகத்தேர்வு கடந்த வர்ரம் வேலணை-பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நேர்முகத் தெரிவில் சாரதிகள், தொழிலாளர்கள், காரியாலய சக ஊழியர்கள், சுகாதார தொழிலாளி, மின் இணைப்பாளர் ஆகிய பதவிகளுக்கே ஆட்சேர்ப்பதற்கான தெரிவு இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. (05)



அளவெட்டி தெற்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கு நல்லூர் ரோட்டரிக் கழகத்தால் மடிக் கணனி அன்பளிப்புச் செய்யப்பட்டது. மடிக்கணனியை அதிபர் வாமதேவ-னிடம் ஒப்படைப்பதையும், அருகில் தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் நிற்பதையும் காணலாம்.

# என்ன மாதிரிக் காதில பூவைக்கிறாங்களப்பா!




வடமாகாண சபைக்குக் கிடைச்சிருக்கிற ஒரு அருமையான சொத்தெண்டால், அது சீ.வி.கே சிவஞானம் அண்ணைதான்.

சீ.வி.கே அண்ணைக்கு அரசாங்கத்தின்ரை 'சேக்குலர்' (circular) களுக்குள்ளால எப்பிடிப் 'பூந்து' விளையாடிறது எண்டு நல்லாத் தெரியும்.

ஆள் முந்தி அரசாங்க உத்தியோகத்தில உயர் அதிகாரியாக இருக்கேக்க இதை நல்லாப் படிச்சுப் புறமோஷனும் எடுத்தவர் எண்டபடியால, இப்ப அந்த அனுபவமும் அறிவும் மாகாணசபையில நல்லா வேலைசெய்யிது.

மாகாணசபையில அங்கம் வகிக்கிற உறுப்பினர்களுக்கு என்ன நன்மைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளலாம். அவையின்ரை நலன்களை எப்பிடியெல்லாம் பாதுகாக்கலாம் எண்டு சீ.வி.கே அண்ணை ராப்பகலாகச் சிந்திச்சுக்கொண்டேயிருக்கிறார்.

இதில அண்ணைக்கு ஒரு 'ஐடியா' திடீரெண்டு வந்திது.

ஆறுமாதகாலம் தொடர்ச்சியாக மாகாணசபையில உறுப்பினராக இருக்கிறவைக்கு, வரிவிலக்கோட வாகனங்களை வழங்கவேணும் எண்டு ஒரு கோரிக்கையை வைப்பம். இதுக்கு ஜனாதிபதியிட்ட ஒரு விண்ணப்பத்தைக் குடுத்தால் இந்த விசயத்தை வெட்டியாடலாம். அவர் எப்பிடியும் இதை மறுக்க மாட்டார். ஜனாதிபதிக்குப் பிடிக்கக் கூடியமாதிரி இதுக்குக் கொஞ்சக் கிறீமையும் பூசிவிட்டால் அப்பிடியே சிங்கன் இதை விழுங்கிப்போடுவார். பிறகென்ன, காரியம் வெற்றிதான். கைமேல்பலன்தான்.

இப்பிடி ஒரு ஐடியாவைப் போட்ட சீ.வி.கே. அண்ணை பூசிய கிறீமில, 'வடக்கு மாகாணசபை இப்பதான் முதல்முதலாக இயங்கத் தொடங்கியிருக்கு. இதால ஒரு நல்ல அடையாளமாக இந்த மாகாணசபைக்கு நல்லெண்ண அடிப்படையில வாகனங்களை வழங்க வேணும்' எண்டு எழுதியிருக்கிறார்.

சீ.வி.கே அண்ணையின்ரை இந்த 'ஐடியா, சக்ஸஸ்' ஆகியிருக்கெண்டு கேள்வி.

ஆள் கொஞ்சம் நல்ல மனிசன் எண்டபடியால தனக்கு மட்டும் நலன்களையும் நன்மைகளையும் பெறக்கூடியமாதிரிப் பார்க்காமல், மற்றாக்களுக்கும் கொஞ்ச நஞ்சம் உதவ முயன்றிருக்கிறார்.

இப்பிடி ஒரு ஐடியாவைப்போட்டு, அதை ஓரளவுக்கு வெற்றியாக்கியதால மாகாணசபை உறுப்பினர்கள் எல்லாம் சீ.வி.கே அண்ணையைப் புளுகிப் புகழ்ந்து தள்ளிக்கொண்டிருக்கினம்.

இதால சீ.வி.கே அண்ணைக்கு சபையின் உறுப்பினர்களின் மத்தியில் பெரிய செல்வாக்கு.

இதில இன்னொரு விசேஷம் என்ன தெரியுமோ!

இந்திய வாகனங்கள்தான் மாகாணசபை உறுப்பினர்களுக்குக் குடுக்கப்படும் எண்டமாதிரி ஒரு கதை இருந்ததெல்லோ. அது இப்ப மாறீட்டுது. இனி வரப்போற வாகனங்கள் Made in Japan எண்டு பொறிக்கப்பட்டவை..

நல்லாத்தானிருக்கு இந்த மாதிரிச் சேவைகளும் மாகாணசபையின் நோக்கங்களும்.

கொஞ்ச நாளைக்கு முதல் இதே மாதிரி இலவச விமானப் பயணத்துக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கவர்னர் ஊடாக ஜனாதிபதியிட்ட எழுதிச் சலுகையைப் பெற்றுக்கொண்டார்.

இப்ப மாகாணசபை உறுப்பினர்கள் வாகனச் சலுகையைப் பெற்றுக் கொண்டினம்.

ஆனால், சனங்களுக்கு நன்மை தரக்கூடிய – நாலு நலத்திட்டங்களைப் பற்றிச் சிந்திச்சு அதுக்கு இப்படி மேல எழுதவோ கேட்கவோ மாட்டினம்.

அது சலுகைக்காகக் கையேந்திறதாகீடுமாம்.

**தங்களுக்குத் தேவையெண்டால், அதுக்காக ஜனாதிபதியின்ரை, கவர்னரின்ரை 'கக்கூசுக்கும் தண்ணி ஊத்துவினம்.'**

**சனங்களுக்கெண்டால்... 'ம் உவையிட்டப்போய் நாங்கள் கெஞ்சிக்கொண்டு நிக்கிறதோ... எங்கட உரிமைகளை நாங்கள் போராடி எடுப்பமே தவிர, கெஞ்சி வாங்க மாட்டம்'** எண்டு 'பீலா'விடுவினம்.

தங்களுக்குத் தேவையெண்டால் ஜனாதிபதியின் கக்கூஸ் வரை போவினம். வெளியால வந்து சனங்களுக்குக் கதை விடேக்க, 'ஜனாதிபதியின் வீட்டை உடைக்கோணும்' எண்டு ஆக்ரோசப்பேச்சு.

என்ன மாதிரிக் காதில பூவைக்கிறாங்களப்பா!

வடக்குமாகாணசபை எப்பிடியெல்லாம் இயங்குது? எப்பிடியெல்லாம் சிந்திக்குது எண்டு நல்லாய்ப் படிச்சவையள்தான் கொஞ்சம் சொல்ல வேணும்.

அவைதான் தேர்தல்ல முறிஞ்சு வேலை செய்து இவையைக் கதிரைக்குக் கொண்டு வந்தவை. ஆனால், இப்ப இதையெல்லாம் அவை வெளியில சொல்லவே மாட்டினம். இன்னும் இன்னும் இந்தச் சீத்துவக்கேடுகளை மூடித்தான் மறைக்கப் பாப்பினம்.

ஏனெண்டால், **இனவாதம் ஒரு போதை கண்டியளோ... அது எல்லாத்தையும் மறைச்சுப்போடும். தங்கட ஆக்களின்ரை மலத்தையும் அது தங்கக்கட்டியாகத்தான் காட்டும்.**

சிந்திப்பதும் அதை வெளிப்படுத்துவதும் நாமெல்லாம் மனிதர்கள் என்பதன் அடையாளம். -பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கெட்டித்தனமில்லாமல் வேறென்ன?

உலகத்து மொழிகளிலே எல்லாம் தமிழ் மொழிதான் இனிய மொழி என்று சொல்லுறதைக் கேட்டு எப்பிடிப் புல்லரிச்சுப் போவோமோ அப்பிடியே உலக இனங்கள் எல்லாத்திலும் தமிழினம்தான் புத்தி கூடினதும் தந்திரமானதும் எண்டு நாங்களே சொல்லி நாங்களே நம்பியும் வாறம் எண்டதை யாரும் மறுக்க மாட்டியள்.

இல்லாட்டில், மற்ற மற்ற ஆக்களைப் பற்றி எங்களிட்ட இருக்கிற அபிப்பிராயங்கள் வேறெப்படி வந்திருக்கும்? மோட்டுச் சீனாக்கள், தொப்பி பிரட்டியள், வடக்கத்தியான்கள், பாயில் ஒட்டுற கிழக்கூரார், பாம்பு தின்னியள், காப்பிலியள்... உப்பிடியொருத்தரும் எங்கட "ரேஞ்சுக்கு" வரமாட்டினம் எண்டொரு நினைப்பு எங்களுக்கிருக்கு.

யோசிச்சுப் பாருங்கோ! "இலங்கையரசு எங்களுடையதில்லை; அது எங்கட எதிரி; சர்வதேசத்திட்ட பிடிச்சுக்குடுத்து இலங்கையரசுக்குத் தண்டனை வாங்கிக் குடுக்கிறதுதான் முதல் வேலை" என்று முழுமூச்சாய் செயற்பட்டுக் கொண்டிருக்கிற ஆரும் இலங்கையர சிட்டப் போய் வாய்நனைப்பினமோ?

"சீ"யெண்டுதானே நினைப்பியள்? அங்கதான், மற்ற மற்ற இனங்களுக்கில்லாத – எங்களிட்ட இருக்கிற கெட்டித்தனத்த நீங்கள் விசேசமாய் அறியவேணும். மாகாணசபை உறுப்பினர்களுக்குத் தேவையான வாகனங்கள், முதலமைச்சருக்கான விமானப் பயணச் சலுகை, சம்பளத்தைக் கூட்டிக் கேட்கிறது, சலுகையளை நைஸா கேட்கிறது... எல்லாத்தையும் வளைஞ்சு குழைஞ்சு எதிரியையே மடக்கிப் பெற்றுக் கொள்ளுறது... அதுதான் கெட்டித்தனங்களுக்கெல்லாம் கெட்டித்தனம்!

இப்ப இலங்கையரசோடு சர்வதேச அழுத்தப் போர்தானே நடத்துகிறோம்? சரிக்குச்சரி முப்படையையும் வைச்சிருந்து நிஜப் போரையே நடத்திக் கொண்டிருந்தபோது, "எங்கட அரசு கொழும்பில்லை, நாங்கள் இங்கே தனியரசு" என்று சொல்லிக்கொண்டு, தேவையான உணவு மருந்து சம்பளம் எல்லாத்தயும் எதிரியையே ஏமாத்தி வாங்கவும் தெரிந்த கெட்டித்தனத்தை வேறு யார் காட்டியிருக்கிறார்கள்?

"அது எங்கட அரசில்லை; அவையின்ர ஆட்சி ஒண்டும் இங்கே செல்லாது" என்று சவால் விட்டுக்கொண்டே, "எங்கட வரிப்பணத்திலதானே சம்பளமும் மற்ற மற்ற சாமான்களும் அனுப்புகினம்" என்று லொஜிக்கோடு மடக்க வேறெந்த இனத்துக்கு அந்தளவு மூளை இருக்கு?

ரணிலை விழுத்த மகிந்தவுக்கு சப்போர்ட் பண்ணினம்; பிறகு மகிந்தவை விழுத்தவென்று பொன்சேகாவுக்கு சப்போர்ட் பண்ணினம்; பிறகு இப்ப மகிந்தவை விழுத்த அமெரிக்காவையும் சப்போர்ட் பண்ணுறம்... இவை ஆரும் தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தரப்போறதில்லை எண்டதையும் இடைக்கிடை உறுதியாச் சொல்லுறம்...

இவை தங்களுக்குள்ள ஒருத்தரை ஒருத்தர் விழுத்திக் கொண்டிருக்கிறதுக்கு நாங்கள் தேவை எண்டு காட்டியிருக்கிறது எங்கட கெட்டித்தனமில்லாமல் வேறென்ன? தீர்வென்ன தீர்வு? தீர்வு வந்திட்டால், இப்பிடி மடக்கி விழுத்தி விளையாடிக் கொண்டிருக்கேலுமே? இப்ப வழியில்லாமல் வாடிக்கொண்டிருக்கிறதுகள் எல்லாம் "அதைச் செய் இதைச் செய்" எண்டு எங்களிட்டயெல்லே வந்துநிக்குங்கள்....

கெட்டித்தனம் புத்திசாலித்தனம் எண்டிறதெல்லாம் எப்பவும் மற்றவையைத் தட்டிக் கேட்டுக்கொண்டிருக்கிறதுதான்! "அது ஏன் நடக்கேல்ல, இது ஏன் செய்யப்படேல்ல" எண்டு மக்கள் எங்களிட்ட வாற மாதிரி வைச்சுக்கொள்ளக் கூடாது. அதெல்லாம் அரசாங்கத் திட்டைத்தான் கேக்க வேணும்.

தமிழ் மக்களுக்கு எதையும் செய்யப் பஞ்சிப்படும் இந்த அரசாங்கத்தை ஆண்டுக்காண்டு ஜெனீவாவில் தோற்கடித்தும், அமெரிக்காவோடு சேர்ந்து மடக்கியும், ரணிலோடு கைகோர்த்துக் கவிழ்த்தும், பொன்சேகாவுக்கு வாக்குப்போட்டுப் பயங்காட்டியும் "பாருங்கள் பாருங்கள் அரசு பயப்பிடுது... சமாளிக்குது... எதிர்காலத்தில் இன்னும்பல நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகுது..." என்று வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தால் போதாதா?

தமிழ்மக்கள் இந்த அற்புத மகிழ்ச்சிகளை விட வேறென்னத்தைப் பெரிதாய் எதிர்பார்த்துவிடப் போகிறார்கள்? - ஆசிரியர்

# ஜனாதிபதித் தேர்தலில் களம் குதிக்க ரணில் விக்கிரமசிங்க பின்னடிப்பு

## கட்சியும் அவரைக் கைவிடத் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார். முக்கியமான ஒருவரையே ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தல் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவித்ததன் பின்னரே தேர்தலில் யார் போட்டியிடுவார்க்ள் என்பது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அறிவிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போதைக்கு உவா மாகாணசபைத் தேர்தல் குறித்தே கவனம் செலுத்தப்பட்டு வருவதாக கட்சியின் மற்றுமொரு சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். முதலில் ஊவா மாகாண்சபைத் தேர்தலை முடித்துக் கொண்டு அதன் பின்னர் பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் குறித்து கவனம் செலுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கோபியின் மனைவி உட்பட நால்வர் நீதிமன்றால் விடுதலை

(கொழும்பு)

அண்மையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் மூன்று பேர் கடந்த வெள்ளியன்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். மற்றுமொருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்த நால்வரில் இருவர் பெண்கள். இருவர் ஆண்கள். நெடுங்கேணி காட்டுப்பகுதியில் இராணுவ சுற்றிவளைப்பொன்றின் போது சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று பேரில் ஒருவரான கோபி என்று இராணுவத்தினரால் அடையாளப்படுத்தப்பட்டிருந்த கஜீபன் என்பவரின் மனைவி சர்மிளா, கஜீபனின் தாயாருக்கு உதவியாக இருந்ததாகத் தெரிவிக்கப்படும் புவனேஸ்வரி ஆகிய இரண்டு பெண்களுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் பயங்கரவாதத்தை மீண்டும் உருவாக்குவதற்கும் விடுதலைப் புலிகளை மீளிணையச் செய்வதற்கும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள் என்றே கோபி என்ற கஜீபன் உள்ளிட்ட மூவரின் மீதும் அரசு குற்றம் சாட்டியிருந்தது.

இவர்களுடன் பேக்கரி உரிமையாளர் என கூறப்படும் ஒருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். அந்த பேக்கரியில் பணியாற்றியதாகத் தெரிவிக்கப்படும் மற்றுமொருவரும் விடுதலையாகியுள்ளார். இவர்களைவிட இன்னும் முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் பூஸா முகாம் உட்பட தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

# டெங்குத் தொற்று தலைநகரில் உச்சம்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில், டெங்கு நோய் தொற்றானது அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதத்தில், இந்த டெங்கு நோய்த் தொற்றானது கிருலப்பனை பிரதேசத்திலே அதிகரித்து காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே, கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில், டெங்கு நோய்த் தொற்று காரணமாக, 360 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, அந்த நோய்த் தொற்றானது 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் சுட்டிக் காட்டியுள்ளார்.

# வர்த்தக தூதுக்குழு ஓமானுக்கு செல்லத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களை அறிந்து கொள்வதற்கும் ஏனைய வர்த்தக தொழில்நுட்ப அனுபவ பகிர்வுகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்குடனும் கொழும்பில் இருந்து வர்த்தகத்தூதுக் குழு ஒன்று ஓமானுக்குச் செல்லவுள்ளது.

நான்கு நாட்கள் அங்கு தங்கி இருந்து பல்வேறு வர்த் தக வாய்ப்புகள் தொடர்பில் இந்தக் குழு ஆய்வு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வர்த்தக சம்மேளனத்தினரின் அனுசரணையில் குழுவின் விஜயம் அமைகிறது. இதற்கான ஏற்பாடுகளை ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டுள்ளது.

சுற்றுலாத்துறை, மருந்து பொருள் வர்த்தகம், பழங்கள் மற்றும் மரக்கறிவகை ஏற்றுமதி மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வர்த்தகத்துறை சார்ந்த பிரதிநிதிகள் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

# மக்கள் சந்திப்பில் பிரச்சினைகளுக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி காரியாலயத்தில் திரண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்களின் பல பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவரும், வலி.தென்மேற்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழுத்தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஒவ்வொரு மக்களினதும் பிரச்சினைகளை நுணுகி ஆராய்ந்து உடனுக்குடன் தீர்த்து வைத்தார்.

வீட்டுத்திட்டம், குடிதண்ணீர் பிரச்சினை, காணிப்பிரச்சினை, நிவாரணம், சமுர்த்தி, வேலை வாய்ப்பு, மற்றும் மாணவர் நலநோம்புத் திட்டம், பதவி உயர்வு தொடர்பான சகல விடயங்களையும் தெரிந்து ஆராய்ந்து தீர்வு கண்டார்.

அத்துடன் ஏனைய திணைக்களத் தலைவாகள், அமைச்சர்கள், அமைச்சு பிரதிநிதிகளுடனும் உடனுக்குடன் தொடர்பு கொண்டு நூற்றுக்கு மேற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார்.

மேற்படி சந்திப்பை வலி.தென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் வெ.அ.ஜோன்சன் மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) கலந்து கொண்டார். (92)



**பிரித்தானியா இலங்கையைத் தனது காலனி நாடாக்கி சுமார் 250 வருடங்கள் ஆட்சி செய்ததுடன், 1948இல் வெளியேறுவதற்கு முன்னர் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் திட்டமிட்டு முரண்பாட்டையும் உருவாக்கிவிட்டுச் சென்ற நாடு என்பது இந்தத் தமிழ் இனவாத தேசிய இயக்கங்கள் அறியாத விடயமல்ல. அதேபோல இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பின்னர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு உலகின் முதல்தரமான ஏகாதிபத்தியமாக முன்னுக்கு வந்த அமெரிக்கா, அதன் பின்னர் ஜனநாயத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் எத்தனை நாடுகளில் ஆக்கிரமிப்பு, ஆட்சிக் கவிழ்ப்பு, தலையீடு என்பவற்றை மேற்கொண்டு வந்துள்ளது என்பதும் இவர்கள் அறியாததல்ல. இருந்தும் இந்தத் தமிழ் இனவாதத் தேசியர்கள் உள்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் புறக்கணித்துவிட்டு, நாடுகளின் சுதந்திரத்தையும், இறைமையையும், இனங்களின் ஒற்றுமையையும் ஏற்றுக்கொள்ளாத அந்நிய சக்திகளிடம் தமது தலைவிதியை ஒப்படைப்பதற்கு முரண்டு பிடித்து நிற்கின்றனர்.**

# ரஸ்ய அதிபர் புடினின் அறிவிப்பும் தமிழ் இனவாத தேசியர்களின் நிலைப்பாடும்!

## எஸ். மார்க்கண்டேயர் கட்டுரையிலிருந்து

உக்ரேனின் சட்டபூர்வ அரசாங்கம் மேற்கத்தைய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களால் கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டின் கிரிமியா பிரதேச அரசாங்கம் பொதுமக்களிடையே கருத்துக் கணிப்பு நடாத்தி 90 வீதத்திற்கும் அதிகமான மக்களின் ஆதரவுடன் ரஸ்யாவுடன் இணைவதாகத் தீர்மானித்தது. அதை ரஸ்யப் நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டன.

உலக வரலாற்றில் அமெரிக்க - சோவியத் பனிப்போர் முடிவுற்ற பின்னரான கால் நூற்றாண்டுக் காலத்தில் முதல் தடவையாக ரஸ்ய - கிரிமிய இணைப்பு புதிய சர்வதேச நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. ஆனால் தனது நடவடிக்கையை நியாயப் படுத்திய ரஸ்ய அதிபர் புடின் பல காரணங்களை முன் வைத்துள்ளார். அதில் ஒன்று மிக முக்கியமானது.

அவர் சொன்ன அந்த ஒரு முக்கியமான காரணம், மேற்கத்தைய சக்திகள் ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதற்காகப் புதிதாகக் கண்டு பிடித்த சிறுபான்மை இனங்களின் உரிமைப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பது, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்ற புதிய தந்திரோபாயத்துக்கு ஒரு அடி கொடுப்பதற்குத்தான் என்ற. போதிலும், உலகம் முழுவதும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வரும் இலங்கைத் தமிழர்கள் உட்பட பல டசின் கணக்கான சிறுபான்மை தேசிய இனங்களுக்கு ஒரு அனுகூலத்தையும் திறந்து விட்டுள்ளது.

அதாவது, கிரிமிய இணைப்புக் குறித்து கருத்து வெளியிட்ட ரஸ்ய அதிபர் புடின், கிரிமியா தனது சட்டபூர்வமான சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்துள்ளது என்ற அடிப்படையில் கருத்து வெளியிட்டிருந்தார். (Putin said.... Crimea's vote to join Russia was in line with international law and reflected its right for selfdetermination) உலக அரங்கில் அமெரிக்காவுக்கு அடுத்த நிலையில் உள்ள ஒரு நாட்டின் அதிபர் வெளியிட்ட இந்தக் கருத்து இன ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடும் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு நிச்சயமாக ஒரு புதிய பலத்தை அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உண்மையில் உலக வரலாற்றில் லெனின் தலைமையில் 1917 ஒக்ரோபர் புரட்சியின் மூலம் அமைந்த சோசலிச சோவியத் யூனியனில் தான் முதன்முதலாக சிறுபான்மைத் தேசிய இனங்களின் பூரண சுயநிர்ணய உரிமை நிலைநாட்டப்பட்டது. 73 ஆண்டுகளின் பின்னர் அந்த நிலைமை மாறி 1990இல் சோவியத் யூனியனில் மீண்டும் முதலாளித்துவம் நிலைநாட்டப் பட்டு, அதன் பெரும்பாலான சிறுபான்மை தேசிய இன அரசுகள் (அதில் உக்ரேனும் ஒன்று) தனி நாடாகப் பிரிந்து போய்விட்டாலும், இனப் பிரச்சினைக்கு தனி நாடாவது தீர்வல்ல என்பதை உக்ரேனிய - கிரிமிய பிரிவு மீண்டுமொருமுறை எடுத்துக் காட்டியுள்ளது.

அதேநேரத்தில் சோவியத் காலகட்டத்தில் நடைபெற்று வந்த தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களுக்கும், இன்றைய போராட்டங்களுக்கும் உள்ள தன்மை வேறுபாடுகளையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

சோவியத் யூனியன் உதயமாகி அந்நாட்டின் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்ட காலத்தில், உலகம் முழுவதும் பல ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் காலனிகளை வைத்திருந்தன. எனவே அந்தக் காலனி நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்களை உலக சோசலிசத்துக்கான போராட்டங்களின் அங்கமாகக் கணித்த லெனினும், ஸ்டாலினும், கார்ல்மாக்சாலும், பிரெடரிக் ஏங்கல்சாலும் உருவாக்கப்பட்ட """உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்""" என்ற கோசத்தை, """உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட தேசங்களே ஒன்றுபடுங்கள்""" என மாற்றினர். அதன் அடிப்படையில் சோசலிச நாடுகளான சோவியத் யூனியன், சீனா போன்றவற்றின் உதவியுடன்தான் 20ஆம் நூற்றாண்டில் அநேகமான நாடுகளின் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றி பெற்றன.

இவ்வாறு புதிதாக விடுதலை அடைந்த நாடுகளில் உருவாக்கப்பட்ட காலனி வழிவந்த முதலாளித்துவ ஆட்சி முறையின் கீழ் அந்த நாடுகளின் சிறுபான்மை இனங்கள் மீது புதிய அரசுகளால் ஒடுக்குமுறை திணிக்கப்பட்டு புதிய நெருக்கடி தோன்றியது. ஆனால் காலனித்துவத்திற்கெதிரான தேச விடுதலைப் போராட்டங்களை ஆதரித்த சோசலிச நாடுகள், புதிதாக சுதந்திர நாடுகளில் உருவான தேசிய இன விடுதலைக்கான போராட்டங்களை ஆதரிக்கவில்லை.

அதற்கான காரணம், பலவீனமான இந்தப் புதிய சுதந்திர நாடுகள் மேலும் பிளவுபட்டால், அந்த நாடுகளின் மக்களின் வாழ்க்கை மேலும் பாதிப்படைவதுடன், அந்தச் சூழல் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் வாய்ப்பாகி விடும் என்பதுதான். அதற்குப் பதிலாக புதிய சுதந்திர நாடுகள் தமது மக்கள் மத்தியில் (இன ஒற்றுமை உட்பட) ஒற்றுமையைப் பேணி பொருளாதார ரீதியாக வளர்ச்சி அடைந்து தன்னிறைவைப் பெற வேண்டும் என்பதுதான் புதிய சுதந்திர நாடுகள் குறித்த சோசலிச நாடுகளின் கொள்கையாக இருந்தது.

ஆனாலும் 1971இல் பங்களாதேஸ் ஒரு விதிவிலக்காக அமைந்தது. அமெரிக்க - சோவியத் பனிப்போர் நிலவிய அன்றைய சூழலில், பாகிஸ்தானைப் பிளவுபடுத்தி அதைப் பலவீனப்படுத்தவேண்டும் என்ற இந்தியாவின் தேவையை நிறைவேற்றுவதற்காக அதன் நட்பு நாடான சோவியத் யூனியன் பங்களாதேஸ் பிரிவினைக்கு உதவியது.

அந்தப் பிரிவினையை அடிப்படையாக வைத்தே இலங்கையில் தமிழரசுக்கட்சி முதன்முதலாக வெளிப்படையாகப் பிரிவினைக் கோசத்தை எழுப்பியது. அதுவரை காலமும் இந்தியாவின் காந்திக்கு நிகராக தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை "ஈழத்துக் காந்தி" என அழைத்து வந்த அக்கட்சியினர், அந்த அடைமொழியை மாற்றி, வன்முறை மூலம் பங்களாதேஸ் விடுதலையைப் பெற்ற முஜிபுர் ரஹ்மானின் பெயரை செல்வநாயத்துக்குச் சூடி "ஈழத்து முஜிபுர் ரஹ்மான்" என அழைக்கத் தொடங்கினர்.

அப்படித் தமது கொள்கையையும், தலைவரின் அடைமொழியையும் தமிழரசுக் கட்சியினர் மாற்றிக் கொண்டாலும், சோவியத் உதவியுடன் இந்தியாவுக்கூடாக இலங்கையில் தமது தனிநாட்டுக் கனவை நனவாக்க முயற்சிக்கவில்லை.

பாகிஸ்தானில் செய்தது போல தமது நட்பு நாடான இலங்கையில் ஒரு பிரிவினையைச் செய்ய இந்தியாவும், சோவியத் யூனியனும் சம்மதித்திருக்க மாட்டா என்பது ஒருபுறமிருக்க, தமிழரசுக்கட்சித் தலைமையின் ஏகாதிபத்திய சார்புப் போக்கும் ஒரு காரணம்.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழரசுக் கட்சி ஆகிய இந்த இரு கட்சிகளும் ஒருபக்கத்தில் இலங்கையின் உழைக்கும் மக்களைப் பிரிக்கும் வகையில் தமிழ் இனவாதம் பேசிக்கொண்டு மறுபக்கத்தில் இனவாத சிங்கள முதலாளித்துவ மேட்டுக்குழாமுடன் (குறிப்பாக ஐ.தே.க உடன்) நட்புறவுடன் செயற்பட்டனர்.

இவர்களின் நடவடிக்கைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல அமைந்தது, 1956இல் பதவிக்கு வந்த பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க, நாட்டின் இறையாண்மையைப் பலப்படுத்தும் பொருட்டு திருகோணமலையிலிருந்த பிரித்தானியரின் கடற்படையையும், கட்டுநாயக்கவிலிருந்த விமானப் படையையும் நாட்டைவிட்டு வெளியேற்றிய போது, தமிழரசுக்கட்சித் தலைவர் அவ்வாறு வெளியேற வேண்டாம் எனக் கோரி பிரித்தானியாவின் எலிசபெத் அரசிக்கு அனுப்பிய தந்தி ஆகும். இந்தத் தேசத்துரோக நடவடிக்கையை எவ்வித வெட்கமுமின்றி தமிழரசுத் தலைவர் மேற்கொண்டார்.

பிரித்தானியா இலங்கையைத் தனது காலனி நாடாக்கி சுமார் 250 வருடங்கள் ஆட்சி செய்ததுடன், 1948இல் அங்கிருந்து வெளியேறுவதற்கு முன்னர் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் திட்டமிட்டு முரண்பாட்டையும் உருவாக்கிவிட்டுச் சென்ற நாடு என்பது இந்தத்தமிழ் இனவாத தேசிய இயக்கங்கள் அறியாத விடயமல்ல.

அதேபோல இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பின்னர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு உலகின் முதல்தரமான ஏகாதிபத்தியமாக முன்னுக்கு வந்த அமெரிக்கா, அதன் பின்னர் ஜனநாயத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் எத்தனை நாடுகளில் ஆக்கிரமிப்பு, ஆட்சிக் கவிழ்ப்பு, தலையீடு என்பவற்றை மேற்கொண்டு வந்துள்ளது என்பதும் இவர்கள் அறியாததல்ல.

இருந்தும் இந்தத் தமிழ் இனவாதத் தேசியர்கள் உள்நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைப் புறக்கணித்துவிட்டு, நாடுகளின் சுதந்திரத்தையும், இறைமையையும், இனங்களின் ஒற்றுமையையும் ஏற்றுக்கொள்ளாத அந்நிய சக்திகளிடம் தமது தலைவிதியை ஒப்படைப்பதற்கு முரண்டு பிடித்து நிற்கின்றனர்.

அப்படிப் பார்த்தால் இப்பொழுது கிரிமியாவின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிப் பேசுகின்ற, அதை நடைமுறையில் செய்து காட்டிய, புடினின் ரஸ்யாவின் உதவியை அல்லவா இவர்கள் நாட வேண்டும்? ஆனால் அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஏனெனில் இலங்கைத் தமிழர்களின் தலைமை என்பது அன்றிலிருந்து இன்றுவரை மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் விசுவாசிகளாக இருந்து வருகின்றதேயொழிய ஒரு போதும் சோசலிச நாடுகளுடனோ அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுடனோ நட்புறவு வைத்தது கிடையாது.

அவர்களுடைய இந்தப் போக்கைத் தற்செயல் நிகழ்வு என்று சொல்லிவிட முடியாது. இது வர்க்கரீதியாக யாழ்ப்பாண பிற்போக்கு மேட்டுக் குழாம் நிலைப்பாடு காரணமாக ஏற்பட்ட அரசியல் நிலைப்பாடு. எனவேதான் அதன் தொடர்ச்சியாகப் புலிகளும் செயற்பட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்படுகின்றது. புலம்பெயர் புலி வாரிசுகளும் செயற்படுகிறார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதாரத்தடைக்கு காலம் கனியவில்லை


## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிப்பதற்கு இன்னும் காலம கனியவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

போருக்கு பின்னர் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது முழு ஆதரவை வழங்கும். எனினும் இலங்கை நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தலைமையாளர் டேவிட் டெலி தெரிவித்துள்ளார்

அத்துடன் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்



இலங்கையின் ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில், இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் புரிந்துணர்வுடன் கூடிய நட்புறவு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நல்லிணக்கத்துக்காக இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டமை மற்றும் அதற்கு எதிராக இலங்கை அறிக்கைகளை வெளியிட்டு வருகின்ற நிலையில் தற்போது தீவிரமான நிலை ஒன்று ஏற்பட்டுள்ளமையை மறுக்க முடியாது.

எனினும் இதற்காக இலங்கை மீது ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத்தடையை விதிக்குமா? என்பதை கூறுவதற்கு இது முதிர்ச்சியற்ற காலம் என்று டெலி தெரிவித்துள்ளார்.

# மூலோபாயச் சட்டத்தில் முரண்பாடு தோல் உரிக்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட பொருளாதார அபிவிருத்தி மூலோபாய திட்டத்தின் கீழ் நவீன ஹோட்டல்கள் அமைக்கப்படவுள்ள போதும் அதில் கசினோவுக்கு இடமில்லை என்று அரசாங்கம் கூறி வருகிறது.

எனினும் குறித்த ஹோட்டல்களில் உலக தரம் வாய்ந்த கசினோ வர்த்தகம் இடம்பெறும் என்று அவுஸ்ரேலிய கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பெக்கரின் இணையத்தளம் தொடர்ந்தும் கூறிவருகிறது.

இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும் கசினோ உடன்பாடுகள் குறித்தும் அந்த இணையத்தளத்தில் வடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது குறித்து அண்மையில் ஜே.வி.பி.யின் தலைவர் அனுர



குமார திஸாநாயக்கவும் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசாங்கம், புதிய ஹோட்டல் வர்த்தகத்தில் கசினோ இல்லை என்று கூறுகின்ற போதும் பெக்கரின் இணையத்தளத்தில் கசினோ வர்த்தகம் தொடர்பான விடயங்கள் மாற்றப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# ஆளும்தரப்புடன் மனமுறிவு ஒட்டுப்போடும் முயற்சி மும்முரம்



ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளுக்கு ஆளும தரப்பினருடன் மனமுறிவு ஏற்பட்டுள்ளது. இதனை அகற்றுவதற்கு பல்முனைப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் இரு கட்டமாக அரசாங்கத்திற்கு சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்போவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அறிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளக மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தின் போது தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்களின் நிலைப்பாடு குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும்.

கூட்டமைப்புடன் நிலவி வரும கருத்து முரண்பாடுகளை விரைவில் களைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வெறுமனே போலி ஒற்றுமை ஒன்றைக் காண்பித்து கூட்டணியில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கும் உத்தேசம் கிடையாது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா இல்லையா என்பது விரைவில் தீர்மானிக்கப்படும் என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# விசாரணைக்குழுவின் கட்டமைப்பு தயார்

## நிதி மூலங்களை தேடுகிறது ஐ.நா.

(கொழும்பு)

இறுதியுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசார்ணைக் குழுக்கான கட்டமைப்புக்கான அனைத்தும் தயார் செய்யப்பட்டுவிட்டது. எனினும் அதற்கான நிதி மூலங்கள் தொடர்பாக இப்போது ஆராயப்பட்டு வருகின்றது.

வடக்கில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் குறித்த சர்வதேச விசாரணை ஆணைக்குழு தொடர்பான அறிவித்தலை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இந்த மாத இறுதியில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனித் உரிமைகள் பேரவையின பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த விசாரணை ஆணைக்குழுவுக்கான பணிகள் இடம்பெற்று வருவதாகவும் அந்தப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி விசாரணைகள் எவ்வாறு இடம்பெறவேண்டும்?



அதற்கான நிதி எவ்வாறு திரட்டப்பட வேண்டும் போன்ற காரணங்கள் ஐக்கிய நாடுகளின நியூயோர்க் தலைமையத்தினால் ஆராயப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே விசாரணை ஆணைக்குழு தொடர்பில் இந்த மாத இறுதியில் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை தொடர்பான மனித உரிமை மீறல்கள் குறித்த சர்வதேச விசாரணைக்காக 14,60,000 டொலர்கள் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது

## புலிகளின் கொடிக்கு கனடாவில் தடை

(கொழும்பு)

புலிகளின் கொடியை கனேடிய உயர் கல்விப் பாடசாலை ஒன்று தடை செய்துள்ளது.

தென்மேற்கு ஒன்டோரியோவில் உள்ள பாடசாலை ஒன்று இந்தத் தடையை ஏற்படுத்தியுள்ளது. குமார் மார்கண்டு என்ற மாணவர் ஒருவர் கடந்த இரண்டு வருடங்களாக விடுதலைப் புலிகளின் கொடியை தமிழர்களின் கொடி எனக் கூறி, அந்தப் பாடசாலையில் இடம் பெறும வருடாந்த பேரணியில் காட்சிப்படுத்தி வந்துள்ளார்.

எனினும் கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கொடியை அங்கு காட்சிப்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது

# மரக்கிளையில் சத்தியாக்கிரகம்



மதவாச்சி பொலிஸார் தன்னை சட்டவிரோதமான முறையில் கைது செய்ததாக கூறியும் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மதவாச்சி பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள மரத்திலேறி ஒருவர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

39 வயதான ரஞ்சித் சிறிவர்தன என்பவரே இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நேற்று முன்தினம் முதல் ஈடுபட்டுள்ளார்.

மதவாச்சி பொலிஸாரினால் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்ட தான், ஏழு நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அக்காலப் பகுதியில் பொலிஸார் தன்னை தாக்கியதாகவும் தன்னுடைய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மதவாச்சி பொலிஸார் தெரிவிக்கையில், சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுள்ள நபருக்கு எதிராக மூன்று முறைப்பாடுகள் பொலிஸில் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேகநபரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சம்பந்தனுடன் இரகசிய சந்திப்பு ஜே.வி.பி. கட்சிக்குள் உடைவு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் இரகசிய சந்திப்பு ஒன்றை அனுரகுமார திஸாநாயக்க மேற்கொண்டதுடன் எதிரொலியாக ஜே.வி.பி. கட்சிக்குள் உட்கட்சி முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு அறிவிக்காமல் தலைவர், இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளை சந்தித்தமையே இந்த முரண்பாட்டு நிலைமைக்கு காரணமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன்,இந்திய உயர்ஸ்தானிகராலய உயரதிகாரி ஆகியோருடன் அனுரகுமார திஸாநாயக்க இரகசிய சந்திப்பொன்றை நடாத்தியதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

பொதுவான வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

கட்சியின் மத்திய செயற்குழுவினை சந்தித்து அது பற்றி அறிவிக்காது தன்னிச்சையாக இந்தக் கூட்டத்தில் பங்கேற்றமைக்கு சில தரப்பினர் நேரடியாக எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதனால் பொது வேட்பாளருக்கு ஆதரவான பிரிவு மற்றும் ஆதரவற்ற பிரிவு என இரண்டு பிரிவுகள் கட்சிக்குள் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கல்வி நிர்வாக சேவைக்கு இன்று நேர்முகத்தேர்வு

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புக்காக இரண்டு தடவைகள் கொழும்பில் நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரட்சையிலிருந்து தெரிவான 140 பேருக்கான நேர்முகப் பரீட்சை இன்று கல்வியமைச்சில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கு இது தொடர்பான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் 107 சிங்களவர்களும் 20 தமிழர்களும் 13 முஸ்லிம்களும் அடங்குவர்.

இலங்கை கல்விநிர்வாக சேவை தரம் III இற்கு 250 இற்கு மேல் வெற்றிடங்கள் இருந்த போதும் திறந்த போட்டிப் பரீட்சையில் திறமைகாட்டிய 140 பேர் மாத்திரமே நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(10)





கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும், கலைநிகழ்வுகளில் ஒருபகுதியினையும் காணலாம். (51)

# தேர்தலில் அதிகாரங்களை பெற்றவர்கள் மக்கள் மத்தியில் அந்நியப்பட்டு நிற்கின்றனர்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் காலங்களில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று அதிகாரங்களைக் கைப்பற்றுபவர்கள் பின்னர் மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்பட்டே வாழ்ந்து வருகின்றார்கள். அத்தோடு அவ்வாறான எந்த பிரதிநிதிகளிடமும் மக்கள் தமது தேவைகள் குறித்து முறையிடுவதில்லை. அவ்வாறு முறையிடுவதற்காக மக்களால் அவர்களை இலகுவில் சந்திக்க முடிவதுமில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கண்ணகி நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உண்மையாக மக்களை நேசிப்பவர்களாலேயே மக்களின பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும். மாறாக மக்களைப் பயன்படுத்தி அதிகாரங்களைக் கைப்பற்றி சுகபோகமாக வாழ்பவர்கள் எப்போதும் மக்களைப் பற்றி சிந்திக்கப்போவதில்லை. அவர்களுக்கு மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்வதற்கும் வாய்ப்பில்லை. இதனாலேயே மக்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படும்போது அது மக்களுக்கு அவசியமற்றதெனக் கருதுகின்றார்கள். அத்தோடு அவர்கள் தேவைகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மக்களுடன் எப்போதும் உறவுகளைப் பேணுவதுமில்லை என்றார்.



எமது மக்கள் பல்வேறு பிரச்சினைகளுடனும் தேவைகளுடனுமே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். கடந்த பல தசாப்தங்களாக இழப்புகளை மட்டுமே சந்தித்து வந்த மக்களின் தேவைகள் இன்னும் முழுமையாக நிவர்த்தி செய்யப்படவில்லை. மக்களின் வாழ்வாதாரம், 'போக்குவரத்து, கல்வி, வாழ்விடம் உள்ளிட்ட அனைத்து விடயங்ளும் இன்று வரை மக்களுக்கு முழுமையாக சென்றடையவில்லை. எனவே நடைபெற்ற தேர்தல்களினூடாக வடக்கு மாகாணத்தில் மக்களின் பெரும்பான்மையான வாக்குக்ளைப் பெற்று அரசியல் அதிகாரங்களை கைப்பற்றியவர்களுக்கு பாரிய பொறுப்புக்களும் கடமைகளும் உள்ளன. ஆனால் அவர்களில் எவரும் மக்களின் இவ்வாறான பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து அறிந்து கொள்வதிலோ அவற்றை தீர்த்து வைப்பதிலோ ஆர்வம் காட்டுவதில்லை என்றார்.

இக்கலந்துரையாடலின்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கண்டாவளைப் பிரதேச ஈ.பி.டி.பி இணைப்பாளர் செல்வம், கண்ணகி நகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகளும் கிராமத்தின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# 'அமைதிக் கரங்கள்' நிலையம் மாங்குளத்தில் திறப்பு

(யாழ்.நிருபர்)

லிபாறா நல்வாழ்வு மையத்தின் அவயங்களை இழந்தவர்களுக்கான அமைதிக்கரங்கள் நிலையத் திறப்பு விழா இன்று A9 வீதி பனிக்கன்குளம், மாங்குளத்தில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் வடமாகாணசபையின் சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைப்பார்.

அவயவங்களை இழந்தவர்கள் உயர்வாக மதிக்கப்பட்டு சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறோம் என்பதை ஆழமாக உணர்ந்து தமது உறவுகளுடன் சாந்தியும் அமைதியும் மான்பும் நிறைந்த சமமான வாழ்வை அனுபவிப்பதே இந்நலவாழ்வு மையத்தின் நோக்கமாகும். (10)

# முரசின் இன்றைய பலன்



(05.05.2014 திங்கட்கிழமை)

ஐய வருஷம் சித்திரை மாதம் 22 ஆம் திகதி.
ஷஷ்டி / அமிர்தம்.
புனர்பூச நட்சத்திரம். மாலை 06.22 வரை. பின் பூசம்.
இராகு காலம் 07.26 - 08.56 வரை. சுபநேரம் 11.56 - 01.26 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிறருக்கு துணைபோக, உதவி செய்ய, முன் வராமல இருப்பது இழப்பினைத்தவிர்க்கும், கொள்வனவு செய்யும் பொருட்களின் காலாவதித் திகதியை நன்கு கவனியுங்கள். |
| ரிஷபம் | இல்லக்கிழத்தின் பின் மனம் நோகாதபடி நடக்க முற்படுதல் முரண்பாட்டைத்தவிர்க்கும், புதியவரின் அறிமுகம் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். |
| மிதுனம் | பணி சிறக்க சக ஊழியர்கள் ஒத்துழைப்பு நல்குவர், ஓய்வு பெறுவதற்கு தேவையான ஆவணங்களைச் சேகரித்தல். |
| கடகம் | பூர்வீகச் சொத்துப் பிரச்சினை தீர்க்கப்படாது இழுபறியாக இருக்கும், பெற்றோர் நலனை முன்னிட்டு பயணத்தை சேமித்துவைத்தல். |
| சிம்மம் | எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட ஜோதிடத்தைத்துணை கொள்ளல், அன்பாய் ஆதரவாகப் பேசி பிள்ளைகளை நன்னெறிக்கு கொண்டு வாருங்கள். |
| கன்னி | குடும்பத்தில் வீண் விவகாரங்கள் தலை தூங்கியதால் முரண்பாடு ஏற்படல், தொழில், வியாபாரத்தில் சலிப்பும் விரக்தியும் தோன்றும். |
| துலாம் | புதிய முயற்சி ஆரம்பிக்கையில் சோதிடப்பலனையும் கருத்தில் கொள்ளுங்கள், மன அமைதிக்காக ஆலய தரிசனத்தை மேற்கொள்ளல். |
| விருச்சிகம் | எதிர்மறையாக இருந்த சூழ்நிலை அனுகூலம் தருவதாக அமைந்துவிடல், ஈடுபடும் செயலை நன்கு நிதானித்து மேற்கொள்வதால் நன்மை உண்டு. |
| தனுசு | எதிரியாகச் செயற்பட்டவர் தங்கள் நன்நடத்தையைக கண்டு உறவுக்கு கைகொடுத்தல், எதிர் மனப்பாங்கு கொண்ட வரை விட்டு விலகுவது நன்மைதரும். |
| மகரம் | பொறுப்பின்றிக் கொடுத்த பணத்தைப் பெறகாவல் துறை செல்லல், தொலைந்த பொருள்பற்றிய தகவல் கிட்டியதால் பீதகளிப்பு நீங்குதல். |
| கும்பம் | பாதுகாப்பு குறைவான இடத்திற்குச் செல்வதைத் தவிருங்கள், எதிரியால் உருவான தொந்தரவு விலகி சுமுக நிலை ஏற்படும். |
| மீனம் | சூழிநிலையை உணர்ந்த பேசுவதன் மூலம் நற்பெயரைப்பாது காத்தல், பணவரவு அதிகம் பெற புதிய வாய்ப்புக்கிட்டும். |

# வாழ்வுக்கு வழிகாட்டும் சகுனஜோதிடம்

## "சகுனங்கள் பார்த்துவிடின் நல்லன நடக்கும்"

"சகுனஜோதிடம்" மனிதகுலம் தோன்றிய காலந்தொட்டு இன்று வரைஜதார்த்த பூர்வமாக விளங்கி வருவதைக் காணலாம்.

"ஞாலம் கருதினுங்கைகூடும்
காலம் கருதி இடத்தாற் செயின்"

என்கிறது பொய்யாமொழி நாம் ஒரு காரியஞ்செய்ய முற்படுவது, பயணத்தைத் தொடங்குவது முதலான நிகழ்வில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் சகுன சாத்திரம் வழிவகிக்கும் பங்குதலையானது. நம் கண்முன்னே நடக்கும் இயற்கை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நமக்கு ஏற்பட இருக்கும் நன்மை தீமைகளைக் கணித்தறிவது சகுன பலன்களாகும். சகுனத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

01.ஒன்றை நினைக்கும் போது ஏற்படும் சகுனம், 02. ஒரு விடயத்தைப்பற்றிப் பேசும் போது ஏற்படும் சகுனம், 03. செயல் நிகழும் பொழுது தோன்றும் சகுனம் ஆகும்.

இந்த சகுனங்களில் நினைக்கும் பொழுது ஏற்படும் சகுனங்களாக பல்லி சொல்லல், அசுபவார்த்தைகள் காதில் விழல் மற்றும் விலங்குகள் கத்துதல் முதலான நாம் செய்யப்போகும் செயலைப் பற்றி பிறரிடம் கூறிக்கொண்டு இருக்கின்றபொழுது ஏற்படும் சுப, அசுப சகுனங்கள், தும்மல் முதலியன. காரியத்தின் பொருட்டு பயணத்தைமேற்கொள்ளும் போது எதிர்ப்படுகின்ற சுப அசுப சகுனங்கள். அழுக்குத்துணி மூட்டையுடன் சலவைக்காரர் தென்படல், சுமங்கலிப் பெண் வருதல் முதலியன.

பெரும்பாலான மக்கள் இன்றும் சகுனத்தில் நம்பிக்கை வைத்தே, சகுனத்தைப் பார்த்த பின்னரே சுபசகுனம் எனின் பிரயாணத்தை ஆரம்பிக்கின்றனர் அசுபசகுனம் எனின் தெய்வத்தை வணங்கி சிறிய பொழுதைக்கழித்த பின் பிரயாணத்தில் முற்படுகின்றனர்.

விடிகாலையில் யாரேனும் வீட்டுக்கு வருவதைக் கொண்டு அன்றையதின குடும்பத்தின் நன்மை தீமைகளை அறிய சகுனமாக எண்ணுவர். படுக்கையை விட்டு எழுகையில் உள்ளங்கைகள் இரண்டையும் பார்ப்பது, முகம் பார்க்கும் கண்ணாடியில் விழிப்பது மற்றும் தெய்வீகப் படங்களைத் தரிசிப்பது முதலான செயல்களினால் அன்றைய பொழுது இனிதாகக் கழிய இவை சுபசகுனங்களான விளங்கி நிற்கும்.

### தேங்காய் உடைக்கும் சகுனப் பலாபலன்கள்

சரிசமமாக உடையின் செல்வம் பெருகும். துன்பம் நீங்கும். மூன்றில் ஒரு பங்கெனின் மனமகிழ்ச்சி, ஐந்தில் ஒருபங்கெனின் நிலையான ஐஸ்வர்யம், பொடிப்பொடி எனின் செல்வம் தக்க வைக்கும், ஓடு தனியாகக் கழன்றால் துன்பங்கள் நேரும். மூடி இரு கூறாகக் கழன்றால் தீயினால் அனர்த்தம். தெறித்தோடிய ஓட்டில் கண்தெரிந்தால் அபாயம் கைப்பிடியில் இருந்து தவறி விழுந்தால் குடும்பத்தில் துன்பமும் பொருள் இழப்பும், நீளவாக்கில் உடையின் செல்வம் நீங்கும். பல சில்லுகளாக உடையின் கவலை ஏற்படும். அழுகிய தேங்காயெனின் காரியக்கேடு தேங்காய் உடைக்கும் ஒலி கேட்டபின் காரிய சித்தி உண்டாகும்.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

# மெல்ல மெல்ல சூடு பிடிக்கும் கால்பந்துக் காய்ச்சல்

இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உலக கோப்பை கால்பந்து தொடர் அடுத்த மாதம் 12ஆம் திகதி பிரேசிலில் ஆரம்பமாகவுள்ளது.

உலகின் மிகவும் பழமையான விளையாட்டு கால்பந்து தான். ஆதிமனிதர்கள் மண்டை ஓடுகளை கால்களால் உருட்டி விளையாடினர். மூன்றாம் நூற்றாண்டில் சீனாவில், கால்பந்து பிறந்ததாக கூறப்படுகிறது. இங்கு 'சிஜு' என்ற பெயரில் இறகுகள் நிரப்பப்பட்ட தோல் பந்துகளில் முதலில் விளையாடினர். பின் 'டாங்' அரச பரம்பரை காலத்தில் காற்று நிரப்பிய பந்துகள் அறிமுகமானது.




## கால்பந்து திருவிழா
## இன்னும் 37 நாட்கள்

கடந்த 1863இல் நவீன கால்பந்து இங்கிலாந்தில் உருவானது. போட்டி விதி முறைகள் வகுக்கப்பட்டன. 1904, மே 21ஆம் திகதி பாரிசில் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) உதயமானது.

ஒலிம்பிக்கில் கால்பந்து போட்டிக்கு அமோக வரவேற்புக் கிடைக்க, சர்வதேச அளவில் உலக கோப்பை தொடரை நடாத்தும் 'ஐடியா' பிரான்ஸ் கால்பந்து சங்க தலைவர் ஜூல்ஸ் ரிம்மட் மனதில் தோன்றியது. இதையடுத்து பிபா சார்பில் 1930இல் முதலாவது உலக கோப்பைத் தொடர் உருகுவேயில் நடைபெற்றது.

தற்போது "பிபா" உறுப்பினர்களாக உள்ள 204 நாடுகள் தகுதிச் சுற்றில் மோதுகின்றன. இதிலிருந்து 32 நாடுகள் உலக கோப்பைத் தொடரில் கலந்து கொள்கின்றன.

இருபதாவது உலக கோப்பை தொடர் கால்பந்து மோகம் கொண்ட பிரேசில் மண்ணில் அடுத்த மாதம் 12ஆம் திகதி முதல், யூலை 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. மொத்தம் 32 நாட்கள் நடைபெறவுள்ள இத்தொடரில் 64 போட்டிகள் இடம்பெறவுள்ளன.

உலகின் மற்ற இடங்களில் பெப்ரவரி 14இல் காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால், பிரேசிலில் யூன் 12இல் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.இதே நாளில் உலக கோப்பை தொடரும் ஆரம்பிப்பதால், "சம்பா" நடனம் உள்ளிட்ட உற்சாகங்களுக்கு குறைவிருக்காது.

உலக கோப்பை தொடரில் பிரேசில் அணி தான் அதிகபட்சமாக 5 முறை (1958, 1962, 1970, 1994, 2002) கோப்பை வென்றது. தவிர, 7 தொடர்களில் இறுதிப் போட்டிக்கு முன்னேறி அசத்திய இந்த அணி, உலக கோப்பை கால்பந்து வரலாற்றில், மொத்தம் 210 கோல்கள் அடித்துள்ளது.

கால்பந்து மோகம் கொண்ட இங்கிலாந்து, அதற்கு தடை விதிக்கப்பட்ட வரலாறும் உண்டு. இங்கிலாந்து - பிரான்ஸ் இடையே சுமார் 100 ஆண்டுகள் (1338-1453) நடைபெற்ற போரின் போது, முக்கியமான வில்வித்தையை மறந்து, படை வீரர்கள் அனைவரும் கால்பந்து விளையாடினர். இதனால் ஆத்திரமடைந்த மூன்றாம் எட்வர்ட், கால்பந்துக்குத் தடை விதித்தார். பின் ராணி எலிசபெத் காலத்தில் தடை நீக்கப்பட, கால்பந்து மகத்தான வளர்ச்சி கண்டது.

முதல் மூன்று உலக கோப்பை தொடர்கள் (1930, 34, 38) வெற்றிகரமாக நடந்தன. இரண்டாம் உலகப் போர் காரணமாக 1942, 46 இல் நடைபெறவிருந்த போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டன.

பிரேசிலை விட, இலங்கையின் நேரம் 8.30 மணி நேரம் முன்னதாக உள்ளது. இதனால், இலங்கை நேரப்படி போட்டிகள் இரவு 9.30 மணி, நள்ளிரவு 12.30, 1.30 இற்கு போட்டிகள் ஆரம்பமாகும். தவிர, அதிகாலை 3.30 இற்கும், ஒரு சில போட்டிகள் காலை 6.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

பந்து கோல் எல்லையைத் தாண்டியதா, இல்லையா என்பது குறித்து தெளிவாக அறிய, உலக கோப்பைத் தொடரில் முதன்முறையாக"கோல் லைன்" தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். இதன் படி, பந்துக்குள் சிறிய அளவிலான "மைக்ரோ சிப்" பொருத்தப்பட்டு, இதிலிருந்து வரும் சிக்னல்கள் மூலம், முடிவை அறியலாம்.




உலக கோப்பை கால்பந்து தொடருக்கு தகுதி பெறுவது அவ்வளவு எளிதல்ல. இரண்டு ஆண்டுகளாக (2011, யூன் 15 முதல் 2015, நவ., 20 வரை) உலகின் பல்வேறு பகுதிகளில் நடந்த 820 தகுதிச்சுற்றுப் போட்டிகளின் முடிவில் தான், 31 அணிகள் இத்தொடருக்கு முன்னேறின. தொடரை நடாத்தும் நாடு என்ற அடிப்படையில் பிரேசில் அணி 32ஆவது அணியாக நேரடியாக தகுதி பெற்றது.



# கிண்ணம் வென்றது சானியா ஜோடி

போர்த்துக்கல் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா ஜோடி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

போர்த்துக்கல் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ஓய்ராஸ் நகரில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் இரட்டையர் இறுதிச்சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி 6-4, 6-3 என்ற நேர் செட்டில் எவா ஹிர்டினோவா (செக் குடி யரசு) வலேரியா சோலோவ் யவா (ரஷ்யா) இணையை வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றியது. இந்த ஆட்டம் 1 மணி 18 நிமிடங்கள் நடைபெற்றது. இந்த சீசனில் முதல் கோப்பையை பெற்ற இந்த ஜோடிக்கு எட்டு இலட்சம் ரூபா பரிசுத்தொகையும் 280 தரவரிசை புள்ளிகளும் கிடைத்தன.

# வெற்றியில் சதம்
## டோனி புதிய சாதனை

(புதுடில்லி)

ஐ.பி.எல். ருவெண்ரி-20 தொடரில் கடந்த 2ஆம் திகதி ராஞ்சியில் நடைபெற்ற போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கொல்கத்தாவை சாய்த்து 5ஆவது வெற்றியை பதிவு செய்தது. இந்த வெற்றியின் மூலம் கப்டன் டோனி புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். அதாவது கப்டன் டோனிக்கு ஒட்டுமொத்த ருவெண்ரி-20 கிரிக்கெட் வரலாற்றில் இது 100ஆவது (169 ஆட்டத்தில்) வெற்றியாக அமைந்தது. ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்சுக்காக 63 வெற்றிகள், சம்பியன்ஸ் லீக்கில் சென்னை சூப்பர் கிங்சுக்காக 10 வெற்றிகள், சர்வதேச ருவெண்ரி-20 கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக 27 வெற்றிகளை அவர் பெற்றுக்கொடுத்துள்ளார். இந்த மைல்கல்லை எட்டிய முதல் வீரர் இவர் தான். இந்தச் சாதனை பட்டியலில் டோனிக்கு அடுத்தபடியாக பாகிஸ்தான் முன்னாள் கப்டன் மலிக் (50 வெற்றி) இருக்கிறார்.

இதேவேளை, டோனி இந்திய அணியின் சொத்து என சென்னை அணியின் பயிற்றுவிப்பாளர் ஸ்ரீபன் பிளமிங் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அணி கப்டனான டோனி தற்போது நல்ல உடற் தகுதியுடன் உள்ளார். இவரால் இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுக்கு இந்திய அணிக்கு கப்டனாக பணியாற்ற முடியும். ஆனால் மூன்று நிலைகளில் (டெஸ்ட், ஒருநாள், ருவெண்ரி-20 ஆட்டம்) அவர் நீண்ட காலம் கப்டனாக இருப்பாரா என்று எனக்குத் தெரியாது. டோனியின் தலைமையின் கீழ் இந்திய அணியின் செயற்பாடு நன்றாக இருக்கிறது. அவர் இந்திய அணியின் சொத்து என்பதில் மாற்றுக் கருத்து இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

**ராஜஸ்தான் எதிர் கொல்கத்தா**

**இடம்:அமதாபாத்.நேரம்:மாலை 4 மணி**

**டில்லி எதிர் சென்னை**

**இடம் : டில்லி. நேரம் : இரவு 8 மணி**

# ஐ.பி.எல் துளிகள்...

எங்கள் அணி திறமையான வீரர்களைக் கொண்டது. ஆனால் சில நேரம் நன்றாக ஆடுகிறோம். சில சமயம் பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்படுகிறோம். ஒவ்வொரு போட்டிகளிலும் ஏதோ ஒன்றில் சொதப்புவதால் தான் தோல்வியைத் தழுவ நேரிடுகின்றது. இந்தத் தொடரில் நாங்கள் ஒரு குழுவாக ஒருங்கிணைந்து திறமையை வெளிப்படுத்த வேண்டியது அவசியம். இதுவரை அடைந்த தோல்விக்கு ஒழுங்கிணைந்து ஆடாதமையே காரணம்.

**கம்பீர் (கொல்கத்தா அணி கப்டன்)**

துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என அனைத்து வகையிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருவதே எமது அணி வெற்றிபெறக் காரணம். அடுத்து வரும் லீக் ஆட்டங்களிலும் எங்கள் அணியின் வெற்றி நடை தொடரும் என நம்புகிறேன். அணியின் வெற்றிக்காக பங்களிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பந்துவீச்சில் மட்டுமல்லாது, துடுப்பாட்டத்திலும் கணிசமாக ஓட்டங்கள் எடுத்து வருகிறேன். கடைசிக் கட்ட ஓவர்களில் விரைவாக ஓட்டங்கள் எடுப்பது மிகவும் முக்கியம். அதில் கூடுதல் கவனம் செலுத்துகிறேன். ஸ்மித், மக்கலம் தமது திறமைகளைச் சரியான முறையில் வெளிப்படுத்தி வருவதால் ஏனைய துடுப்பாட்ட வீரர்களின் சுமை குறைந்துவிடுகின்றது.

**ஜடேஜா (சென்னை)**

# டைசனுக்கு ஒரு வருடத் தடை

(கொலராடோ)


ஊக்கமருந்து பயன்படுத்திய அமெரிக்க தடகள வீரர் டைசன் கெய்யிற்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து, லண்டன் ஒலிம்பிக்கில் வென்ற வெள்ளிப்பதக்கத்தை திருப்பிக் கொடுத்தார்.

அமெரிக்க தடகள வீரர் டைசன் கெய், 100 மீ., (9.69 வினாடி), 200 மீ., (19.58 வினாடி) ஓட்டத்தில், மின்னல் வீரராக திகழ்ந்தார். போட்டிகள் இல்லாத நாட்களில், இவரிடம் இரண்டு முறை ஊக்க மருந்து சோதனை நடாத்தப்பட்டது.


இதில் கடந்த ஆண்டு நடந்த சோதனையில், டைசன் கெய் தடை செய்யப்பட்ட ஆன்ட்ரோஜெனிக் அனபாலிக் ஸ்டிராய்ட என்ற ஊக்கமருந்து பயன்படுத்தியது நிரூபணம் ஆனது. இதனால், இவருக்கு ஒரு ஆண்டு தடை விதிக்கப்பட்டது. இது கடந்த 2013, யூன் 23 முதல் நடைமுறைக்கு வந்தது. தவிர, கடந்த 2012, யூலை 15இல் முதன் முதலாக ஊக்கமருந்து பயன்படுத்தியுள்ளார்.

இதையடுத்து, குறிப்பிட்ட திகதியில் இருந்து இவர் பெற்ற பதக்கங்கள், பரிசுத் தொகைகளை திருப்பித் தரும் நிலை ஏற்பட்டது.

இந்த வரிசையில் 2012, ஆக., லண்டன் ஒலிம்பிக் 4X100 மீ., ரிலே ஓட்டத்தில், இவர் வென்ற வெள்ளிப்பதக்கத்தை, திருப்பிக் கொடுத்து விட்டார்.



# தேசிய சோட்டோகான் கராத்தே சென்.ஜோண்ஸீக்கு 5 பதக்கம்



(கொழும்பு)

இலங்கை ஷோட்டோகான் கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 7ஆவது தேசிய கராத்தே வல்லவர் போட்டியில் யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி வீரர்கள் நான்கு தங்கம் உட்பட ஐந்து பதக்கங்களை வென்றுள்ளனர்.

கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் வடக்கு மாகாணத்திலிருந்து பல வீர, வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

குமித்தே, தனிக் காட்டா, குழுக் காட்டா போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் 11 வயதுப் பிரிவுக்கான குமித்தே மற்றும் காட்டாப் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த வி. நிவேதன் தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார். மற்றும் 14 வயதுப் பிரிவுக்கான குமித்தேப் போட்டியில் துஷ்யந்தன் (சென். ஜோண்ஸ்), வெண்கலப் பதக்கத்தையும் 15 வயதுப் பிரிவுக்கான காட்டாப் போட்டியில் துஷ்யந்தன் (சென். ஜோண்ஸ்) தங்கப் பதக்கத்தையும் 15 வயதுப் பிரிவுக்கான குமித்தேப் போட்டியில் தனுஷன் (சென். ஜோண்ஸ்) தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். பதக்கம் வென்ற வீரர்களை, சென். ஜோண்ஸ் கல்லூரி அதிபர் வண. என். ஜே. ஞானப்பொன்ராஜா, விளையாட்டுப் பொறுப்பாசிரியர் குமணன், நிசான், பயிற்றுநர் சென்சே விஜயராஜ் ஆகியோர் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# வல்லவர் மெய்வல்லுநர் வடமாகாணம் அசத்தல்

(கொழும்பு)

57ஆவது தேசிய கனிஷ்ட வல்லவர் மெய்வல்லுநர் போட்டியில் வடமாகாண வீர,வீராங்கனைகள் 13 பதக்கங்களை வென்றுள்ளனர்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நேற்று நிறைவடைந்த இப்போட்டி அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்டது. இதில் வவுனியா மற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர, வீராங்கனைகளே பதக்கங்களை வென்றுள்ளனர்.

18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த தெய்த்தலி ஜொய்ஷன் 3.96 மீற்றர் பாய்ந்து சாதனையுடன் தங்கப் பதக்கத்தையும் 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த அ. பவித்திரா தங்கப் பதக்கத்தையும் இதே பிரிவில் எஸ். காவேரி 2.90 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் 23 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த டினுசன் 3.70 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும், இதே பிரிவில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த நிதர்சன் 3.90 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த அன்ரனி பிரசாத், றிசோத் ஆகியோர் 3.90 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் வென்றனர்.

இதேவேளை, 20 வயதுப் பிரிவு பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தர்சிகா 16.79 மீற்றர் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 3000 மீற்றர் வேக நடைப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். தமிழ்ச்செல்வம் 17 நிமிடம் 20 செக்கன்களில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கத்தையும் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான 5000 மீற்றர் வேக நடைப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே. கனகேஸ்வரி வெள்ளிப் பதக்கத்தையும் 18 வயதுப் பிரிவு வேக நடைப் போட்டியில் ஆர். ரமா வெண்கலப்பதக்கத்தையும் 20 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான வேகநடைப் போட்டியில் கே.கோகுலவாணி வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். (93,48)

# ஹொக்கில் யாழ்ப்பாணம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட ஹொக்கிப் போட்டியில் யாழ். மாவட்ட அணி இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இப்போட்டி சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்தை எதிர்கொண்ட யாழ். மாவட்டம் 4-0 என்ற கோல் கணக்கிலும் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்டத்தை எதிர்கொண்ட யாழ். மாவட்டம் 2-0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (93)




# கார்மேல் போய்ஸ் சம்பியன்

(நல்லூர்)

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட வடமாகாண அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை குருநகர் கார்மேல் போய்ஸ் அணி கைப்பற்றிக்கொண்டது.

40 அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 1ஆம் திகதி அரியாலை ஸ்டான்லி மைதானத்தில் நடைபெற்றது. இதில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும் பொற்பதி இந்து அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பொற்பதி இந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜன் 19 ஓட்டங்களைப் பெற்றார். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை கோபி சாய்த்தார்.

பதிலுக்கு 34 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பொற்பதி இந்து அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் றுக்மன் 11 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் செல்டன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக குருநகர் கார்மேல்போய்ஸ் அணியின் செல்டன், தொடர் ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த அஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (48)

# வலய மட்ட மேசைப்பந்தாட்டம் வெற்றியீட்டிய அணிகள் விபரம்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் வலய பாடசாலை அணிகளுக்கிடையிலான வலய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி 15 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, இரண்டாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மூன்றாமிடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, இரண்டாமிடத்தை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, மூன்றாமிடத்தை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய அணிகளும் பிடித்துக் கொண்டன.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, இரண்டாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மூன்றாமிடத்தை உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய அணிகள் பிடித்துக் கொண்டன.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, இரண்டாமிடத்தை உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய அணிகள் பிடித்துக் கொண்டன. (93)





முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மற்றும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நண்பர்களின் சமர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் வித்தியானந்தாக் கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. பாடசாலை அதிபர்களால் கிண்ணம் வழங்கப்படுவதையும், வெற்றிக் களிப்பை வித்தியானந்தாக் கல்லூரி அணி வீரர்கள் வெளிப்படுத்துவதையும் காணலாம். (எஸ்.பி.)



# வாழ்க முதலமைச்சர்!

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேதினக் கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ் வரன் ஒரு கருத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்திருகி றார். அதாவது "கேட் பாரின்றி அதிகாரத்தில் பிரபா-கரன் இருந்தார்" என வடமாகாண முதலமைச்சர் பொதுமேடைய-ில் வைத்து பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கில் அல்லது இலங்கையில் தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கும் அரசியல்வாதி ஒருவர் பிரபாகரனைப் பற்றி இவ்வாறு பகிரங்கமாக விமர்சிப்பது இதுவே முதல் தடவையென்று கூறலாம்.

முதலமைச்சர் யாழ்ப்பாணத்தில் வைத்தே பிரபாகரனைப் பற்றி இவ்வாறு கூறியுள்ளார். இதையே முதலமைச்சர் இலண்டனில் ரொறன்ரோவில் அல்லது லாசப்பலில் (பாரிஸில் யாழ்ப்பாணத்தவர்கள் கணிசமாக வாழும் பிரதேசம்) வைத்து கூறியிருந்தால் என்ன நடந்திருக்கும்? கற்பனை பண்ணிப் பார்க்க முடியவில்லை. அந்த இடத்திலேயே முதலமைச் சருக்குச் சமாதி கட்டப்பட்டி ருக்கும். அத்துடன் தமிழீழ தேசத்துரோகி என்ற வாசகமும் சமாதியில் பொறிக்கப்பட்டிருக்கும்.

எது எவ்வாறாயினும் முதலமைச்சரின் கூற்று வரவேற்கத்தக்கது. அத்துடன் முதலமைச்சர் நாளைய அரசியல்வாதிகளைப் போல் பல்டியடித்து அடுத்த நாள் மறுப்பு அறிக்கை விடவில்லை. தான் கூறியதை திரும்பவும் வலியுறுத்தி ஊடகங்களுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். இது பிரபா-கரனை வானத்திலிருந்து இறங்கி வந்த மீட்பனாக அல்லது தேவதூதனாகக் காட்டி அரசியல் செய்து வரும் சுயநலப் புலி ஆதரவாளர்க ளுக்கு விழுந்த முதலாவது சாட்டையடி.

முதலமைச்சரின் உரை காரணமாக கனடாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள புலி ஆதரவாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு வழங்கி வரும் ஆதரவையோ நிதியுதவி யை-யோ நிறுத்தக்கூடும். அடுத்த தேர்தலில் முதல மைச்சருக்கான விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை யில் சில வேளை வீழ்ச்சி ஏற்படலாம். ஆனால் ஈழத்தமிழர்கள் சுயவிமர்சனம் செய்யவேண்டிய தருணம் வந்து விட்டது என்பதையே முதலமைச்சரின் உரை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சுயநல அரசியல்வாதிகளைப் பற்றியும் முதலமைச்சர் பகிரங்கமாகக் கண்டித்துள்ளார். இதுவும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

பிரபாகரனைப் பற்றிப் பகிரங்கமாக விமர்சித்த முதலாவது தமிழ்த்தேசிய அரசியல்வாதி என்ற பெருமையையும் முதலமைச்சர் தட்டிக்கொள்கிறார் முதலமைச்சர் கூறியதை வேறு யாராவது கூறியிருந்தால் தமிழ்த்தேசிய ஊடகங்கள் கைக்கூலி, துரோகி, எச்சில் எலும்புத்துண்டுக்கு அலைபவர்கள், கழுவு-பவன் என்றெல்லாம் வசைபாடியிருக்கும். முதலமைச்சரை மட்டும் விட்டுவிட்டார்கள். வாழ்க முதலமைச்சர். ஏனைய தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளும் முதலமைச்சரின் வழியைப் பின்பற்றினால் எமது சமுதாயம் முன்னேற இடமுண்டு.

- ந.பரமேஸ்வரன்

# பாஸ்வேர்டுக்கான இரண்டு அடுக்கு பாதுகாப்பு முறை

பாஸ்வேர்ட்கள் முழுவதும் பாதுகாப்பானவை அல்ல என்பது பாஸ்வேர்ட் திருட்டு தொடர்பான செய்திகளில் இருந்து நமக்குத் தெரியும். தாக்காளர்கள் எனும் கம்ப்யூட்டர் கில்லாடிகள் நினைத்தால் இணைய-வாசிகளின் பாஸ்வேர்டை களவாடிவிடலாம் என்பது பலமுறை நிருபிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமா பாஸ்வேர்ட்களை களவாடுவதற்கு என்றே மால்வேர் எனும் வி்மத்தனமான ஆணைதொடர்களையும் பயன்படுத்துகின்றனர். நம்மை அறியாமலேயே கம்ப்யூட்டருக்குள் புகுந்து கொள்ளும் இந்த மால்வேர்கள். இமெயில் போன்றவற்றை நுழைய நாம் பாஸ்வேர்டை பயன்படுத்தும் போது உளவு பார்த்து தகவல் சொல்கின்றன.

இந்த பாஸ்வேர்ட் பிரச்சினைக்கு என்ன தான் தீர்வு?

நிபுணர்கள், இரு வழி பாதுகாப்பு முறையை முன்வைக்கின்றனர். அது என்ன இரு வழி பாதுகாப்பு முறை?

பாஸ்வேர்டை மட்டும் நம்பாமல் அதனுடன் கூடுதலாக இன்னொரு சரிபார்க்கும் அடையாளத்தை பயன்படுத்துவதையே இரு வழி பாதுகாப்பு முறை என்கின்றனர். ஆங்கிலத்தில் இது வுறழ ளவநி எநசஐ-கஉையவழைெ என்று சொல்லப்படுகிறது.

வீட்டில் கதவை பூட்டிவிட்டு அதற்கு மேல் சங்கிலியால் இன்னொரு பலமான பூட்டை பூட்டுவது உண்டல்லவா? அதே போல தான் இணைய சேவைகளை பயன்படுத்தும் போது முதல் கட்டமாக பாஸ்வேர்டை வைத்துக்கொண்டு இரண்டாவது கட்டமாக இன்னொரு அடையாளத்தை வைத்துக்கொள்கின்றனர். உதாரணத்திற்கு, நீங்கள் பாஸ்வேர்டை டைப் செய்தவுடன், உங்கள் செல்போனுக்கு ஒரு குறியீட்டு எண் அனுப்பி வைக்கப்படும். அந்த எண்ணை நீங்கள் டைப் செய்தால் மட்டுமே மேற்கொண்டு உங்களால் உள்ளே நுழைய முடியும். உங்கள் செல்போன் உங்களிடம் மட்டுமே இருக்கும் என்பதால் இந்த குறியீட்டு எண்ணை நீங்கள் மட்டுமே உள்ளீடு செய்ய முடியும்.

ஆக, தப்பித்தவறி உங்கள் பாஸ்வேர்ட் களவாடப்பட்டுவிட்டாலும் இந்த ரகசிய குறியீட்டு எண் தெரியாமல் யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது என்பதால் உங்கள் இணைய கணக்கு பாதுகாப்பானதாக இருக்கும். ஏனெனில் வேறு எந்த கம்ப்யூட்டரில் இருந்து பாஸ்வேர்ட்

# வரலாற்றுப் பார்வையில் $E = mc^2$

— வினவு —


**8**

ஐன்ஸ்டீன் சொன்னது மிகச்சரியென நிரூபிக்கப்பட்டாகி விட்டது. யுரேனியம், ரேடியம் போன்ற மூலகங்கள் கதிரியக்கத்தின் மூலம் ஆற்றலை வெளி யிடுவதை ஐன்ஸ்டீனின் சமன்பாட்டின் மூலம் விளக்க முடிந்தது.

லிசா மைட்னரும் பிரிட்சும் தங்களது கண்டுபிடிப்பான அணுக்கரு பிளப்பை பற்றிய ஆய்வுக்கட்டுரையை வெளியிடு கிறார்கள். ஆனால், ஜெர்மனியில் ஓட்டோ ஹான் தனது ஆய்வு முடிவு-களை சமர்ப்பிக்கும் போது நாஜிக்களின் நெருக்குதலால் அதில் யூதரான லிசாவின் பெயரை குறிப்பிடாமல் விட்டுவிடுகிறார். அணுக்கரு பிளப்பிற்கு 1944ஆம் ஆண்டில் ஹானுக்கு நோபல்பரிசு வழங்கப்படுகிறது. இரண்டாம் உலகப்போருக்கு பின்னரும் கூட ஹான், லிசா மெய்ட்னரின் பங்களிப்பை அங்கீகரிக்காமல் தாமே அணுப்பிளவை கண்டறிந்ததாக கூறுகிறார். ஆளும் வர்க்கம் மற்றும் அரசியல் காரணங்கள் கூட ஒரு விஞ்ஞானியின் கண்டுபிடிப்பை கண்டு கொள்ளாமல் செய்து விடும்.

1942ஆம் ஆண்டில் அமெரிக்காவில் "மான்ஹட்டன் திட்டம்" என்ற பெயரில் அணுகுண்டு தயாரிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடந்துவந்தன. அத்திட்டத்தில் பணிபுரிய லிசாவுக்கு வந்த அழைப்பை அவர் நிராகரித்து விடுகிறார். அவரு டைய மருமகன் றொபேர்ட் பிரிட்ஸ் நாஜி ஜெர்மனை தோற்கடிக்க அணு ஆயுதம் தேவை என நம்பி அத்திட்டத்தில் சேர்ந்து பணியாற்றுகிறார். அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு உணர்ச்சி சார்ந்த உத்வேகத்தை மக்கள் போராட்டங்களும், ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வுமே வழங்குகின்றன.

அமெரிக்காவின் மான்ஹட்டன் திட்டத்தில் செய்யப்பட்ட இரண்டு குண்டுகளில் ஒன்று 1945 ஆகஸ்டு 6ம் நாள் ஜப்பானின் ஹிரோசிமாவி லும் மற்றொன்று மூன்று



நாட்களுக்கு பின் நாகசாகியிலும் போடப்பட்டு, மனித குலம் இதுவரை கண்டிராத பேரழிவு நிகழ்த்திக் காட்டப்பட்டது. நூற்றாண்டு கால விஞ்ஞானிகளின் உழைப்பும், தியாகமும் முதலாளி களின் கையில் பேரழிவுக்கு பயன்படுத்தப்படுவது அதற்கு முன்பும், பின்னரும் தொடர்ந்து நடக்கின்றன.

ஐன்ஸ்டீனின் நுஸ்ரீஅஉ2 என்ற சமன்பாடு நமது சூரியனின் இயக்கத்தைப் பற்றியும், அதனுள் நடக்கும் அணுக்கரு பிணைப்பில் நிறை உருமாறி வெளிப்படும் பேரளவு ஆற்றலை விளக்க உதவுகிறது. நட்சத்திரங்களின் தோற்றத்தையும், வாழ்வையும், மறைவையும், பிரபஞ்சம் தோன்றியதையும், இயங்குவதையும் புரிந்து கொள்ள உதவுகிறது.

முதலில் பெரும் அழுத்தத்தில் இருந்த பேரளவு ஆற்றல், பெருவெடிப்பாக வெடித்து சிதறியது. அப்போது ஆற்றல், நிறையாக - பருப்பொருளாக மாறி இப்போது நாம் காணும் பிரபஞ்சத்தை உருவாக்கியிருக்கிறது.

இன்று அறிவியலாளர்கள், அணுத்துகள் முடுக்கிகளில் அணுத்துகள்களை ஒன்றுடன் ஒன்று மோதவிட்டு பெருவெடிப்பை ஆய்வக அளவில் செய்து பார்க்கின்றனர். சுவிட்சர்லாந்தில் நடத்தப்பட்ட அத்தகைய ஆய்வில் தான் கடவுள் துகள் எனப்படும் ஹிக்ஸ் போசான் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு உலகத்தைப் பற்றிய மனிதகுலத்தின் பார்வையையே ஐன்ஸ்டீனுடைய சமன்பாடு மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறது.

அறிவியல் கண்டுபிடிப்பாளர்களின் வரலாறு சில நேரங்களில் மகிழ்ச்சியானதாகவும், சில நேரங்களில் வலிமிகுந்ததாகவும் இருக்கிறது. ஆனால் இயற்கையை புரிந்து கொள்ள முனையும் மனிதனின் பேரார்வம் எப்போதும் முடிவுறுவதில்லை.


இந்த பிரபஞ்சத்தை தோற்றுவித்து அதன் எண்ணிலடங்கா இயக்கங்களையும், விசித்திரங்களையும் கடவுள்கள் தோற்றுவித் திருப்பதாக மதங்கள் இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கின்றன. கீதையிலும், குர்ரானிலும், பைபிளிலும் அனைத்து அறிவியல்களும் விளக்கங்களும் பொதிந்திருப்பதாக மதத்தை வைத்து பிழைப்போர் தொடர்ந்து ஓதி வருகின்றனர். பிழைப்பதற்கு ஓடிக்கொண்டிருக் கும் அப்பாவிகள் அதை நம்பவும் செய்கின்றனர்.

ஆனால் இந்த பிரபஞ்சத்தின் இயக்கத்தை உள்ளது உள்ளபடி எடுத்துக் கூறும் கடமையை மனித குலம் தனது கூட்டுழைப்பு சமூகப் போராட்டத்தால் சாதித்து அதை அறிவியலாளர்கள் மூலம் நிரூபித்திருக்கிறது.

இன்றைக்கு முதலாளித்துவம் அறிவியலை பிடித்து வைத்துக் கொண்டு அறிவுக்கு எதிராகவும், சந்தைக்கு ஆதரவாகவும் நடந்து வருவதால் நாம் மதங்களை முறியடித்து அறிவியலை அதன் பீடத்தில் வைத்து மரியாதை செய்ய முடியாமல் இருக்கிறது.

ஆனால் ஐன்ஸ்டீன் போன்ற அறிவியலாளர்கள் மதங்களையும், கடவுள் நம்பிக்கைகளையும் கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டு எல்லாம் மகாபாரதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது என்று கண்ணை மூடிக் கொண்டிருந்தால் இந்த அழகான உலகத்தை நாம் அறிந்திருக்கவும் முடியாது. இத்தனை தொழில்நுட்ப புரட்சிகளும் சாத்தியமாகியிருக்காது.

(முற்றும்)




**- சைபர்சிம்மன் -**

பயன்படுத்தப்பட்டாலும் அது இரண்டாம் கட்ட அனுமதியை கேட்கும். கையில் உங்கள் செல்போன் இல்லாவிட்டால் யாராலும் உங்கள் இணைய கணக்கிற்குள் நுழைய முடியாது.

“உங்களுக்கு தெரிந்த ஒன்று” மற்றும் “உங்களிடம் இருக்கும் ஒன்று” என இந்த இரு வழி அல்லது இரண்டு அடுக்கு பாதுகாப்பு முறை பிரபலமாக குறிப்பிடப்படுகிறது. பொதுவாக செல்போன்களே இரண்டாவது அடுக்கு பாதுகாப்பினை உறுதி செய்ய பயன்படுத்தப்படுகிறது. பாஸ்வேர்ட் பதிவு செய்யும் போதே உங்கள் செல்போன் எண்ணை சமர்ப்பித்தால், அந்த எண்ணுக்கு ரகசிய குறியீடு அனுப்பி வைக்கப்படும்.

தேடியந்திரமான கூகிள் இந்த இரண்டு அடுக்கு பாதுகாப்பை வழங்குகிறது. இது தொடர்பான உங்கள் இமெயில் கணக்கிற்கு கூட அவ்வப்போது தகவல் வந்திருக்கலாம். உண்மையில் கூகிள் தான் இந்த பாதுகாப்பை முதலில் வழங்கத் துவங்கியது. இதை நீங்களும் கூட உங்கள் ஜிமெயிலில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சமூக வலைப்பின்னல் சேவைகளான பேஸ்புக், ட்விட்டர், லின்க்டுஇன் போன்றவையும் இரண்டு அடுக்கு பாதுகாப்பை அளிக்கின்றன. வலைப்பதிவு சேவைகளில் வேர்ட்பிரஸ் இதை தருகிறது. கோப்பு பகிர்வு சேவையான ட்ரொப் பொக்சிலும் இந்த வசதி உண்டு.

இதே போல எந்த இணையத்தளங்கள் எல்லாம் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வசதியை அறிந்து கொள்ள விரும்பினால் அதற்காக என்றே இணையதளங்களும் இருக்கின்றன. http://evan-hahn.com/tape/two-factor-authlist/ இணையத்தளம், இரண்டு அடுக்கு பாதுகாப்பு அளிக்கும் இணைய சேவைகளை பட்டியலிட்டு காட்டுகிறது. அவற்றை பயன்படுத்துவதற்கான இணைப்பும் இருக்கிறது. http://twofactorauth.org/ இணையத்தளம் இந்த தகவல்களை இன்னும் விரிவாக அளிக்கிறது.

# அமெரிக்காவின் இராணுவச் செலவீனம்

**2013**இல் அமெரிக்கா தனது இராணுவத்துக்காக 633 பில்லியன் டொலர்களைச் (63,300 கோடி ரூபா) செலவு செய்துள்ளது. இது அதனது தேசிய வருமானத்தில் 5 வீதமாக இருப்பதுடன், அமெரிக்க அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் 20 வீதமாகவும் இருக்கின்றது. அத்துடன் உலக ரீதியிலான இராணுவச் செலவீனங்களில் இது 44 வீதமாகவும் இருக்கின்றது.

ஏனைய நாடுகளில் மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்காகவே தலையிடுவதாகக் கூறும் அமெரிக்கா, அதைச் செய்வதானால், முதலில் தனது அளவுக்கு அதிகமான இராணுவச் செலவீனங்களையும், சர்வதேச ஆயுத வியாபாரத்தையும் குறைக்க வேண்டும். அப்பொழுதுதான் அமெரிக்கா சொல்லும் காரணங்களை மக்கள் ஓரளவாவது ஏற்பார்கள்.


**(வானவில் 39)**



# வெளி நாடுகளிலுள்ள இலக்குகளை இப்போது குறிவைக்கும் இலங்கை!

**- கமெலியா நாதானியேல் கட்டுரையிலிருந்து.**

சிறிய தொகையினரான எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஏமாற்றி நாட்டை விட்டு தப்பியோடியவர்கள், போரின் பயனற்ற தன்மையை அவர்கள் தனிப்பட்ட முறையில் அனுபவப் பட்டிருந்த போதிலும், உயிர் வாழ்வதற்காக, போருக்கு ஆதரவளித்து தற்போதும் எஞ்சியிருக்கும் எல்.ரீ.ரீ.ஈ யின் சர்வதேச வலையமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி வருகிறார்கள். அவர்கள் குற்றவியலிலும் மற்றும் பயங்கரவாதத்திலும் மட்டுமே நிபுணத்துவம் பெற்றிருப்பதால், மையநீரோட்டத்தில் இணைந்து வாழ்க்கையை முன்னெடுப்பதற்குப் பதிலாக அவர்கள் எல்.ரீ.ரீ.ஈயை ஒன்றிணைக்க முயற்சித்து வருகிறார்கள்.




யாழ்ப்பாணம் வரணியில் 1964 நவம்பர் 10 இல் பிறந்த சேகரப்பிள்ளை விநாயகமூர்த்தி என்கிற விநாயகம், ஐந்து பிள்ளைகள் உள்ள குடும்பத்தின் மூன்றாவது பிள்ளையாவார். அவர் எல்.ரீ.ரீ.ஈயில் 1985 இல் இணைந்து அடிப்படை பயிற்சியை வடமராட்சி பகுதியில் பெற்றார். அவரது இராணுவ பயிற்சியை முடித்துக்கொண்ட பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தின் இராணுவ தாக்குதல் குழுவின் ஒரு தீவிர அங்கத்தவராக இயங்கினார். 1985 - 1990 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்பு படையினரின் ரோந்து மற்றும் தொடரணிகள் மீது இடம்பெற்ற சிறியரக ஆயுதத் தாக்குதல்கள் பலவற்றில் அவர் பங்கெடுத்திருந்தார். 1990இல் ஈழப் போர் -2 இன் ஆரம்பகட்டத்தில் விநாயகம் பி.ஓ. பிரிவுக்கு (அது தமிழ் ஈழ புலனாய்வுப் பிரிவின் குறியீட்டுப் பெயர்) மாற்றப்பட்டு புலனாய்வைக் கையாளும் முன்னணி முகவராக மாறினார், அதைத் தொடர்ந்து முக்கிய முகவர்களை கையாளும் நியமனத்துக்கு உயர்த்தப்பட்டார். அவர் பாலம்பிட்டி வடக்கில் ஒரு உளவுத்துறை சிறு குழுவொன்றை அமைத்திருந்தார், அது மன்னார், கொழும்பு மற்றும் புத்தளம் மாவட்டங்களின் தகவல்களைச் சேகரிக்கும் பொறுப்பினைக் கொண்டிருந்தது.


Vinayagam

காட்டுப் போர்முறை உத்திகளில் ஒரு தொழில் முறை நிபுணராக கருதப்பட்ட அவரிடம், குஞ்சுக்குளம், மறிச்சுக்கட்டி, புத்தளம் மற்றும் கொழும்பு பாதையூடாக கரும்புலிகளை கொழும்புக்கு அழைத்துச் செல்லும் பணி பலமுறை ஒப்படைக்கப் பட்டிருந்தது. 1998 இல் மத்திய வங்கியை வெடிக்க பயன்படுத்திய வெடிபொருட்கள் விநாய கம் மூலமாகவே கொண்டு செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. அதற்கு மேலும் தளபாடங்கள், நிதி மற்றும் அங்கத்தவர்களை, மத்திய வங்கி மற்றும் கட்டுநாயக்கா விமானநிலையம் போன்ற கொழும்பில் நடத்தப்படும் பிரதான தாக்குதல்களில் பயன்படுத்துவதற்காக அனுப்பி வைத்ததற்காக இயக்கத்தினால் அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவம் முன்னேறியபோது விநாயகம் வன்னிக்கு வெளியில் இருந்தார், அதனால் இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ தோற்கடிக்கப்படுவதற்கு முன்னரே அவரால் இந்தியாவுக்கு தப்பிச்செல்ல இயலுமானதாக இருந்தது. அதன்பின் ஒக்ரோபர் - நவம்பர் 2009 இல் அவர் லண்டனுக்குப் பறந்தார். பிறகு, விநாயகம் ஐரோப்பா கண்டத்தின் பெருநிலப் பகுதிக்குச் சென்று பரிசில் அரசியல் தஞ்சம் கோரினார். எல்.ரீ.ரீ.ஈயின் புலனாய்வு செயற்பாட்டாளர்களின் நெருக்கமாக பிணைந்த பிரிவு ஒன்றைத் தன்னுடன் வரவழைத்துக் கொண்டு அதன் ஏக தலைவராக இருந்து வருகிறார்.

இலங்கை அதிகாரிகள் சேகரப்பிள்ளை விநாயகமூர்த்தி என்கிற விநாயகத்தைக் கைது செய்வதற்காக 24 நவம்பர் 2010 இல் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஒருபிடியாணையை பெற்றுள்ளார்கள். விநாயகம் செயல்படும் பகுதிகள் தேசிய எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகள் என்பதால், இலங்கை அதிகாரிகள் சர்வதேச குற்றவியல் காவல்துறை அமைப்பின் (இன்டர்போல்) சேவையை பெற்று அவரது பயங்கரவாத குற்றம் சம்பந்தமாக ஒரு சிவப்பு எச்சரிக்கையை வெளியிடச் செய்யலாம். விநாயகம் பற்றிய ஒரு விரிவான கோப்பு தொகுக்கப்பட்டு உலகெங்கிலுமுள்ள சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் விநாயகம் மற்றும் அவரது தலைமையில் வழிநடத்தப்பட்ட தலைமையகக் குழுவை சேர்ந்த சர்வதேச ரீதியில் செயல்படும் ஏனைய 15 எல்.ரீ.ரீ.ஈ சார்பு அமைப்புகளையும் ஐநா பாதுகாப்புச்சபை தீர்மானம் 1373யை (இது அமெரிக்காவில், 2001 செப்ரம்பர் 11ல் நியுயோர்க் இரட்டை கோபுர தாக்குதல் நடைபெற்ற பின்னர் 2001 செப்ரம்பர் 28ல் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டது) பயன் படுத்தி 21 மார்ச் 2014ல் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனப்படுத்தியுள்ளது.

ஏப்ரல் 2014ல் இலங்கை அதிகாரிகள் இன்டர்போலின் சிவப்பு எச்சரிக்கையை விநாயகத்தின் தலைமையக குழுவை சேர்ந்த மூன்று தலைவர்களான, விநாயகம், றெஜி மற்றும் அம்புருஸ் உட்பட 40 எல்.ரீ.ரீ.ஈ செயல்பாட்டாளர்களுக்காகப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். விநாயகத்தின் தலைமையில் இயங்கும் இந்த தலைமையகக் குழு பரிசில் எல்.ரீ.ரீ.ஈ தலைவராக இயங்கிவந்த நெடியவன் குழுவை சேர்ந்த பரிதி அல்லது றீகன் என்கிற நடராஜா மதிதரனை 2012, நவம்பர் 13ல் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படுகிறார்.

தற்சமயம் வெளிநாட்டில் இயங்கிவரும் எல்.ரீ.ரீ.ஈ கட்டமைப்புகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர விநாயகமும் அவரது குழுவினரும் பெரும் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். 2009ல் விநாயகம் இலங்கையை விட்டு தப்பிச் சென்றதின் பின்னர் அவரது நடத்தையில் ஒரு சீரான அர்ப்பணிப்பு இருப்பதற்கான சான்றுகள் உள்ளன. விநாயகம் மற்றும் அவரது தலைமையக குழுவினர் தொடர்ந்து இரகசியமாகச் செயற்பட்டு இலங்கையில் பயங்கரவாத தாக்குதல்களை மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் உள்ளன.

விநாயகம், இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தப்பிச் சென்று பின்னர் பிரான்சுக்கு சென்று மனிதக்கடத்தல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தல் என்பவைகளை புரிந்து வரும் எல்.ரீ.ரீ.ஈயின் ஆதரவு வலையமைப்பை மெருகேற்றி வருகிறார். தான் தலைமையக குழுவை சேர்ந்தவர் என அவர் கூறிவருகிறார். தலைமையக குழு என்பது உண்மையான எல்.ரீ.ரீ.ஈ - வெளிநாட்டில் ஆதரவு வலையமைப்பில் பணிபுரிபவர்கள் அல்ல. வெளிநாட்டிலிருந்து யுத்தத்துக்கு ஆதரவு வழங்கி அதை செயற்படுத்த உதவியவர்களை மதிப்பதாக விநாயகம் வெளியில் சித்தரித்தாலும்கூட, தான் வித்தியாசமானவர் என அவர் நம்புகிறார், ஏனெனில் அவர் எல்.ரீ.ரீ.ஈயில் அதன் முடிவு வரை சேவையாற்றியவர் என்றபடியால் தான் வித்தியாசமானவர் என அவர் எண்ணுகிறார்.

விநாயகம் ஒரு முன்னிலை யுத்தகள வீரராக பணியாற்றவில்லை, ஆனால் ஒரு புலனாய்வு செயற்பாட்டாளராக சாதுர்யமான பயங்கரவாத தாக்குதல்களை தென்பகுதியில் குறிப்பாக தலைநகர் கொழும்பில் திட்டமிட்டு நடத்தியவர். எல்.ரீ.ரீ.ஈ அதனது தற்கொலை பயங்கரவாதம் காரணமாக உலகளாவிய ரீதியில் மோசமான பெயரெடுத்துள்ளது, விநாயகத்தின் சிறப்புத் தகுதி புலனாய்வுத் தகவல்களை ஒன்றுதிரட்டி தற்கொலை குண்டு வீச்சுகள்ளையும், கொலைகளையும் மற்றும் தாக்குதல்களையும் நடத்துவதே. சந்தேகமில்லால் சர்வதேச ரீதியாக செயல்படும் ஏனைய எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களுடன் - அமெரிக்காவின் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், நோர்வேயில் உள்ள நெடியவன் என்கிற பேரின்பநாயகம் சிவபரன், ஐக்கிய இராச்சியத்தின் பிதா இமானுவேல் - ஒப்பிடும்போது பிரான்சில் வசிக்கும் விநாயகம் மிகவும் அபாயகரமானவர் என்று அரசு கருதுகிறது.

பொட்டு, கபிலம்மான், மாதவன் மாஸ்ரர், ஆகியோருக்கு பிறகு விநாயகம் தலைவராக உள்ளார், மற்றும் பொதுமக்களை கொன்று பொதுமக்களின் உட் கட்டமைப்புகளை அழித்த பல தாக்குதல்களை இயக்கியும் நடத்தியும் இருப்பதற்கு அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாகிறார். பயங்கரவாத உபகரணங்கள், உத்திகள், தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவு மட்டுமல்லாமல், ஒரு பயங்கரவாத பிரச்சாரத்தை மீண்டும் ஆரம்பிக்கும் உந்துதல் உடையவராகவும் உள்ளார்.

# செஞ்சிலுவைச் சங்கத்தின் மக்களுக்கான மனித நேயப்பணி



1828ஆம் ஆண்டு மே 08ஆம் திகதி சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றி டுனான்ட் வர்த்தக நோக்கமாக 1859 ஆம் ஆண்டு இத்தாலிக்கு சென்ற போது பிரான்ஸிற்கும், இத்தாலிக்கும் சொல்பரினா என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் பெரும்பாலான படை வீரர்கள் உயிரிழந்தும் காயப்பட்டும் காணப்பட்டார்கள் இதை கண்ணுற்ற ஹென்றி டுன்ான்ட் அவர்கள் காப்பாற்றுவதற்காக உயிரற்ற உடல்களை வெளியேற்றுவதற்காகவும் பல தொண்டர் அமைப்பினை உடனடியாக உருவாக்கி முதலுதவிகளையும் மருத்துவ உதவிகளையும் வழங்கி பலரைக் காப்பற்றினார் இப்போரில் தான் கண்ட காட்சியை வைத்து 1862ஆம் ஆண்டு சொல்பரினா நினைவுகள் (Memory) 0f Solfrina) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் சர்வதேச ரீதியில் செஞ்சிலுவைச் சங்கம் உருவாக்குவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஹென்றி டுனான்ட் அவர்களால் உருவாக்கப்பட்டது. இதில் இரு விடயங்களை இப்புத்தகத்தில் வலியுறுத்தினார்.

1) போர்க் காலங்களில் காயப்பட்டவர்களை கவனிப்பதற்கு தொண்டர்கள் இணைக்கப்பட வேண்டும்.

2) இத் தொண்டர்களையும், பாதிக்கப்பட்ட மக்களையும் பாதுகாக்க சர்வதேச சட்டங்கள் ஏற்படுத்தி, சர்வதேசம் அவற்றை அங்கீகரிக்க வேண்டும்.

அவர்பிறந்த தினத்தையே செஞ்சிலுவை தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகின்றது. முதலில் 16 நாடுகளை ஒன்றாக இணைத்து செஞ சிலுவைச் சங்கத்தை உருவாக்கியது. இன்று 192 நாடுகளில் செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவினை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது. செஞ்சிலுவை வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக உருவாக்கப்பட்டதாகும். இது ஜெனிவர்நாட்டின் தேசியக் கொடியாகிய வெள்ளை சிலுவையுடன் சிவப்பு பின்னணியை மாற்றி அமைத்ததாகும்.

இதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு வேறாக செஞ்சிலுவை பிறையும் வெவ்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. இது பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் வாழுகின்ற நாட்டில் ஆகும். இது இரண்டையும் இணைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சின்னமாக பயன்படுத்துகின்றது.

**1) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு (International Committee of Red Cross)**

1863ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவை சங்கக்குழு ஆயுத தோ்தல்களினாலும் உள்நாட்டு கலகங்களினாலும் பாதிக்கப்படும், மக்களுக்கு சர்வதேச நாடுகளினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நடுநிலமையான மனித நேய அமைப்பாகும். இது பல்வேறுபட்ட அமைப்புக்களால வழங்கப்படும் நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும் ஓர் நிறுவனமாகும். அத்தோடு துன்பப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் ஒருமனிதநேய அமைப்பாகும். இவ் அமைப்பு போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதுடன் போர் காலங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நியமனங்களை பற்றி வலியுறுத்தும் அமைப்பாகும். இன்று மாறிவரும் ஆயுத மோதல்கள் இந்த அமைப்பின் செயற்பாடு மாறி வரும் ஆயுத பயன்பாட்டினால் பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது. இருந்தும் அது தன்னுடைய சேவையை செவ்வனவே மேற்கொண்டு வருகிறது.

**2) தேசிய சங்கங்கள்**

உலகளாவிய ரீதியில் 192 நாடுகளுடன் இயங்கி வருகின்றது. இவை அந்தந்த சொந்த நாடுகளில் சுகாதார சேவை, சமூக சேவை,அனர்த்த நிவாரணம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி, மருத்துவ சேவைகள் என பல்வேறுபட்ட மனிதாபிமான சேவைகளை அரசுக்கு துணையாக அந்தந்த நாட்டிலே செயற்பட்டு வருகின்றது. அத்துடன் தனது கொள்கைகளை அந்தந்த நாடுகளிலே விரிவு படுத்தி வலைப்பின்னல் அமைப்பை கொண்ட ஒரு மனிதாபிமான நிறுவனமாகும்.

**3) சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் (International Federation of Red Cross and Red Crescent Societies)**

1919ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 192 நாடுகளினால் ஜெனிவாவில் கையொப்பமிடப்பட்டு உருவாக்கப்பட்ட சங்கமாகும். இது இன, மத வர்க்க சமூக வேறுபாடின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு நிவாரணப்பணிகளை செய்து வருகின்றது.

**4) இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்**

1963 ஆம் ஆண்டு மலேரியா நோயைக் கட்டுப்படுத்த இலங்கையில் பிரித்தானிய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. 1948 இல் இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னர் சிலோன் செஞ்சிலுவை எனப் பெயரிடப்பட்டது. 1972 ஆம் ஆண்டு சிலோன் செஞ்சிலுவைச் சங்கம் என இலங்கை செஞ் சிலுவைச் சங்கத் பெயரிடப்பட்டு செயற்படத் தொடங்கியது. இச் சங்கம் அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதுடன் அனர்த்தம் ஏற்படும் போது அதை எதிர்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி, அடிப்படை சுகாதார சேவை, இயற்கையால் மனிதனுக்கு விழிப்புணர்வு,எயிட்ஸ், டெங்கு போன்றன மக்கள் மத்தியில் செஞ் சிலுவைச் சங்க பரப்புரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வைத்தியசாலை புனரமைப்பு போன்ற சேவைகளை செய்து வருகின்றது.


**5. இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையாக இது இயங்கி வருகின்றது. இது யுத்த காலங்களில் பல்வேறுபட்ட பணிகளைச் செய்த இச் சங்கம் ஊரடங்கு நேரங்களில் 24 மணித்தியாலங்கள் அம்புலன்ஸ் சேவையை செய்து மக்களுடன் இணைந்து சிறப்பாகச் சேவையை செய்து வந்தது. பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு நிவாரணங்கள், மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டன. வைத்திய சாலைகள் புனரமைத்துக் கொடுத்தல் என்பனவற்றையும் செய்து வந்தது. யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**(உதாரணம்- (இந்திய வீட்டுத்திட்டம்)**

இயற்கை மற்றும் மனித செயற்கை அழிவுகளால் பாதிப்புறுவோரின் நலன்களை மனிதாபிமான அடிப்படையில் சாதி,சமய, வர்க்க, பால், இன, மொழிப்பாகுபாடின்றி மனிதநேயம், பாரபட்சமின்மை நடுநிலமை, சுயாதீனம், ஒருமைப்பாடு, சர்வதேசமயம், தொண்டர் சேவை என்ற 7 கொள்கைகளுக்கு அமைவாகச் செயற்படுவதே செஞ்சிலுவைச் சங்கங்களின் குறிக்கோளாகும். செஞ்சிலுவைச் சங்கங்களின் பலம் அதன் மிகப் பரந்த தொண்டர் சக்தியாகும்.

இதுவரை இச் சங்கம் ICRC வெளிநாட்டு தேசிய சங்கங்களின் IFRC போன்றவற்றின் உதவியு டன் செயற்பட்டன. ஆனால் IFRC தவிர்ந்த ஏனைய சங்கங்களின் உதவிகள் தற்போது கிடைப்பதில்லை. எனவே 2013-2015 காலகட்டத்துக்கான மீள் கட்டமைப்பு (BEYOND RE ENGINEERING) எனற கொள்கையை வகுத்து ஒவ்வொரு மாவட்ட கிளைக்கும் தானாகவே கிடைக்கக் கூடிய பொருளாதார பலத்தையும் ஏனைய தொழில்நுட்ப வளத்தையும் மனித வளத்தையும் கொண்டதாக அமைப்பதற்கு சொந்தமான ஊர் வருமானத்தை உருவாக்கப்படல் வேண டும்.என புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த அடிப்படையில் தான் யாழ்.கிளையும் வருமானம் ஈட்டக்கூடிய ஒரு தொழிற்பாட்டினை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. Way Formard Towards Self Sustainef Well Funcationing Branches) 2014-2015 இருந்தும் இச் செயற்பாட்டைத் தொடரமுடியாத நிலையில் உள்ளது.



**சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் செஞ்சிலுவைதினம் எதிர்வரும் 8ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.**

**கு.பாலகிருஸ்ணன்**
தலைவர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்.கிளை

## ரஸ்ய....

எப்படி இந்த பிற்போக்கு யாழ்.மையவாத அரசியல் சக்திகள் உருவாகுவதற்கு முன்னர் தமிழர் வாழ்வில் உருவான யாழ்ப்பாண மாணவர்-வாலிபர் காங்கிரசை ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமிழ் இனவாத அரசியலின் மூலம் ஓரம் கட்டினாரோ, அதேபோல வரலாற்றில் இரண்டாவது தடவையாக ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில் உருவான முற்போக்கான தமிழ்த் தேசியவாத இயக்கங்களையும் புலிகள் மூலம் யாழ்.மையவாத தமிழ் பிற்போக்குத் தலைமை ஒழித்துக் கட்டியது.


இலங்கையில் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் ஏதோ ஒரு வகையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் இருக்க, தமிழ் மக்களில் பெரும்பாலானோர் தொடர்ந்தும் ஏகாதிபத்திய சார்பு அணியில் இந்தப் பிற்போக்குத் தலைமைகளால் வைத்திருக்கப்படுகின்றனர். இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இழுத்தடித்துச் செல்லப்படுவதற்கு இதுதான் அடிப்படைக் காரணம்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து தமது பிரச்சினைகளுக்கும், நாட்டின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதை இச்சக்திகள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதையே இந்தத் தொடர் நிலைமைகள் மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டி வந்துள்ளன. இதற்காகவே அமெரிக்காவை மையமாகக் கொண்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், புலம்பெயர் நாடுகளில் உள்ள புலிகளின் அமைப்புகள், தமிழகத்தில் உள்ள திராவிடப் பிழைப்புவாத அமைப்புகள், இலங்கைக்கு எதிராக மேற்குலக சக்திகளால் எடுக்கப்படும் பல்வேறு நடவடிக்கைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் என இந்தப் பிற்போக்கு சக்திகள் வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் ஒரு பலமான அணியை உருவாக்கிச் செயற்படுகின்றனர்.

இப்படியான ஒரு சூழலில் தமிழ் மக்களின் நலன் கருதிச் செயற்படுபவர்களுக்கு முன்னால் ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது அவர்கள் இந்த பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான அனைத்து தமிழ் முற்போக்கு - ஜனநாயக சக்திகளையும் ஒரு குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையிலாவது ஓரணியில் திரட்டிச் செயற்படுவதுதான் அது. அவ்வாறு செயற்படாவிட்டால் தொடர்ந்தும் ஏகாதிபத்திய சக்திகளினதும் அவர்களுக்கு ஆதரவான உள்நாட்டுப் பிற்போக்கு சக்திகளினதும் எடுப்பார் கைப்பிள்ளைகளாகவே தமிழ் மக்கள் இருப்பர்.

# எதிர்கால சந்ததியினரின் வாழ்வில் ஆங்கிலம் இன்றியமையாத ஒன்று

## வேலணைப்பிரதேச சபைத்தலைவர் தெரிவிப்பு



வாழ்வுநிலை மாற்றமடைந்து எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை நிலையில் ஆங்கிலம் இன்றியமையாததாக காணப்படுவதால் அனைவரும் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வேலணைப் பிரதேசசபைத் தலைவர் சின்னையா சிவராசா தெரிவித்தார்.

தீவகத்தில் முதல் முதலாக ஒரேயொரு ஆங்கில சர்வதேசப் பாடசாலையொன்று கடந்த வியாழக்கிழமை காலை 9 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இப்பாடசாலையினை ஈ.சிற்றி ஆங்கிலக் கல்வி நிலையத்தின் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், வேலணை பிரதேச சபைத்தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்) ஆகியோர் திறந்து வைத்தனர். இப்பாடசாலையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நம் மத்தியில் தீவகத்தில் முதல் முதலாக ஒரேயொரு சர்வதேச ஆங்கில பாடசாலை திறக்கப்படுவது மிகவும் மகிழ்சியளிப்பதோடு வாழ்வு நிலை மாற்றமடைந்து எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை நிலையில் ஆங்கிலம் இன்றியமையாததாக காணப்படுவதால் அனைவரும் கிடைக்கின்ற வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தீவக கல்வி வளர்ச்சியிலும் நாம் அனைவரும் கவனமெடுக்கவேண்டும். வடமாகாணத்தில் காணப்படும் அனைத்து அரச திணைக்களங்ளிலும் எமது பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் உயர் நிலையில் காணப்படுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது இந்நிலை எப்போதும் காணப்படுவதற்கு கல்வியில் மாணவர்கள் சிறப்பாகச் செயற்படுவதற்கும் அவர்கள் உயர்நிலையைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் பல முன்னெடுப்புக்களை முன்னெடுத்து வருகின்றோம். என்றார்.

கலைமகள் கல்வி நிலையத்தின் உத்விப்பணிப்பாளர் சிந்து மயூரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.சிற்றி ஆங்கிலக் கல்வி நிலையத்தின் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவனும், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேசசபை தவிசாளர் சின்னையா சிவராசா (போல்), கௌரவ விருந்தினர்களாக கிராம சேவையாளர் பரமேஸ்வரன், ஓய்வுபெற்ற ஆசிரியர் திசாநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (63)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிமூல பயிற்சி நெறிகள்

பட்டதாரிப் பயிலுனர்களாக கடமையாற்றி அரச சேவையில் உள்ளீர்க்கப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றி வரும் அலுவலர்களுக்கான தமிழ் மொழி மூலமான பயிற்சி நெறிகள் இன்று திங்கட்கிழமை முதல் யாழ். மாவட்ட செயலகத்தில் நடாத்தப்படவுள்ளது.

காலை 08.30 மணி தொடக்கம் பிற்பகல் 04.30 மணிவரை நடைபெறவுள்ள இப் பயிற்சி நெறிகள் மூன்று குழுக்களாக நடைபெறவுள்ளன. குழு ஒன்றுக்கான பயிற்சிகள் இன்று முதல் 09 திகதி வரையும் குழு இரண்டுக்கான பயிற்சிகள் 19 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரையும் குழு மூன்றுக்கான பயிற் சிகள் யூன் 02 ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிகளில் கலந்து கொள்ளவுள்ளவர்களுக்கான கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது பயிற்சியில் கலந்து கொள்ளுமாறும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் பயிற்சிக் காலத்தின் போது கலந்து கொள்ளும் அலுவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு தலா 100 ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் வேறு பயணப் படிகளோ அல்லது இணைந்த படிகளோ வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## மக்களுக்கு அரச காணிக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கல்

(வேலணை)

தீவகம் தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அரச காணிகளில் குடியேறியுள்ள மக்களுக்கான காணி வழங்கல் சம்பந்தமான காணிக் கச்சேரி ஒன்று சென்றவாரம் இடம்பெற்றிருந்தது.

வேலணை மற்றும் புங்குடுதீவில் உள்ள சங்கத்தாகேணி ஈரம் புளியடி ஆகிய இடங்களில் உள்ள அரசகாணியில் குடியேறிய மக்களுக்கு அரசகாணிக்குரிய அனுமதிப்பத்திரம், அல்லது உறுதிகளை வழங்கியுதவும் முகமாக இந்தக் காணிக்கச்சேரி வேலணை பிரதேச செயலர் திருமதி.மஞ்சுளாதேவி சதீஷனால் நடாத்தப்பட்டது. (05)

# தமிழ்மொழித்தின போட்டி யாழ். கோட்ட மட்ட முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்ட மட்ட தமிழ்மொழித்தின போட்டி முடிவுகள் கோட்டக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு:

நடனம்-தனி பிரிவு -5

க.மாதுரி (யா/திருக்குடும்பக்கன்னியர்மடம்), உ.உதயசீலன் (யா/கொழும்புத்துறை இ.ம.வித்தி.), யூ.பிருந்தாரவீந்தினி (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

நடனம்- குழு

(யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை),

நாட்டிய-நாடகம்

(யா/வேம்படி மகளிர் உ.த.பாடசாலை), (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

நாட்டார் பாடல்

(யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி), (யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), (யா/சன்மார்க்க மகா வித்தி)

"வில்லுப் பாட்டு"

(யா/சென் ஜோண்ஸ் கல்லூரி), (யா/கொழும்புத்துறை துரையப்பா.வித்தி.)

விவாதம்

(யா/யாழ் மத்திய கல்லூரி), (யா/சென் ஜோண்ஸ் கல்லூரி), (யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி),

தமிழறிவு வினாவிடை

(யா/சென் பற்றிக்ஸ் கல்லூரி), (யா/சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), (யா/திருக்குடும்பக்கன்னியர் மடம்)

முஸ்லிம் கலாசார நிகழ்ச்சி

(யா/ ஒஸ்மானியாக் கல்லூரி), (யா/வைத்தீஸ்வராக் கல்லூரி) (முற்றும்)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

நான் வெளிநாடு செல்ல இருப்பதனால் எனது அம்மாவையும் மனைவியையும் பார்த்து சமைத்துக் கொடுத்து தனது குடும்பத்தில் இருவரைப்போல் இருப்பதற்கு பணிப்பெண் ஒருவரை உடனே எதிர்பார்க்கிறோம். சம்பளம் 15,000-20,000 வரை வழங்கப்படும் Colombo-6 தொடர்புக்கு 0724581732, 0117209530.

---

எங்கள் சிறிய குடும்பத்திற்கு நாங்கள் இருவரும் வேலைக்கு செல்வதால் வீட்டை சுத்திகரிப்பு செய்து கொண்டு வீட்டில் ஒருவரைப்போல் இருப்பதற்கு 30 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் 18,000-25,000 தொடர்புக்கு 0315676004, 0712886901.

---

கண்டியில் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏராளமான வேலைவாய்ப்புகள் வீட்டுப் பணிப்பெண்கள், Drivers, Watchers,Gardenrs தேவை உணவு, தங்குமிட வசதி இலவசம். சம்பளம் 15,000-20,000 மேல் தொடர்புக்கு 0814951080, 0772141010.

---

தற்போது நீர்கொழும்பில் ஆண், பெண் இருபாலாருக்கும் ஏராளமான வேலை வாய்ப்புக்கள் தங்கி வேலை செய்யக்கூடிய வீட்டுப் பணிப்பெண்கள், பாதைகள், நன்கு அனுபவமுள்ள Drivers, Hotel boys,Room boys, Cooks, காவலாளி, Couples, baby Sitters, வயதெல்லை 20-60 சம்பளம் 20.000-30.000 உணவு, தங்குமிட வசதி இலவசம் தொடர்புக்கு 0314938485, 0770133002.

---

கொழும்பில் அமைந்துள்ள பிரபல்யமான Indian Restaurantf;F நல்ல Experience உள்ள Cook போன்ற வெற்றிடங்கள் உள்ளன. உடன் விண்ணப்பிக்க வும். சாப்பாடு, தங்குமிடம் உண்டு சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்புக்கு 0773506945 இந்த அரிய வாய்ப்பை தவரவிடாதீர்கள்.

---

இன்றே தொழில் வாய்ப்பினை பெறுவோம். எதிர்கால வாழ்க்கையை இன்பமாக்குவோம். பல நவீன தொழிற்சாலைகளான ஜேம் PVC தேயிலை பர்மா. போன்ற பல தயாரிப்புகளுக்கு உற்பத்தி,லேபல், பொதியிடல், களஞ்சியம், பிரிவுக்கு 17-50 ஆண், பெண் உடனடியாகத் தேவை உணவு, தங்குமிடம் குறைந்த விலையில் சம்பளம் முதல் மாதம் 19,000பின் 25,000 இரண்டாவது மூன்றாவது மாதம் 28,000- 32,000 பெறலாம் நண்பர்கள், குழுக்கள் ஒரே இடத்தில் வருகை அன்றே வேலை வாய்ப்பு விசேடம் கல்வித் தகைமை சிங்களம் அவசியமல்லை. தொடர்புக்கு 0776838231.

---

உங்களது எதிர்பார்ப்பு விமான நிலையம், துறைமுகத்தில் வேலை பார்ப்பதா? இதோ எம்மொடு இணையுங்கள் கொழும்பு (தனியார்) காபெயின்டர் வெல்டர் இலக்ரீசியன், பெயின்டர் கிளீனிங், லொன்றி, கேட்டரிங், கையுதவியாட்கள் போன்றோர் உடன் சேர்க்கப்பட உள்ளன. சம்பளம் 18,000,25,000,38,000,48,000 வரை உணவு, தங்குமிடம் சகாய விலையில் (சிங்களம்பேசக்கூடிய A/L முடித்த ஆண்கள் வயது 18-29) மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைவாய்ப்பு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 0774312176, 0777662129.

---

யாழ். நகரில் தோட்டத்துடன் கூடிய பெரிய வீடு ஒன்றினைப் பராமரிப்பதற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய ஆண் அல்லது சிறிய குடும்பம் தேவை. 0779530496, 0773145345.

---

திருகோணமலையில் உள்ள ரெஸ்டுரன்ட் ஒன்றிற்கு Waiters உதவியாட்கள் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. சிறந்த சம்பளம் வழங்கப்படும். Park Restaurant குளக்கோட்டான் பார்க் தொடர்பு 0771770761.

---

ஸ்ரீ லங்கா சர்வதேச விமான நிலையத்தில் (தனி) பிரிவுக்கு ஆண் பெண் வேலையாட்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். வயது 18 தொடக்கம் உணவு, தங்குமிடம் இலவசம் சம்பளம் 30.000 ரூபாதொடக்கம் அதிகமாக 0770570081.

---

களனி தொழிற்சாலை ஒன்றுக்கு பயிற்சியற்ற ஆண் வேலையாட்கள். தேவை சம்பளம் 22.500 ரூபா தூர பிரதேசத்தவர்கள் விசேடம், தங்குமிடம் இலவசம் 0710827493.

---

பாதுக்கையில் குடி நீர் போத்தல் தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் மற்றும் பொதி செய்யும் ஊழியர்கள் (ஆண், பெண்) உடனடியாக தேவை. கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடவசதி உண்டு. 0772808278.

---

பெண்சமையல்காரர் தேவை நன்கு சமையல் வேலை தெரிந்த வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய 35 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு 0112582659.

# தமிழ் அமைப்புக்கள் மீது தடை

# காரணத்தை கோருகிறது ஐரோப்பிய ஒன்றிம்



(கொழும்பு)

தமிழ் அமைப்புக்களைத் தடை செய்வதற்கான காரணங்களையும் அதற்கான தகுந்த சான்றுகளையும் இலங்கை அரசு வெளிப்படையாக சமர்ப்பிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் அமைப்புக்களைத் தடை செய்தமைக்கான காரணத்தை இலங்கை அரசு இதுவரை ஆதாரபூர்வமாக நிரூபிக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

புலம்பெயர் நாடுகளில் செயற்படும் இந்த அமைப்புக்கள் அந்த நாடுகளின் சட்டதிட்டங்களை முழுமையாக மதித்தே செயற்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள அமைப்புக்கள் சிலவற்றை தடை செய்துள்ளமை தொடர்பில் அண்மையில் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்தார்.

எனினும் இந்த விளக்கமளிப்புக்கு அப்பால் தற்போது ஐரோப்பிய நாடுகளில் சட்டரீதியாக செயற்படும் தமிழ் அமைப்புக்களுக்கான தடைக் குறித்து இலங்கை தக்க சான்றுகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# குறைந்த செலவில் நிறைந்த உணவு

## நூல் வெளியாகியது

சுகநல கல்வியியலாளர் கலாபூஷணம் இணுவை கா.வைத்தீஸவரனின் இருபதாவது நூலான குறைந்த செலவில் நிறை உணவு வெளியீட்டு விழா கடந்த வாரம் கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

திருமதி குணமணி சபாரத்தினம் மங்கல விளக்கேற்றி இவ்விழாவை ஆரம்பித்து வைத்தார். வைத்தியக்கலாநிதி விக்ணவேணி செல்வநாதன் வெளியீட்டுரையினை நிகழ்த்த வைத்தியக் கலாநிதி எஸ்.சண் முக தாஸ் விமர்சனவுரையினை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் வைத்தியக் கலாநிதி வி.ஜெகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பேராசிரியர் சி.முருகானந்தவேல் பிரதம விருந்தினரிடமிருந்து நூலின் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் கே.வைத்தீஸ்வரன ஏற்புரை நிகழ்த்தினார்.

(10)

# செறிவூட்டல் பயிற்சி

அமெரிக்க தகவல் கூடம் வழங்கும் உயர்கல்வி கற்க விரும்பும் உயர்தர மாணவர்களுக்காக வழங்கும் அங்கில செறிவூட்டல் பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.

நான்கு மாதங்கள் கொண்ட பாடநெறிக் காலம் எதிர்வரும் 22. ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை வாரத்தின் திங்கள் மற்றும் செவ்வாய் தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரை யாழ். பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

ஆங்கிலம் செறிவூட்டல் பாடநெறியை முழுமையாகப் பூர்த்தி செய்தவர்களுக்கு மாத்திரம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதற்கான அனுமதிகள் தேர்வுப் பரீட்சை மூலமாக இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3. மணிக்கு யாழ்.அமெரிக்க தகவல் கூடத்தில் இடம்பெறவுள்ளதுடன் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யுமாறும் பாடசாலையை விட்டு விலகியவர் களும் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இளைய தலைமுறையை நடுவீதியில் விடாத புதிய கல்விக்கொள்கை உருவாக வேண்டும்

## இது ஜனாதிபதியின் விருப்பம்



(கொழும்பு)

நாட்டின் இளம்தலைமுறையினரை நடுவீதிக்கு கொண்டு வராத சிறந்த கல்விக் கொள்கை வரைபு ஒன்று செய்யப்பட வேண்டியதற்கான காலம் உருவாகியுள்ளது என்று மகிந்த ராஜபக்ஸ தெரிவிக்கின்றார்.

தற்போதைய கல்வி முறைமையிலுள்ள முறைப்பாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வி முறைமையிலுள்ள குறைபாடுகளுக்கு இதுவரை ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கஞம் பொறுப்புக்கூற வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி தமிழ் மற்றும் சிங்கள மொழிகளைப் போன்றே நாட்டின் வரலாறு தொடர்பிலும் மாணவர்களுக்கு கற்பித்து சிறந்த எதிர்கால சந்ததியொன்றை உருவாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

# "ஒரு நிருபரின் களப்பதிவுகள்" வெளிவந்தது புதிய நூல்

56 வருடகாலமாக ஊடகப் பணியாற்றி வரும் திருகோணமலை மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளர் சின்னையாகுருநாதன் தனது 76 ஆவது வயதில ஒரு நிருபரின் களப்பதிவுகள் என்னும் நூலினை வெளியிட்டுள்ளார்.

இந்நூலின் வெளியீட்டு விழா கடந்த வாரம் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி விழா மண்டபத்தில் நடைபெற்றது.

"நீங்களும் எழுதலாம்" ஆசிரியர் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி திருகோணமலை நகரசபைத் தலைவர் ச.செல்வராஜா மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் விஜேந்திரன் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரகுராம் ஆகியோர் உட்பட வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள்,நகரசபை உறுப்பினர்கள், ஊடகவியலாளரகள் எனப் பலர் கலந்துகொணடனர்.

இந்நூலினை அம்மா பதிப்பகத்தினர் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# பரமர் சங்கமம்



"மாதராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டுமம்மா" இப்புடிப் பொம்பிளையளை பப்பாவில் ஏத்திவிட்டான் ஒரு கவிஞன்.

'சித்திரத்தில் பெண்ணெழுத்திச் சீர்படுத்தும் மாநிலமே மாநிலமே ஜீவனுள்ள பெண்ணினத்தை வாழவிட மாட்டாயா என்று யதார்த்தத்தைப் பாடி வைத்தான் இன்னொரு கவிஞன்.

பெண்களுக்குக் கடவுளால் வழங்கப்பட்ட சிறப்பே அவர்களுக்கு சீரழிவையும் கொடுத்துள்ளது. தாய்நாடு தாய் மொழி தாய்க்குலம் எனப்போற்றப்பட்டவள் சீரழிக்கப்படுவ தால் இரண்டாந்தரப் பிரஜையாக வாழும் நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது.

நீர்வேலி வயல் கிணறு நாச்சிமார் கோவில் தேர்முட்டி, டில்லிப் பேருந்துச் சம்பவங்கள் நின்றிடாமல் கடந்த சித்திரைப் புதுவருட முதல்நாள் வன்னியில் மலைநாட்டுப் பெண்ணொருவர் சீரழிக்கப்பட்டுக் கிணற்றில் கிடந்தாள் அடுத்த நாள் யாழ்.ஆசனக் கோவில் பகுதிக் கிணற்றில் மறையாசிரியை ஒருவரின் சடலம் மிதந்தது.

'உலை வாயை மூடலாம் ஊர் வாயை மூடேலாது எண்ட கூற்றுப் போலவே ஊர் மக்கள் வாய்மொழி மூலமாகப் பரமர் அறிந்தவற்றைக் கதைக்காமல் இருக்க முடியேலை.

அதுவும் கிறிஸ்த்துவின் பாடுகள் கத்தோலிக்கச் சமூகத்தால் அனுஸ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஆறாம் கிழமை முடிவு ஏழாம் கிழமை அரம்பத்தில் மேய்ப்பாரின் சபைப் பணியாளர்களின் செயற்பாடென வர்ணிக்கப்பட்டதை அறிந்து முழுக் கத்தோலிக்கரும் திரும்பிப் பார்த்னர்.

"அங்கை இதுபோல எத்தனையோ இதொண்டுதான் வெளியில் வந்திருக்கு எண்டகூற்றிலும் காற்றுவாக்கில் வந்து போனது ஆங்கிலேயரால் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் காலத்திலும் தொடர்ந்து நம்மவர் எமலியம் பிள்ளை தியோகுப் பிள்ளை ஆண்டகை காலங்களிலும் இறுக்கமாய் பேணப்பட்டுவந்த மேய்ப்புப் பணியில் சரிவு கண்டு விட்டதாகவே உணரமுடிகிறது.

பாதர் பயமாக இருக்கு குளிசை வாங்கித் தாங்க எண்டு மகள் கைத்தொலைபேசியில் கதைத்ததைக் கேட்ட தாய் நீதி மன்றத்தில் கூடியிருப்தானது கட்டுக்கதை யா?

நீதி என்பது எவருக்கும் சமனானதென்டதை கூறத் தேவையில்லை, அவர்களால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் ஒருமாத காலமாகப் பெண்பெற்றோர் வீட்டில் பூட்டி தடுத்து வைத்திருந்தனர் என்பது முக்கிய தரவாக அமையவில்லை

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுமென அறிக்கையிட்டவர்களால் வழக்கின் முதல் விசாரணைக்குக் குறிப்பிட்ட குருமாரை நீதிமன்றில் நிற்பாட்ட முடியாமல் இருந்ததெதனால் ?

"காதால் கேட்பதும் பொய் கண்ணால் பார்ப்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய் எண்டதும் பொய்யாய் போய் விட்டகாலமாதலால் அறிஞர் அண்ணா சட்டம் ஒரு இருட்டறை எ எண்டதும் கவனிக்கத்தக்கது.

புனித சின்னமாக விளங்க வேண்டிய மேய்பரின் சபை ஏகாதிபத்தியத்தின் அடக்கு ஒடுக்கு முறையின் எச்சசொச்சங்களாக திகழ்வதான சிந்தனையை மாதராகப் பிறந்துவிட்டவர்களுக்கு எண்டில்லாமல் அனைவருக்கும் ஊட்டக் கூடாது என்ன நான் சொல்லுறே...

# முரண்பாடுகளில் சிக்கித்தவிக்கிறது உள்ளூராட்சி அமைப்புக்கள்

## கரைச்சிபிரதேச சபைத் தவிசாளர் கூறுகிறார்

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் கீழ் உள்ளூராட்சி அமைச்சு இருந்த போதும் உள்ளூராட்சி சபைகள் இதுவரை உள்ளக முரண்பாடுகளில் இருந்து மீளௌவில்லை.

எந்த துறையும் திட்டமிடப்படாத ஒரு நிலையிலேயே உள்ளது.எனவே உள்ளூராட்சியில் வர்த்தக கைத்தொழில் வியாபாரம் தொடர்பாக சிந்திப்பதற்கு முதல் நல்லவினைத் திறன் உள்ள செயற் பாட்டை செய்ய ஆளுநர் முன்வர வேண்டும்.

இவ்வாறு கரைச்சி பிரதேசசபை தலைவர் அறி வுரை கூறினார்.

சர்வதேச நகரநாட்டு நிறுவனத்தின் தலைவர் லூலக் ஸ்ரீப் தலைமையில் உள்ளூராட்சி தலைவர், செயலாளர் உறுப்பினர்களுக்கான கருத்தமர்வு இருநாள் யாழ்.நகரில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்ட கரைச்சி பிரதேச சபை தவிசாளர் மேலும் கூறுகையில் ,

எமது பிரதேச சபை உள்ளூராட்சிசட்ட வரம்புக் குட்பட்ட ஓர் நிறுவனம்

இந் நிறுவனம் இன்று அரசியல் சூழலுக்குள் சிக்குண்டுள்ளது. எனினும் உள்ளூராட்சி அமைச்சராக முதலமைச்சர் உள்ளார். ஆனால் இன்று அபிவிருத்தியென்பதற்கு பதிலாக பின்னடைவை அடைந்துள்ளது.

இதற்கு நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகள், திட்டமி டப்படாத செயற்பாடு அதிகம் எனவே வர்த்தக கைத்தொழில் சம்மேளனத்துடன் நாம் கை கோர்ப்பதற்கு முதல் எமது மனங்களில் மாற்றம் வரவேண்டும்.எனினும் நாம் இத்திட்டத் திற்கு பூரண பங்களிப்பேன் என்றும் அவர் தெரிவித்தார். (92)

# விஷமாக மாறியது உணவு 95 பேர் திடீர் மயக்கம்

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் உணவு விஷமடைந்ததன் காரணமாக திடீர் என்று மயக்கமுற்று 95 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திடீரென சுகயீனமுற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுகயீனமுற்றவர்களில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் மாத்திரம் 63 பேர் சிகிச்சை பெற்று வருவதாக வைத்திய பொறுப்பதி காரி டொக்டர் ஐ.எல்.ஜலால்டீன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை, மத்திய முகாம் வைத்தியசாலை மற்றும் அம்பாறை வைத்தியசாலைகளில் இவர்கள் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சுகயீனமுற்றவர்களில் 65 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்திய முகாம் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

## தொடர்பாடல் ஊடகக்கற்கை

*(கடந்த சனிக்கிழமை வெளியான வினாக்களின் தொடர்ச்சி...)*

30) மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதன் நோக்கமாக அமையாதது
1) நிகழ்ச்சித்திட்ட இலாபங்களை முற்கூட்டியே அறிதல்
2) மக்கள் தொடர்பு நோக்கங்களை நிச்சயித்தல்
3) பௌதீக மானிட வளத் தேவைகளை கணிப்பிடல்
4) தேவைக்கு ஏற்ப முன்னுரிமைப் பட்டியலை தீர்மானித்தல்
5) நிகழ்ச்சித்திட்டத்தின் பொருத்தப்பாட்டை மதிப்பிடல்

31)
- தேவையற்ற தகவல்கள் தரவுகள் அறிக்கையிடப்படுவதை தவிர்த்தல்
- எளிமையான மொழிபடபிரயோகம் பயன்படுத்தல்
- கேட்பவரின் அறிவு,அனுபவம்,இரசனை ஆர்வத்திற்கு ஏற்ப புலக்காட்சி ஏற்படுத்தப்படல்

மேற்குறித்த கூற்றுகளின் இயல்புகள் பொருத்தமானதாக அமைவது

1. தொலைக்காட்சி ஊடகத்துடன்
2. நவீன ஊடகத்துடன்
3. அச்சு ஊடகத்துடன்
4. சமூக ஊடகத்துடன்
5. வானொலி ஊடகத்துடன்

32) பின்வருவனவற்றில் செவிப்புல தொடர்பாடலுடன் தொடர்பு படாத கூற்று
1. ஒலிகள், சப்தங்கள், இசை மூலம் தொடர்பாடல் இடம்பெறும்.
2. ஒலிச்சமிக்ஞைகளும் செவிப்புல ஊடகங்களாக பயன்படுகின்றன.
3. கேட்டல், செவிமடுத்தல் தொழிற்பாடுகள் செவிப்புல தொடர்பாடலுடன் தொடர்பற்றவை
4. குழுத்தொடர்பிலும்வெகுசனதொடர்பிலும் செவிப்புல ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன
5. செவிப்புல தொடர்பாடல் இயற்கையாகவும் திட்டமிட்டும் மேற்கொள்ளப்படுகின்றன

33)"முறைசாராத் தொடர்பாடல் என்பது மனிதனின் ஆர்வத்தையும் சந்தேகத்தையும் வெளிப்படுத்தும் தொடர்பாடல் செயலொழுங்காகும்". குறித்த ஒரு தகவல் ஒருவரிடமிருந்து ஏனைய நபர்களுக்கு பரவலடைவதை குறிக்கும் முறை

1. தனிச்சங்கிலி முறை (Single strand chain)
2. வதந்தி சங்கிலி முறை (Gossip chain)
3. நிகழ்தகவுச் சங்கிலி முறை (Probability chain)
4. கோட்டச் சங்கிலி முறை (Cluster chain)
5. மேல் இருந்து கீழ் நோக்கிய முறை (Top to down)

34) சமூகம் - தகவல் எண்ணக்கருவை பிரதிபலிக்காத கூற்று
1. சமூக நிலைப்பாட்டிற்கு தகவல் அவசியம்
2. சமூகத்திற்கு தகவல் கிடைக்கும் வழிகளாக ஊடகங்கள் செயற்படுகின்றன
3. முறைசார் ஊடக வழிமூலம் மட்டும் தகவல்கள் சமூகத்துக்கு கிடைக்கப் பெறுகின்றன
4. முறைசார தகவல்களும் சமூக நிலைப்பாட்டிற்கு அவசியமாகிறது
5. வெகுசன ஊடகத்தை விட நவீன ஊடகம் மூலம் துரிதமாக தகவல்கள் கிடைக்கப பெறுகின்றன

35)
- குறித்த தகவல் தொடர்பிலான தூண்டலை மிகவும் கவர்ச்சியான உள்ளடக்கத் தன்மையினால் உருவாக்கும்
- பொது மக்களுடன் மிக அண்மித்த தன்மையாக காணப்படும்
- புகைப்படக்கலை,எழுத்துக்கலை,படைப்பாக்ககலைதிட்டமிடல்கலை, வடிவமைப்புக்கலை ஒன்றிணைக்கப்பட்டு தயாரிக்கப்படுவது

இவ் இயல்புகளுடன் மிகவும் நெருக்கமாக அமைவது
1. கையேடு
2. துண்டுப்பிரசுரம்
3. செய்தித்தாள்
4. சுவரொட்டி
5. சஞ்சிகை

36) "ஆக்கரீதியான வெகுசன ஊடக அறிக்கையிடல்களில் சித்தரிப்பு எழுத்துகளும் முக்கிய வழிமுறையாக அமைகின்றது". பின்வரும் இயல்புகளில் சித்தரிப்பு எழுத்துக்களை பிரதிபலிக்காத கூற்று

1. செய்தியின் பின்னணியை முன்வைப்பது
2. நிகழ்காலத்தில் கதையை முன்வைப்பது
3. அதிக தகவல் மூலங்களை கொண்டது
4. செய்தியை விட ஆழமானது
5. மிக குறைந்த அளவிலான மூலங்களை கொண்டமைந்தது

37)"வினைத்திறன் மிக்க, விளைத்திறன் மிக்க வெகுசன ஊடக மற்றும் தொடர்பாடல் செயன்முறைகளுக்கு ஊடக அறிவு (media literacy) அவசியமாகிறது"

நபர் **A** – வெகுசன ஊடகங்களில் இடம்பெறுகின்ற விளம்பரங்கள் சிறுவர்களை பெருமளவில் பாதிக்கின்றன ஆனால் அவை திட்டமிட்டு தயாரிக்கப்படுகின்றன. விளம் பரங்கள் தயாரிக்கப்படுகின்ற போது ஊடக ஒழுக்க நியமனங்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

நபர் **B** - வெகுசன ஊடகங்களில் இடம்பெறுகின்ற காட்சிகள் வன்முறைகளை தூண்டுகின்றன. நாம் எப்படி அவற்றை தடுக்கமுடியும்?

நபர் **C** – தொலைக்காட்சி ரெலி நாடகங்களை மிகவும் விரும்பி பார்க்கிறேன். பொழுது போக்குக்கு அவை உதவுகின்றன.

மேற்குறித்த நபர்களின் கூற்றுகளின் அடிப்படையில் ஊடக அறிவுள்ள பயனாளிகள் இடம்பெறக்கூடிய தொகுதி முறையே

1. செயலூக்க பயனாளி, செயலூக்க மற்ற பயனாளி ,மந்த பயனாளி
2. செயலூக்க பயனாளி ,மந்த பயனாளி செயலூக்க, மற்ற பயனாளி
3. மந்த பயனாளி, செயலூக்க பயனாளி, செயலூக்க மற்ற பயனாளி
4. செயலூக்க மற்ற பயனாளி, மந்த பயனாளி , செயலூக்க பயனாளி
5. மந்த பயனாளி, செயலூக்க மற்ற பயனாளி, செயலூக்க பயனாளி

38) காட்சி மூல தகவல் பகிர்வுக்கு எடுத்துக்காட்டுக்களாக அமையும் தொகுதி
1. இருபரிமாணப்படம், முப்பரிமாணப் படம், விளக்கப்படம்
2. காட்டூன், வரைபு, பாட்டு
3. வரைபு, ஓவியம், இசை
4. வர்ணம், அளவீடுகள், ஒலிசமிக்ஞைகள்
5. கட்டடம், திரைப்படம், ஒலிக்குறியீடுகள

39) ஊடக விமர்சனத்தின் சமூகத்தேவையை பிரதிபலிக்காதது
1. ஊடக உள்ளடக்க இயல்பையும் நிகழ்ச்சி நிரலையும் வெளிக்காட்டாது
2. மக்களை மந்த நிலையில் இருந்து செயற்படும் நிலைக்கு மாற்றியமைத்தல்
3. ஊடகம் - பெறுநர் தொடர்பை விளங்கிக் கொள்ளல்
4. ஊடக அறிவு பற்றிய விழிப்புணர்வை உயர்மட்டத்திற்கு இட்டுச் செல்லும்
5. ஊடகத்தின் சமூகவகிபங்கு கலாசார தாக்கம் பற்றிய போக்குகளை அறியச்செய்தல்

40) ஊடகங்கள் குறிப்பிட்ட கால சமூகத்தின் கலாசாரம, பழக்கவழக்கம், நடத்தை மற்றும் சம்பிரதாயங்களை அறிக்கையிடுகின்றன இவ்வாறான அம்சங்களை விமர்சனம் செய்கின்ற பிரவேசம்
1. பண்பாட்டு ரீதியிலான பிரவேசம்
2. அரசியல் ரீதியிலான பிரவேசம்
3. மொழி ரீதியிலான பிரவேசம்
4. ஒப்பீட்டு ரீதியிலான பிரவேசம்
5. வரலாற்று ரீதியிலான பிரவேசம்

41) தொடர்பை துணிபவர் தொடர்பை மற்றவர்களுடன் பகிர்ந்து ஒரு பொதுமைப் பாட்டை உருவாக்குவதற்கு அவர் குறித்த செய்தியை தனக்குள்ளே உள்வாங்கிக் கொள்கின்ற செயன்முறை
1. குறியவிழ்ப்புச் செயன்முறை
2. வழிமாற்றும் செயன்முறை
3. குறிமுறையாக்கும் செயன்முறை
4. உற்பத்தி செயன்முறை
5. ஊடுகடத்தி செயன்முறை

42)
- ஒலி வடிவங்களை ஆதாரமாக கொண்டமைந்தது
- சொல் சார் தொடர்புக்கு அடிப்படையானது
- சிந்தனையை நெறிப்படுத்துதல்
- அறிவை சேமித்தல்

இவை சுட்டுகின்ற மிகப் பொருத்தமான ஊடகம்
1.குரல்
2.மொழி
3.சைகை
4.கருவி
5.குறியீடு

43) "சமூகத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப சமூக வாழ்க்கைச் சந்தர்ப்பங்களின் போது நடந்து கொள்ளவேண்டிய முறைகளை கற்பது சமூகமயமாக்கல் செயன்முறையாகும்".
A – போலச்செய்தல்
B – பின்பற்றுதல்
C – தகவல் திரட்டல்
D – வகிபாகம் ஏற்றல்
E – தேடல் உணர்வு

இவற்றில் சமூகமயமாக்கல் காரணிகளுடன் மிகத் தொடர்புள்ளவை
1.A,B மாத்திரம்
2.A,B,D மாத்திரம்
3.C,D,E மாத்திரம்
4.A,B,C,E மாத்திரம்
5.A,B,C,D,E ஆகியன எல்லாம்

44) குறித்த சம்பவம் ஒன்று செய்தியாக மாற்றமடைவதற்கு முக்கிய காரணியாக அமைவது,
1.குறித்த சம்பவம் அண்மித்த தன்மையுடையதாக அமைவதன் மூலம்
2.ஏனைய சம்பவங்களிடையே வெளிப்படையாக தோன்றுவதன் மூலம்
3.வெகுசன ஊடகமொன்றில் அறிக்கையாக வெளிவருவதன் மூலம்
4.காலத்திற்கு ஏற்ற தன்மையை கொண்டிருத்தல் மூலம்
5.அதிக தாக்கத்தை பெறுநர் மீது செலுத்துவதன் மூலம்

45) நபரிடை தொடர்பாடல், தன்கைத் தொடர்பாடல் செயன்முறை தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A – நபரிடைத் தொடர்பில் உயர் மட்ட பின்னூட்டல் கிடைக்கும். வெகுசன தொடர்பில் தொடர்பாடுபவர் - பெறுநர் இடைவினைத் தொடர்பு உயர் மட்டத்தில் பேணப்படும்

B – நபரிடை தொடர்பில் தொடர்பாடுபவர் - பெறுநர் இடைவினைத் தொடர்பு பலவீனமானது. வெகுசன தொடர்பு ஒரு வழித் தொடர்பு (one way) தொழிற்பாட்டை கொண்டது.

C – நபரிடைத் இரு வழித் தொடர்பாடல் தொழிற்பாட்டை கொண்டது. வெகுசன தொடர்பு உயர் மட்ட மூலதனச்செலவீனங்களைக் கொண்டது

D –நபரிடைத்தொடர்பில் உடனுக்குடன் தூண்டல் - துலங்கலை விளங்கிக் கொள்ளலாம், வெகுசன தொடர்பில் உடனடியாக தூண்டல் - துலங்கல் வெளிப்பாட்டை அறிய முடியாது.

1) A, B உண்மையானவை C,D பொய்யானவை
2) A, C உண்மையானவை B,D பொய்யானவை
3) C, D உண்மையானவை A,B பொய்யானவை

4) A, D உண்மையானவை B,C பொய்யானவை
5) B, C உண்மையானவை A,D பொய்யானவை

46) "செய்தியாளருக்கும் செய்தி மூலத்திற்குமான தொடர்பு மிகச் சரியான செய்திகளை வழங்குவதற்கு அடிப்படையானது" இக்கூற்றின் அடிப்படையில் மிக வலுவான செய்தி மூலமாக அமையக்கூடியது
1) விரிவுரைகளும் கூட்டங்களும்
2) செய்தியாளர் மாநாடுகள்
3) செய்தி முகவர்கள்
4) அறிக்கைகள்
5) நாட்குறிப்பேடு

47) "ஊடகக் கொள்கை என்பது தனியார் அரச ஊடக உரிமைக்கு ஏற்ப வேறுபட்ட மைகின்றன" அரசாங்க வெகுசன ஊடகக் கொள்கையை பிரதிபலிக்காத அம்சமாக கொள்ளக்கூடியது
1) அரசாங்க ஆட்சியினை உறுதிபடுத்திக் கொள்ளுதல்
2) அபிவிருத்தி தொடர்பிலான தகவல்களை அறிக்கையிடுதல்
3) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குதல்
4) தேசிய நலன் சார்ந்த விடயங்களை வலுப்படுத்தல்
5) நாட்டின் அபிவிருத்தி சார் செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்தல்

48) மாணவர்களின் நூலகப்பயன்பாடு தொடர்பிலான செயற்பாட்டினை ஆய்வு செய்வதற்கும், தகவல்களை பெறுவதற்கும் மிகவும் பொருத்தமான ஆய்வு வழிமுறையாக அமையக்கூடியது
1) கலந்துரையாடல் மூலம் 2) செயன்முறை மூலம்
3) வினாக்கொத்து மூலம் 4) பேட்டி மூலம்
5) உற்றுநோக்குதல் மூலம்

49) செய்திக் கதைகளில் இடம் பெற்ற வாக்கியங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன இவற்றில் வழு இன்றிய வாக்கியமாக அமையக்கூடியது
1) போதைப் பொருள் கடத்தலை முறியடிப்பதற்கு மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டது.
2) நேற்று இன்றும் நாளையும் கடும் காற்றுடன் மழை பெய்யும்.
3) ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை மேதினக் கூட்டத்தை கண்டியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
4) என்மீது என் மனைவியே விவாகரத்து வழக்குத் தொடர்ந்து போனமாதம் விவாகரத்துப் பெற்று பிரிந்து விட்டோம்.
5) இன்றும் நாளையும் மழை பெய்யும்.

50) பின்வருவனவற்றில் அபிவிருத்தி ஊடகவியலின் இயல்பை பிரதிபலிக்காதது
1) மக்கள் சிந்தனையிலும் சமூக அமைப்புக்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை
2) பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
3) அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் தகவல் தொடர்பை உருவாக்கிக் கொடுத்தல்.
4) பிரச்சினைகளில் மேலோட்டமாக கவனம் செலுத்துகின்றது அதே வேளை சம்பந்தப்பட்ட நபர்களில் அதீத கவனம் செலுத்துகின்றன.
5) மக்கள் பிரச்சினைகள் அவற்றை தீர்ப்பதற்கான செயல்முறைகளை கவனத்தில் கொள்கின்றன.

1)

1. கட்புல தொடர்பாடல் (visual communication) எண்ணக்கருவை அறிமுகம் செய்து, நான்கு எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடுக?
2. கட்புல (காட்சி வடிவ) தொடர்பு மொழி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று கீழே இடம்பெற்றுள்ளன. அவை பற்றி விபரிக்குக.
அ) விளம்பரங்கள்
ஆ) போக்குவரத்து
இ) கலைகள்
3. எழுத்து மூலமான தொடர்பாடலை அறிமுகம் செய்து, நிறுவனம் ஒன்றில் பெருமளவில் பயன்படுத்துகின்ற வடிவங்கள் நான்கினைக் குறிப்பிடுக?
4. "நிறுவனம் ஒன்றின் வெகுசன தொடர்பு அதிகாரியிடம் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சி நிலைகள் காணப்படுதல் அவசியமானது. வினைத்திறனுள்ளதும், வினைத்திறன் மிக்கதுமான எழுத்து மூல ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதறகு பொதுசன தொடர்பு அதிகாரியிடம் (Public Relation Officer) காணப்பட வேண்டிய எழுத்து மூல தொடர்பாடல் தேர்ச்சிகள் நான்கை குறிப்பிட்டு, அவற்றில் இரண்டைப் பற்றி விபரிக்குக?

2)

1. "தொடர்பாடல் செயலொழுங்கின் அடிப்படை உள்ளக தனியாள் தொடர்பாடலாகும்." உள்ளக தொடர்பாடல் செயலொழுங்கின் மூன்று படிமுறைகளையும் குறிப்பிடுக?
2. "ஞாபகமும் ஞாபகப்படுத்தலும் உளவியல் செயலொழுங்கமாகும் தகவல்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு கையாளக் கூடிய நான்கு உத்திகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டைப் பற்றி சுருக்கமாக விளக்குக?
3. "சீரற்ற தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்படுவது சீரற்ற தீர்மானமாக அமையும்" பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதற்கு தேவையான மிக அடிப்படைக் காரணியை குறிப்பிட்டு, தீர்மானம் எடுக்கின்ற தொழிற்பாட்டின் ஆறு படிமுறைகளையும் குறிப்பிடுக?
4. பிரச்சினை ஒன்றிற்கு ஆரோக்கியமான தீர்மானத்தை எட்டக்கூடிய நான்கு வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றில் இரண்டைப் பற்றி விபரிக்குக?

3)


1."கற்றல்" என்பதை வரையறை செய்து, அதன் இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக?
2. கற்றல் தொடர்பான இரு பிரதான கோட்பாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றில் உள்ளடக்கப்படுகின்ற பிரதான இரு கற்றல் விதிகளை எடுத்துக்காட்டி சுருக்கமாக விளக்குக?
3. 'குறித்த ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிகழ்கின்ற கருத்து வெளிப்பாடு அல்லது பரிமாற்றம் பயனுள்ள பேச்சு ஆகும்." பயனுள்ள பேச்சு ஒன்றில் நீ அவதானிக்கக் கூடிய நான்கு இயல்புகளைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றைப் பற்றி விபரிக்குக?
4."ஒன்றாக கருமமாற்றும் மனிதர் குழுக்கூட்டம்." குழுவாக செயற்படுகின்ற சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அத் தொடர்பாடல் வகையில் நீ அவதானிக்கக் கூடிய தனித்துவமான நான்கு அம்சங்களை விபரிக்குக?

4) "மொழி என்பது மனிதன் தனது கருத்தை வெளியிடப் பயன்படுத்திய சக்தி வாய்ந்த ஊடகம்"
1. தொடர்பாடல் கருமங்கள் மற்றும் வெகுசன ஊடக செயற்பாடுகளின் போதும் மொழி பயன்படுத்தப்படும் நான்கு வடிவங்களை (பேதங்களை) குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?
2. " நவீன ஊடகங்களின் மொழிப் பயன்பாடு இலத்திரனியல் மொழியாக மாற்றமடைந்துள்ளது. நவீன ஊடகங்களின் மொழிப் பயன்பாட்டில் எதிர்நோக்க கூடிய இரண்டு மட்டுப்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றில் ஒன்றை விபரிக்குக?
3." பொது மக்கள் தொடர்பு நிலைகளில் ஊடக கலந்துரையாடலும் பிரதான இடம்பெறுகிறது" ஊடகக் கலந்துரையாடல் (Press Meet) என்றால் என்பதனைச் சுருக்கமாக விளக்கி, அதனை நடைமுறைப்படுத்துகின்ற போது கவனத்தில் கொள்ளவேண்டிய இரு இயல்புகளைக் குறிப்பிடுக?
4. ஒத்துணர்வு (Empathy) ஆரோக்கியமான தொடர்பாடல் அணுகுமுறைக்கு பயன்படும் நான்கு வழிமுறைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

**5) ஷெனோன் மற்றும் வீவர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தொடர்பாடல் மாதிரி கீழே தரப்படுகின்றது.**
1. குறித்த ஒரு செய்திக்கான தகவல்கள்கிடைக்கப்பெறுகின்ற மூலங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றினைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?
2. தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைக்கூறுகளில் ஒன்றாகிய தடையின் பேதங்களைக் கீழே தரப்பட்டுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?
அ) மொழி ஆ) கருவி
இ) கருத்தேற்றம் ஈ) ஆயத்தநிலை
3. "சிறுவர் துஷ்பிரயோகம்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. சிறுவர் உரிமை, சட்டம் தொடர்பாக சட்டத்தரணி குமார் விரிவாக விளக்கமளித்தார். மேற்படி கருத்தரங்கு தொடர்பாடல் செயலொழுங்கிற்கு ஊடகடத்தியாக பயன்படுத்தியிருக்க கூடிய எறிவை சார், எறிவை சாரா ஊடக உபகரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக?
4. மேற்குறித்த மாதிரிக்கும் ஒஸ்குட் மற்றும் ஷ்ராம் மாதிரிக்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிட்டு விபரிக்குக?

6) "விழிப்புணர்வு மிக்க பெறுநர் மற்றும் ஊடக எழுத்தறிவு பற்றிய செயலமர்வின் பின்னர் நல்ல பாடல்களை இரசிப்பதற்கும், நல்ல படங்களைப் பார்ப்பதற்கும், ரெலி நாடகங்களைப் பார்ப்பதில்லை என்ற தீர்மானத்திற்கும் மாலா வந்தாள்".
1.ஊடக எழுத்தறிவு என்ற எண்ணக்கருவை சுருக்கமாக விளக்கி, விழிப்புணர்வு மிக்க பெறுநர் ஆகிய மாலாவிடம் இனங்காணக்கூடிய இரு இயல்புகளைச் சுட்டிக்காட்டுக?
2. குமார் கிராமத்தின் பிரச்சினை ஒன்றை இனங்கண்டு, அவற்றை மக்களிற்கும், ஆட்சியாளருக்கும் தெரியப்படுத்தவும், கவனத்தில் கொண்டுவரச் செய்யவும் செய்திக் கதை ஒன்றினை எழுதினான். இவ்வாறான ஊடக அறிக்கையிடல் போக்கு எவ்வாறு அழைக்கப்படும்? அதில் நீ அவதானிக்க கூடிய இரு இயல்புகளைக் குறிப்பிடுக?
3. தொலைக்காட்சி, இல்ல கலாசாரம் என்ற எண்ணக்கருவை விளக்கி, அவற்றின் ஊடாக வன்முறைகள் வெளிக்கொணரும் விதத்தை நான்கு எடுத்துக் காட்டுகளை அடிப்படையாகக்கொண்டு விபரிக்குக?
4. பொறுப்பு வாய்ந்த பிரஜை என்ற அடிப்படையில் கூட்டாக வாழும் சமூகத்தை உருவாக்கும் அடிப்படையில், தொடர்பாடல் செயன்முறைகளையும், வெகுசன ஊடக அறிக்கையிடல்களையும் மேற்கொள்ளும் நான்கு வழிமுறைகளைக் குறிப்பிட்டு விபரிக்குக?

7) "ஆக்கபூர்வமான தொடர்பாடல் பிரவேசங்களைத் தொடர்பாடல் நிலைகளிலும், வெகுசன ஊடக அறிக்கையிடல்களிலும் அவதானிக்க முடிகிறது."
1. ஆக்கபூர்வமான தொடர்பாடல் வடிவங்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் அவதானிக்கக்கூடிய இரு இயல்புகளைத் தருக?
2. மரபு சார்ந்த அடிப்படையிலும், கிராமிய மக்கள் மத்தியிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற ஆக்கத் தொடர்பாடல் வடிவங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அவை மக்கள் மத்தியில் வலுவுள்ள தொடர்பாடல் ஊடகமாக இருப்பதற்கான காரணிகளை இரண்டு அம்சங்களைக் கொண்டு விபரிக்குக?
3. பத்திரிகை ஒன்றில் நீ அவதானிக்க கூடிய ஆக்க ரீதியிலான அறிக்கையிடல்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் இரண்டைப்பற்றிச் சுருக்கமாக விளக்குக?
4. தொடரறா ஊடகவியலில் (Online Media) இணையம் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நவீன ஊடகம் (New media) என்ற அடிப்படையில் தொடரறா ஊடகத்தின் தனித்துவமான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிட்டு விபரிக்குக?



நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நேற்று முன்தினம் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வீ.மகாலிங்கத்துக்கு அகில இலங்கை இந்துமா மன்றம் நடாத்திய பிரவுபசார விழாவின்போது துணைத்தூதுவர் உரையாற்றுவதையும், மனித நேயமாமணி வீ.கைலாசபிள்ளையினால் துணைத் தூதுவருக்குநினைவுச் சின்னம் வழங்கப்படுவதையும், சபையின் ஒரு பகுதியினரையும் காணலாம். (137)

# துறைமுகத்தில் கப்பலை தேடிப்பார்க்க உரிமை உண்டு

## கிண்டல் செய்கிறார் சஜித்

அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள துறைமுகத்திற்கு கப்பல் வருகிறாதா? விமான நிலையத்திற்கு விமானம் வருறதா? உல்லாச பிரயாணிகள் வருகின்றார்களா? என்பது தொடர்பில் தேடி பார்ப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரமல்ல, அமைச்சர்களுக்கு மாத்திரமல்ல, அந்த உரிமை சாதாரண பொதுமக்களுக்கும் உள்ளதாக ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

மத்தல சர்வதேச விமான நிலையத்தைப் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை கைதுசெய்ய பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததை கண்டித்து நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்துக்கு முன் ஐ.தே.க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இதன்போது ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

எனது சகோதர நாடாளுமன்ற உறுப்பினர்கள் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமான நிலையத்துக்கு சென்றபோது சில மோசமான அரசியல்வாதிகளால் மிகவும் தாக்குதலுக்கு உள்ளாகினர். இந்த சம்பவத்திற்கு பிறகு எமது நாட்டு மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் எமது நாட்டில் காணப்படும் நீதியின் நிலைமை தொடர்பில் நன்றாக தெரிந்திருக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சுதந்திரமாக தமது கடமையினை சரிவர செய்ய இடமில்லாதபோது சாதாரண மக்களின் நிலை தொடர்பில் என்ன கதைப்பது என்பது தொடர்பில் கேளவி எழுப்ப வேண்டியுள்ளது.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்திய குழுவினர் இன்று சுதந்திரமாக உள்ளனர். சந்தோஷமாக வாழ்கின்றனர். அவர்களுக்கு ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்த முடியும் பத்திரிகைகளுக்கு செவ்வியளிக்கமுடியும். ஆனால் நீதி கிடைக்கவில்லை.

எனவே நீதியை சரிவர கடைபிடிக்குமாறு வலியுறுத்தவே இநத ஆர்பாட்டத்தை முன்னெடுகக ஐ.தே.க தீர்மானித்தது. உண்மையில் நாம் பொலிஸார் மீது குற்றம் சுமத்த முடியாது. இதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பொறுப்பகூற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.







## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இஸ்லாமியத் தீவிரவாதம் கால்பதிக்கும் அபாயம் அதிகரிப்பு

## றொஹான் எச்சரிக்கை

(கொழும்பு)

சர்வதேச இஸ்லாமியத் தீவிரவாதிகள் இலங்கையில் கால்பதிக்கும் அபாயம் இப்போது அதிகரித்துள்ளதாகவும் இப்போது கூட சில இலங்கை அதிகாரிகள் பிராநதிய வலய பாதுகாப்பு தரப்பினருடன் இணைந்து இந்த தீவிரவாதச் சக்திகளை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இந்திய புலனாய்வுப் பிரிவினரால், பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ உளவுப் பிரிவிற்கும், அந்நாட்டு தீவிரவாதிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சாகீர் ஹூசைன் என்ற கணடியைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவ்வாறான பலர் இலங்கையில் இருக்கக் கூடுமென பேராசிரியர் றொஹான் குணரட்ன அச்சம் வெளியிட்டுள்ளார். இலங்கை இஸ்லாமிய இளைஞர்கள் தீவிரவாத பொறிக்குள் சிக்கிவிடாது தடுப்பதற்கு நாட்டின் முஸ்லிம் தலைவர்கள் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறுகளை முஸ்லிம் தலைவர்கள் விட்டுவிடக்கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி போராடுவதனை தமிழ் தலைவர்கள் தடுத்து நிறுத்தத் தவறியதாகவும், ஐக்கியமான இலங்கைக்குள் சுபீட்சமாக வாழ வதன் முக்கியத்துவத்தை முஸ்லிம் இளைஞர்களுக்கு அதன் தலைவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென றொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

# தேசிய ஒலிம்பியாட் போட்டி

## நாடுமுழுவதும் 40 மாணவர்கள் தெரிவு

(யாழ்.நிருபர்)

கல்வியமைச்சு நடத்தி தேசிய ஒலிம்பியாட் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 40 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 4 மாணவர்கள் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டிப் பரீட்சை கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான 5 நாள் வதிவிடப் பயிற்சிநெறியொன்று இன்று முதல் 9 ஆம் திகதி வரை தொம்பேயிலுள்ள சியனே தேசிய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

5 நாள் பயிற்சிநெறியின் போதான தங்குமிடம், உணவு உள்ளிட்ட வசதிகள் அனைத்தையும் கல்வியமைச்சு ஏற்றுள்ளது.


மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் கலந்துகொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (10)




இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரால் யாழில் மீள்குடியேறியுள்ள ஜே/87 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் முஸ்லிம் மக்களின் ஒரு பகுதியினருக்கு அண்மையில் தண்ணீர் கான்கள் வழங்கப்பட்டது. (105)

# பிரதமராக வந்தாலும் விசாரணைக்குத் தயார்

## நரேந்திரமோடி தெரிவிப்பு



(புதுடில்லி)

நான் தவறு செய்ததாக குற்றம்சாட்டப்பட்டால் அல்லது சட்ட விரோதமாக செயல்பட்டதாக கூறப்பட்டால், மற்றவர்களை போல் இல்லாமல், விசாரணையை சந்திக்க தயாராக உள்ளதாக பா.ஜ.பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் பா.ஜ., பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கூறியதாவது, நான் 4 அல்லது 5 மாதங்களாக பல மேடைகளில் உரையாற்றியுள்ளேன். நான் கடுமையான உழைப்பாளி, சிறு வயதில் தொழிலாளியாக பணிபுரிந்துள்ளேன். கட்சி எனக்கு வழங்கிய பணியை சிறப்பாக பணிபுரிந்துள்ளேன். கடவுள் எனக்கு வழங்கிய வலிமையை உணர்ந்துள்ளேன். இதுவரை நான் கலந்து கொண்ட எனது பேரணி எதுவும் ரத்து செய்யப்பட வில்லை.

தேர்தல் விதிமீறல் தொடர்பாக குஜராத் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் தேர்தல் ஆணையத்துக்கு அறிக்கை அனுப்புவர். இந்த விவகாரத்தில் சட்டம் தன் கடமையை செய்யும். நீண்ட காலமாக அரசியலில் உள்ளேன் இதுவரை எந்த வழக்கும் என்மீது பதிவு செய்யப்பட்டதில்லை. குஜராத் பொலிஸார் தங்கள் பணியினை சிறப்பாக செய்து தேர்தல் ஆணையத்துக்கு அறிக்கை அனுப்புவர். அவர்கள் என்னிடம் கூட விசாரணை அறிக்கையை காட்ட மாட்டார்கள்.

இந்த தேர்தலை அரசியல் படிக்கும் மாணவன் போல் உன்னிப்பாக கவனித்து வருகிறேன். கற்றும் வருகிறேன். கட்சி எனக்கு வழங்கிய பணியை சிறப்பாகவும் திறமையாகவும் செய்வேன். பா.ஜ., திறமையான கட்சி. ஒழுங்கு முறைகளை பின்பற்றும் கட்சி. வாஜ்பாய் காலத்தில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டோம். அத்வானிக்கும் எனக்கும் இடையே உள்ள உறவு நன்றாகவுள்ளது என கூறினார்.

# நூதன போராட்டத்தில் தென்கொரிய மக்கள்



வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையிலான முறுகல் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் தமது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில், வடகொரியாவுக்கு எதிராக தென்கொரிய மக்கள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஹீலியம் நிரப்பப்பட்ட பெரிய அளவிலான மிதக்கும் பலூன்களின் மூலம், வட கொரியாவுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களை அந்நாட்டிற்குள் அனுப்பி தென் கொரிய ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட கொரியாவில் இருந்து வெளியேறியவரும், தென் கொரியாவின் தற்போதைய ஆதரவாளருமான பார்க் சாங் ஹக் தலைமையிலான 30 பேர், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதை வட கொரியா நிறுத்த வேண்டும் என்று கூறி எல்லைப்புற நகரமான பாஜுவில் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட கொரியர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைக்கு, தன்னாலான அனைத்து முயற்சிகளையும் சர்வதேச சமுதாயம் மேற்கொண்டு வருகிறது என்பதை அந்நாட்டினருக்கு உணர்த்தவே இத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டோம் என்று பார்க் சாங் ஹக் தெரிவித்தார்.

# குளுமையான நட்சத்திரம் கண்டுபிடித்தது நாசா

(வொஷிங்டன்)

சூரியனுக்கு அருகில், மிகவும் குளுமையான நட்சத்திரத்தை, அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவின், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த, வானியல் ஆய்வாளர்கள், அந்நாட்டு விண்வெளி ஆய்வு நிறுவனமான, நாசாவின் உதவியுடன், இந்த புதிய நட்சத்திரத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

புதிய நட்சத்திரத்திற்கு, "ஜே 085510.83-071442.5" என, பெயரிடப்பட்டுள்ளது. பூமியின் வட துருவத்தை விட, குளிர்ச்சியான, இந்த நட்சத்திரத்தின் வெப்பநிலை, - 48இல் இருந்து, - 13 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது. வியாழன் கிரகத்தை விட, மூன்று முதல் 10 மடங்கு வரை, இந்த நட்சத்திரம் பெரிதாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

உலகச் செய்திகள்

# அரச கட்டடத்துக்கு தீ வைப்பு உக்ரைனில் 31 பேர் பலி



உக்ரைன் நாட்டில் அரசு கட்டடத்துக்கு தீ வைக்கப்பட்டது. இதில் சிக்கி 31 பேர் உடல் கருகி பரிதாபமாக பலியாகினர். கிழக்கு உக்ரைனில் 10இற்கும் மேற்பட்ட நகரங்களில் அரசு கட்டடங்களை ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் பிடித்து வைத்துள்ளனர். அங்கிருந்து அவர்கள் வெளியேற மறுத்துவிட்டனர். அவர்களை தனது செல்வாக்கை பயன்படுத்தி ரஷ்யா வெளியேற்ற வேண்டும் என்று அமெரிக்கா நிர்ப்பந்தித்தாலும், ரஷ்யா இதில் தனக்கு தொடர்பே இல்லை என்கிற வகையில் நடந்து கொண்டு வருகிறது.

இந்நிலையில், அங்கு ஒரு அரசு கட்டடத்துக்கு தீ வைக்கப்பட்டது. இந்த தீயினால் பெரும் புகை எழுந்தது. இதில் புகையில் சிக்கியும், தீயிலிருந்து உயிர்பிழைக்கும் ஆவலில் ஜன்னலில் இருந்து குதித்தும் பலர் உயிரிழந்தனர். மொத்தம் 31 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. இதுபற்றி உக்ரைன் உள்துறை அமைச்சகம் கூறுகையில், இந்த தீயில் சிக்கி குறைந்தது 31 பேர் உயிரிழந்து விட்டனர். அந்தக்கட்டிடம் தீப்பற்றி எரிந்த போது ரஷ்ய ஆதரவு கிளர்ச்சி யாளர்கள் அதனுள் இருந்தனர் என்றார்.

ரஷ்ய ஆதரவாளர்கள் தங்கள் மக்களை கேடயமாகப் பயன்படுத்துவதாக உக்ரைன் குற்றம் சாட்டுகிறது. ஆனால் ஸ்லாவியான்ஸ்க் நகரில் உக்ரைன் படையினர் தண்டிக்கும் விதமாக அப்பாவி மக்கள் மீது வான்வழி தாக்குதல் நடத்தி உள்ளதாகவும், இது சர்வதேச அமைதி திட்டத்தை சீர்குலைப்பதாக அமைந்துள்ளதாகவும் கூறி ரஷ்யா தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

# ராகுல் மீது பா.ஜ.க.புகார்

(புதுடில்லி)

பா.ஜ. பொதுச் செயலர் அனந்த குமார் தலைமையில் அந்த கட்சி நிர்வாகிகள் தலைமை தேர்தல் கமிஷனர் சம்பத்திடம் ராகுல் குறித்து புகார் அளித்துள்ளனர். அதில் "காங்கிரஸ் துணை தலைவர் ராகுல் இமாச்சல பிரதேசத்தில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசுகையில் மோடி பிரதமரானால் ஏராளமானோர் கொல்லப்படுவர் என கூறியுள்ளார். அரசியல் ஆதாயம் அடைவதற்காக மோடி மீது வீண் பழி சுமத்திய ராகுல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

# செவ்வாய்க்குச் செல்ல புதிய ஆடை அறிமுகம்



அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா, விண்வெளி வீரர்கள் வருங்காலத்தில் செவ்வாய் கிரக ஆராய்ச்சிக்கு அணிந்து செல்லும் உடையினை அறிமுகப்படுத்தியுள்ளது.

விண்வெளி பயணத்திற்காக நாசா 3 வடிவங்களை உருவாக்கியது. அது குறித்த அறிவிப்பினை கடந்த புதன் கிழமை நாசா வெளியிட்டது. பின் அது பொது வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.


அதில் இசெட்-2 என்ற விண்வெளி உடை 62 வாக்குகளை பெற்று தெரிவு செய்யப்பட்டது.

இந்த உடை தொழில் நுட்பம் நிறைந்ததாக, வருங்காலத்தில் நாள் தோறும் அணியும் உடை போன்று காட்சி தருவதாக வடிவம் கொண்டது. இந்த உடையின் பயன்பாடு, விண்வெளியில் நடக்கும்போது வீரர்கள் ஒருவருக்கொருவர் தங்களை அடையாளம் கண்டு கொள்வதற்கு உதவும் வகையில் இருக்கும்.

இது கடந்த 2012ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இசெட்-1 ரக விண்வெளி ஆடையின் தொழில் நுட்பத்தை அடிப்படையாக கொண்டிருக்கும். மென்மையான தலைப் பகுதி கொண்ட இசெட்-1இல் இருப்பதை போன்று இல்லாமல், நீண்ட நாட்கள் உழைக்கும் வகையிலான தலை பகுதியும், கீழ் பகுதியில் உராய்வால் ஏற்படும் காயங்களை தடுக்கும் வகையிலும் இசெட்-2 ஆடை வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதி நவீன வடிவிலான, தோள் மற்றும் இடுப்பு இணைப்பு பகுதிகளின் இயங்கு தன்மையை அதிகரிக்கும் வகையில், உருளும் தன்மை உடைய சிறிய இரும்பு குண்டுகள் கொண்டு இவை உருவாக்கப்பட்டுள்ளன.

# சவுதியை தாக்கிய மர்ம நோய் அமெரிக்காவிலும் பரவியது



(வொஷிங்டன்)


சவுதி அரேபியா உள்ளிட்ட அரேபிய நாடுகளில் மெர்ஸ் என்னும் உயிர்கொல்லி நோய் பரவி வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சார்ஸ் என்னும் நோய் உலகம் முழுவதும் பரவி பல ஆயிரக்கணக்கானோரை பலிகொண்டது.

அதே போன்று மெர்ஸ் நோயும் ஆபத்து நிறைந்ததாக கருதப்படுகிறது. இந்த நோய்க்கு இதுவரை 70இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். நோயை கட்டுப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை.

இந்த நோய் தற்போது அமெரிக்காவிலும் பரவியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் சவுதி அரேபியாவுக்கு சென்றுவிட்டு திரும்பிய ஒருவரை நோய் தாக்கியுள்ளது. அவரை இண்டியானாவில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

நோய் தாக்குதலுக்குள்ளானவர் யார்? என்ற விவரங்கள் எதுவும் வெளியிட வில்லை. ஆனாலும் அவருடைய உடல்நிலை கட்டுக்குள் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் வவுனியாவில் முதலாவது விதை வங்கி



(வவுனியா)

வவுனியா செட்டிகுளத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையின் கீழ் இலங்கையின் முதல்வது விதை வங்கி கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

உலர் வலய விவசாய மீட்சியை மேம்படுத்தும் திட்டம் எனும் கருப்பொருளில் இச் சமுதாய விதை வங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சேதனப் பசளைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நச்சுத்தன்மையற்ற சிறந்த விதைகளை சேமித்து வைத்து மக்களின் தேவைக்கு ஏற்ற வகையில் விநியோகிக்கும் முறைமையிலேயே இலங்கையின் முதலாவது விதை வங்கியாக இது வவுனியாவில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் செட்டிகுளம் பிரதேச செயலர் ந.கமலதாஸ், பிரிகேடியர் ராஜ் ரணவக்க உட்பட விவசாயிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோத மரப்பட்டறை நடாத்திய இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிப்பு கிராமத்தில் சட்டவிரோதமாக மரப்பட்டறையை நடத்தி வந்ததாகக் கூறப்படும் இருவரை சந்தேகத்தின் பேரில் கடந்த சனிக்கிழமை கைதுசெய்துள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கிராமத்தில் உள்ள வீடொன்றிலேயே இந்த சட்டவிரோத மரப்பட்டறை இயங்கி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த பகுதியில் உள்ள வீட்டை சோதனையிட்ட போது தேக்கு மரக்குற்றிகள் சிலவற்றை கைப்பற்றியுள்ளனர்.

மேலும் அங்கு பணிபுரிந்த இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

## கொடிகாமம்...

உதயகுமாரன் குமாரன் (வயது - 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மேற்படி இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஒரே குடும்பத்தைச்...

தனஞ்சயன் தருமிகா (வயது - 25), ரி.யசோதரன் (வயது - [illegible]) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று நள்ளிரவு வேளை வாள் உட்பட கூரிய ஆயுதங்களுடன் வீட்டிற்குள் புகுந்த கொலையாளிகள் வீட்டினுள் நித்திரையிலிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக வெட்டியபின் ஆட்டோ ஒன்றில் தப்பிச்சென்றுள்ளனர்.

இதன்போது நவக்கிரிப் பகுதியில் குறித்த ஆட்டோ எரிபொருள் முடிவடைந்து இடைவழியில் நின்றுள்ளது. அதேவேளை அவ்வழியே ரோந்துசென்ற இராணுவத்தினர் இரத்தக்கறைகளுடன் நின்ற சந்தேகநபர்களை கைது செய்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபர்களை கோப்பாய் பொலிஸார் அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அத்துடன் இவர்கள் தப்பிச்செல்ல பயன்படுத்திய ஆட்டோவும் பெருமளவு இரத்தக்கறைகளுடன் நவக்கிரிப் பகுதியிலிருந்து அச்சுவேலிப் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், கொலைக்கு பயன்படுத்தியதெனத் தெரிவிக்கப்படும் வாளும் அச்சுவேலிப் பகுதியிலுள்ள வாழைத்தோட்டத்திலிருந்து நேற்று மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தர்மிகாவின் கணவரே இக்கொலைகளுக்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதான சந்தேகநபரான தனஞ்சயன் அவருக்கு உதவியதாகத் தெரிவிக்கப்படும் இருபாலையைச் சேர்ந்த சின்ராசு ஆகிய இருவரையும் கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த கொலைச்சம்பவம் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினை காரணமாகவே இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலங்கள் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

உயிரிழந்த மதுசா அண்மையிலேயே திருமணமானவர் என்பதுடன் அவரது கணவரான யசோதரன் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தால் அச்சுவேலிப் பகுதியில் மக்களிடையே பெரும் அதிர்ச்சியும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. (இ,03,116,25)

## கஞ்சாவுடன்...

இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## உரும்பிராயில்...

காயமடைந்த இளைஞரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் நேற்று கோப்பாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (இ)

## இரண்டு...

நல்லூரைச் சேர்ந்த தனுஷ்ராஜ் (வயது - 19), நிரோஜன் (வயது - 20) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இதில் தாவடிச் சந்திப்பகுதியில் சைக்கிளை உருட்டிச் சென்ற ஜெ.ஜெகதீஸ்வரன் (வயது - 37) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், மோட்டார் சைக்கிளில் வந்து மோதியதாகக் கூறப்படும் சரசாலை வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த இ. ஸ்ரீராம் (வயது - 23) என்ற இருவருமே படுகாயமடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

## முதலமைச்சர்...

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த முதலமைச்சர், "கோல்டர்" பரிசோதனை என்னும் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ,25)

## இஸ்லாமிய...

அனுமதிக்கப்படமாட்டாது. இவ்வாறு எவராவது பயிற்சி எடுப்பது தொடர்பாக இராணுவத்தினர் கண்டறியவில்லை.

இராணுவத்தினர் காட்டுப் பகுதிகளில் அடிக்கடி தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்போது எந்தவொரு பயிற்சி முகாமும் இருப்பதற்கான தடயங்கள் இல்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொக்குவில் இந்துவில் பண்டிதர் பரீட்சை

(யாழ். நிருபர்)

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் நடத்தும் பாலபண்டித, பண்டிதர் பரீட்சைகள் இம்மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்த பரீட்சார்த்திகள் அனைவருக்கும் பரீட்சை அனுமதி அட்டைகள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைக் குழுவின் செயலாளர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் தெரிவித்துள்ளார்.

2015, 2016 ஆம் ஆண்டுக்கான பால பண்டிதர், பண்டிதர் புதிய வகுப்புக்கள் மே மாத இறுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. 0776913333 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (10)

# சிறுதானியச் செய்கையில் ஆர்வத்துடன் விவசாயிகள்

தற்போது பெய்துவரும் மழையைத் தொடர்ந்து விவசாயிகள் சிறுதானியச் செய்கையை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டி வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மழை பொய்த்தமையால் காலபோக அறுவடையைத் தொடர்ந்து விதைக்கவேண்டிய சிறுதானியங்கள் எதுவும் விதைக்காது விவசாயிகள் பின்னடித்த நிலையில் இருந்தனர்.

எனினும் தற்போது 2 வார காலமாக பலமுறை மழை பொழிந்த நிலையில் சிறுதானியச் செய்கைக்கான பூர்வாங்க வேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

உழுந்து, பயறு, கௌபி, சணல் போன்ற சிறுதானியங்களை பயிரிடத் தொடங்கியுள்ளனர்.

தென்மராட்சியின் விளைவேலி, அம்பலந்துறை, கிராம்புவில், வேம்பிராய், சரசாலை, பெருங்குளம் பகுதி வயல் வெளிகளில் இவ்வாறு சிறுதானியங்கள் விதைக்கப்படுவதை காணக்கூடியதாக இருக்கின்றது. (இ)

## புலம்பெயர்...

இலங்கை அரசாங்கத்தின் தடைப் பட்டியலில் இடம்பெறாத, அமெரிக்காவில் செயற்படும் தமிழ் அரசியல் நடவடிக்கைப் பேரவை என்ற அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

இதுதொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில்,

உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஷ்வால் சில இலங்கை சிவில் சமூகப் பிரதிநிதிகளை இராஜாங்கத் திணைக்களத்தில் சந்தித்திருந்தார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்தும், இலங்கை மக்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்று கலந்துரையாடுவதற்காகவும் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அரசாங்க மற்றும் தனியார் துறையினருடனான சந்திப்புக்கு மேலதிகமாக இலங்கையின் சிவில் சமூகம் மற்றும் புலம்பெயர்ந்தோருடன் நாம் பரந்துபட்டளவில் கலந்துரையாடுவது வழக்கம்.

அந்தவகையில் இது அண்மையில் நடந்த கலந்துரையாடல் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் இயங்கும் தமிழ் அரசியல் நடவடிக்கைப் பேரவை தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல. எனினும், லண்டனைத் தளமாகக் கொண்ட உலகத் தமிழர் பேரவை தடை செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்துக்கு ஆதரவாக உலகத் தமிழர் பேரவை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் இணைந்து தமிழ் அரசியல் நடவடிக்கைப் பேரவையும் உறுப்பு நாடுகள் மத்தியில் பரப்புரைகளை மேற்கொண்டிருந்தது.

அத்துடன் தமிழ் அரசியல் நடவடிக்கைப் பேரவையின் முன்னாள் தலைவர் எலியாஸ் ஜோசப் ஜெயராஜாவினது பெயரும் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட தடைசெய்யப்பட்ட 424 தனிநபர்களின் பட்டியலில் உள்ளது.

அவரும் நிஷா பிஷ்வாலுடனான சந்திப்பில் பங்கேற்றுள்ளார்.

சுமார் ஒரு மணிநேரம் நடந்த இந்தச் சந்திப்பில் கடந்த மார்ச் மாதம் நடந்த ஐ.நா மனிதஉரிமைகள் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடுத்து எழுந்துள்ள விவகாரங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜெனிவா கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்க அதிகாரிகள் சிலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

இதில் பங்கேற்ற சிலர் இலங்கை தலைமை தாங்கும் கொமன்வெல்த் அமைப்புக்கான நிதியுதவியை கனடா நிறுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டி அமெரிக்கா என்ன செய்யத் திட்டமிட்டுள்ளது என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இலங்கை அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் மீது தடைகளை விதிக்க வேண்டும் என்றும் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கோரியுள்ளன.

கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைத்த விவகாரத்தை அடுத்து, குறிப்பிட்ட ரஷ்ய அதிகாரிகளுக்கு அமெரிக்கா விதித்துள்ள தடைகளைப் போன்று இலங்கை மீதும் தடை விதிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் முடிவு இலங்கை விவகாரத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு பொறுத்திருந்து பார்க்கலாம் என்று பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற 6 அமைப்புகளின் 15 பிரதிநிதிகளுக்கு, தமது இலங்கைப் பயணம் குறித்து நிஷா பிஷ்வால் விபரித்துக் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்படாமை குறித்தும் அவர் ஏமாற்றம் வெளியிட்டுள்ளார் என்றும் சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

# இந்தியப் பிரதமராக மோடி இலங்கைக்கு பேராபத்து

## எச்சரிக்கிறார் அமைச்சர் சம்பிக்க ,

(கொழும்பு)

நரேந்திரமோடியின் பாரதிய ஜனதாக் கட்சி இந்திய தேர்தல்களில் வெற்றி பெறுவது உறுதியென ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நரேந்திரமோடி வெற்றி பெற்று பிரதமராக பதவியேற்றால் இலங்கைக்கு நன்மையாக அமையுமா என்று ஊடகவியலாளர் ஒருவரினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க இவ்வாறு கூறினார்.

ஒரு சில சிங்கள சக்திகள் ஹிந்துத்வ அடிப்படையிலான நரேந்திர மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி வெற்றி பெறுவது இலங்கைக்கு நன்மை தரும் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும் நரேந்திரமோடி தமிழ் நாட்டில் புலி ஆதரவாளர்களான வை.கோ மற்றும் நெடுமாறன் போன்றோருடன் கூட்டணி அமைத்துள்ளார். பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தான் ரணில் விக்ரமசிங்க புலிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்து வடக்கை புலிகளிடம் ஒப்படைத்தார் என்பதையும் மறந்துவிடக் கூடாது. இதனடிப்படையில் பார்க்கும்போது நரேந்திரமோடி அதிகாரத்தில் அமர்வது இலங்கைக்கு நன்மை பயக்கும் என்று எண்ண முடியவில்லை.

இந்தியத் தேசியவாதத்தை இன்னும் விரிவு படுத்தும் நோக்கம் கொண்டதே பாரதிய ஜனதாக் கட்சி. ஆயினும், குஜராத்தை பின்னணியாகக் கொண்ட மோடி ஆதரவு வியாபார சமூகத்துக்கு இலங்கை அவசியம். வேறு எதற்கும் அல்ல, சுரண்டுவதற்குத்தான். தமிழ் தீவிரவாதம், இந்திய விரிவு கொள்கை மற்றும் இந்திய வியாபார சமூகத்தின் மனநிலை ஆகியவற்றை நன்றாக ஆராய்ந்த பின் அதனடிப்படையிலேயே இலங்கை அரசு நரேந்திரமோடியுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## 7 ஆவது ஐ.பி.எல்

**ஹைதராபாத் 155/6**

தவான் - 37

வோனர் - 61

ஸ்ராக், ஆரோன் தலா 2 விக்கெட்டுக்கள்.

**பெங்களூர் றோயல் 158/6 (19.5)**

கைல் - 27

டிவில்லியஸ் - 89

புவனேஸ்வரகுமார் 2 விக்கெட்டுக்கள், சர்மா 3 விக்கெட்டுக்கள்

பெங்களூர் றோயல் 4 விக்கெட்டுக்களால் வெற்றி

ஆட்ட நாயகன் - டி.வில்லியர்ஸ்.

## காலாவதியான அரசியல்வாதிகளை ஒதுங்க கோருகிறார் சஜித்

(கொழும்பு)

காலாவதியான பொருட்களாக மாறியுள்ள அரசியல்வாதிகள் தாமதிக்காது அரசியலில் இருந்து விலக தயாராக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்டுவன பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மக்களின் விருப்பம் என்ற மக்களின் ஆணையிலேயே அரசியல் என்பது தங்கியுள்ளது. சில காலங்களில் அரசியலில் ஈடுபடும் நபருக்கு தடுக்க முடியாத, அதிகளவான மக்களின் ஆதரவு கிடைத்து பாரிய சக்தியாக மாறும். மக்கள் ஆணையும் மக்களின் ஆசியையும் ஒதுக்கி விட்டு அரசியலில் ஈடுபட முடியாது.

அரசியலில் காலாவதியான பொருட்களாக மாறியுள்ள அரசியல்வாதிகள் தாமதமின்றி அரசியல் இருந்து விலகத் தயாராக வேண்டும். இதன் காரணமாகவே மக்களின் நாடித் துடிப்பை அறிந்து அரசியல்வாதிகளான நாம் செயற்பட வேண்டும்.

மக்களின் விருப்பு வெறுப்புகளை புரிந்து கொள்ளும் போது மக்கள் எம்மை அன்புடன் சூழ்ந்து கொள்வர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குத்திக் கொல்லப்பட்டார் பிரதியமைச்சரின் செயலர்

சிறு ஏற்றுமதி அபிவிருத்தி பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவின் செயலாளர்களில் ஒருவரான விபுல விக்ரமரத்ன என்பவர் இனந் தெரியாத நபர்களினால் கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவை பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றில் எரிபொருள் நிரப்பச் சென்றிருந்த போது முச்சக்கர வண்டியில் வந்த சிலர் 5 ஆயிரம் ரூபாவை மாற்றித் தருமாறு கோரியுள்ளனர்.

பணத்தை மாற்றிக் கொடுக்க செயலாளர் மறுத்ததை அடுத்து முச்சக்கர வண்டியில் வந்தவர்களில் ஒருவர் கூரிய ஆயுதம் ஒன்றை எடுத்து தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த செயலாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

## இந்தியப் பிரஜை கைது

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிமுருகன் பகுதியில் ஆடை வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்தியப்பிரஜையொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராமநாதபுரத்தினைச் சேர்ந்த சின்னவேல் குமரேசன் (வயது - 36) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

## தடைசெய்தோரின் தகவல்கள் வெளிநாடுகளுடன் பகிரப்படும்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பான தகவல்கள் வெளிநாடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார். தடை செய்யப்பட்ட பதினாறு புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் 424 தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான தகவல்களை வெளிநாடுகளுடன் பகிர்ந்துகொள்ள திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், விரிவான விசாரணைகளின் பின்னர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள தனிப்பட்ட நபர்கள் அல்லது அமைப்புக்கள் குற்றமற்றவை என கண்டுபிடிக்கப்பட்டால் பட்டியலிலிருந்து நீக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். விசாரணைகளின் பின்னர் முழு அளவிலான ஆதாரங்களும் இணைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 3836 பில்லியன் டொலர் கடனை 4 வருடத்தில் வழங்கியது சீனா

(கொழும்பு)

கடந்த நான்கு ஆண்டுகளில் சீனாவிடம் இருந்து இலங்கை பெற்றுள்ள சலுகைக்கடன்கள், உதவி, மானியங்களின் மொத்த மதிப்பு 3836 பில்லியன் டொலரைத் தாண்டியுள்ளது.

அரசாங்கத்தை மேற்கோள் காட்டி சண்டே ரைம்ஸ் இது தொடர்பான சில தகவல்களை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட கடன்கள் அடுத்த 14 தொடக்கம் 20 ஆண்டுகளுக்குள், 1.53 சதவீதம் தொடக்கம், 6.5 சதவீதம் வரையான வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டியதாகும்.

வீதி நிர்மாணம், துறைமுக கட்டுமானம், மின்உற்பத்தி, நீர் விநியோகம், நீர்ப்பாசனம், மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களில் சீனா முதலிட்டுள்ளது.

இலங்கையில் மொத்தம் 42 திட்டங்களில் சீனா முதலீடு செய்துள்ளது.

இந்த உதவி நிதி வழங்கலில் மட்டுமன்றி, 1700 சீனத் தொழிலாளர்களுக்கும் இலங்கையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலான கடன் திட்டங்களில், சீனர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் தொடங்கி, இயந்திரங்கள் வரை அனைத்துமே சீனாவில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

அத்துடன் சீன ஒப்பந்த நிறுவனங்களே திட்டங்களை நிறைவேற்றி, முகாமைத்துவம் செய்கின்றன. சில சந்தர்ப்பங்களில், துணை ஒப்பந்தகாரர்கள் கூட சீனாவில் இருந்தே வரவழைக்கப்பட்டுள்ளனர். பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களை முன்னெடுக்கும் எந்தவொரு நாடும் குறைந்த வட்டி மற்றும், திருப்பி செலுத்த நீண்டகாலத் தவணை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் பலதரப்பு கடன் வழங்குனர் மூலம் இலகுகடன்களை பெறவே விரும்பும்.

சீனாவின் வட்டி வீதங்கள், இந்த முகவர் அமைப்புகளின் வட்டிவீதத்தை விட அதிகமானது. ஆனால், சராசரி வணிக கடன் வட்டி வீதத்தை விடவும் குறைவானது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாலைதீவு பெண், 6 வயது மகளை காணவில்லையென முறையீடு


(கொழும்பு)

கண்டியில் கடந்த மூன்று வருடங்களாக வாழ்ந்துவந்த பெண்ணும், அவரது 6 வயது நிரம்பிய மகளையும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணவில்லையென உறவினர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

ரசீதா அகமட் என்பவரும், அவரது மகளுமே காணாமற் போனதாக உறவினர்கள் தெரிவித்தனர். கணவருடன் வாழ்ந்த இவர் அவருடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை மாலை மகளுடன் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். கணவன், மனைவிக்கிடையே எப்பொழுதும் பிரச்சினையாகவே இருந்தது. எனது சகோதரி கணவரிடமிருந்து விவாகரத்துப்பெற முயற்சித்தார். எனினும் அதற்கு அவர் சம்மதிக்கவில்லை.

இந்த நிலையில் வீட்டைவிட்டு வெளியேறிய ரசீதா எவ்வித தொடர்பையும் ஏற்படுத்தவில்லை. இது தொடர்பாக மாலைதீவு உயர்ஸ்தானிகராலயம் மற்றும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். எனினும் பொலிஸாரே, மாலைதீவு வெளிவிவகார அமைச்சோ இது தொடர்பாக எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

## மரண அறிவித்தல்



### நடராஜா மனோன்மணி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், காளி கோவிலடி பத்மமேனி அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கொண்ட நடராஜா மனோன்மணி (30.04.2014) புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலம் சென்ற கணபதிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ் சென்ற செல்லப்பா முத்துப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ் சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசையா, தணிகாசலம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற இராமச்சந்திரன் மற்றும் காளிதர்சினி, மனோரஞ்சிதம் கமலகுமாரி (ஜேர்மனி), சிவகுமார் (சுவிஸ்) காலஞ்சென்ற ரவிக்குமார் மற்றும் பாலகுமார் (சவுதி அரேபியா), தனரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.05.2014 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தீரத்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளி கோயிலடி**
**பத்தமேனி**
**அச்சுவேலி**

**தகவல்: தங்கவேல் குடும்பம்.**

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.